
# உறவு



- நீர்வைபொன்னையன்

இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம்

# உறவு

(சிறுகதைகள்)

நீர்வை பொன்னையன்

வெளியீடு

இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம்

| | | |
|---|---|---|
| நூல் | : | **உறவு** |
| வகை | : | சிறுகதைகள் |
| ஆசிரியர் | : | நீர்வை பொன்னையன் |
| வெளியீடு, விற்பனை | : | பூபாலசிங்கம் பதிப்பகம்,<br>202, செட்டியார் தெரு,<br>கொழும்பு - 11 |
| பதிப்பு | : | இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம் |
| வெளியீட்டுத் திகதி | : | |
| அட்டைப்பட ஓவியம் | : | சுரேந்திரன் |
| பக்கங்கள் | : | 113 |
| அச்சுப் பதிப்பு | : | RST Enterprises (Pvt) Ltd.,<br>114, W.A. Silva Mawatha,<br>Colombo 6.<br>011 2501715, 0777 878772 |
| விலை | : | ரூபா 275.00 |
| **ISBN** | : | **978-955-1810-23-8** |

## சமர்ப்பணம்

பேரினவாத யுத்தத்தின்போது
படுகொலை செய்யப்பட்ட
பல இலட்சக்கணக்கான
அப்பாவி தமிழ், சிங்கள, முஸ்லிம்
மக்களுக்கு.

**உறவு** எனது பத்தாவது சிறுகதைத் தொகுப்பு. இதில் பதினொரு சிறுகதைகள்.

1957 இல் எனது முதலாவது சிறுகதை **பாசம்**, ஈழநாடு வார வெளியீட்டில் பிரசுரமானது.

1960 இல் எனது முதல் சிறுகதைத் தொகுதி **"மேடும் பள்ளமும்"** மக்கள் பிரசுராலயத்தினால் வெளியிடப்பட்டது. இதில் பதினைந்து சிறு கதைகள்.

1957 லிருந்து 2014 ஆம் ஆண்டுவரை பாசத்திலிருந்து **உறவு** வரை 107 சிறுகதைகளை மாத்திரம் தான் என்னால் ஆக்க முடிந்தது.

எனது ஆக்கங்கள் சமூக, அரசியல் மாற்றத்துக் கான மக்கள் போராட்டத்தை அடிநாதமாகக் கொண் டவை.

ஒரு சிலவற்றைத் தவிர மற்ற எல்லாப் படைப்புக் களும் வெகுஜனப் பத்திரிகைகளில் தான் பிரசுரமானவை. வெகுஜனப் பத்திரிகைகளின் வாசகர் வட்டம் விசால மானது.

இலக்கிய சஞ்சிகைகளின் வாசகர் வட்டம் குறுகியது. காரணம் இவை தனிநபர் அல்லது சிறுகுழு சாந்தவை.

கலை இலக்கியத்தை மக்கள் மயப்படுத்துவது, மக்களை இலக்கிய மயப்படுத்துவதுதான் முற்போக்கு இலக்கியத்தின் இலக்கு.

கலை இலக்கியத்தின் மூலம் சமூக அரசியல் மாற்றத்திற்கான போராட்டத்தை வலுப்படுத்துவதுதான் முற்போக்கு இலக்கியவாதிகளாகிய எமது லட்சிய வேட்கை.

**நீர்வை பொன்னையன்**

12.12.2014

# பொருளடக்கம்


| | |
|---|---|
| விடிவு | 09 |
| மனச்சரிவு | 18 |
| பொட்டு | 25 |
| வனவாசம் | 33 |
| முறிவு | 48 |
| அர்ப்பணம் | 57 |
| அதிர்ச்சி | 64 |
| சிதைவு | 75 |
| தேய்நிலா | 81 |
| மீட்சி | 93 |
| உறவு | 103 |

# விடிவு

திருமணம் முடிந்தது.

புதுமணத் தம்பதிகள் மாப்பிள்ளையின் வீட்டை அண மித்துக் கொண்டிருக்கின்றனர்.

திடீர்த் திருமணம்.

மணப்பெண்ணின் உற்றார் உறவினர் எவருமில்லை.

அயலவர்கள் தானு மில்லை. மாப்பிள்ளையின் அக்கா மாத்திரம் தான் பிரசன்னம். அவனுடைய உறவினர்களோ நண்பர்களோ சக தொழிலாளர் களோ எவருமேயில்லை.

ஆடம்பரத் திருமணக் கொண்டாட்டம் நடத்துவதற்கு பெண் வீட்டாருக்கு வசதியில்லை.

பணம் செலவு செய்து இடாம்பீகமாகத் திருமணம் கொண் டாடுவதற்கு மாப்பிள்ளைக்கு வசதியுமில்லை. நாட்டமு மில்லை.

மாப்பிள்ளையின் சகோதரி மாத்திரம்தான் பெண் பார்க்க அவனுடன் வந்தாள். கல்யாண நாளன்றும் அவளே அவனுடனிருந்தாள்.

பெண் பார்த்த அன்று, மணப்பெண் பக்கத்தில் அவளது சகோதரி.

கடைக்குட்டி பெண், பார்க்க வந்தவர்களுக்கு சிற்றுண்டி, தேநீர் வழங்கி உபசரிப்பு.

மணப்பெண்ணின் தாயாருக்கு என்ன நடக்குமோ எது நடக்குமோ என்ற தவிப்பு.

இரு பெண்களும் சாவகாசமாகத்தானிருக்கின்றனர். அவர்கள் சாதாரண உடையில்.

முன்பு நான்கு, ஐந்து தடவைகள் மணப்பெண் பட்டுப்புடைவை உடுத்தி, பூமாலை சூட்டி, பொட்டு வைத்து அலங்காரத்துடன் நாணிக்கோணி நின்றும் எதுவித பலனுமில்லை. ஏமாற்றமும் விரக்தியும் தான்.

அவர்களுக்கு சலித்து விட்டது. இன்று அவர்கள் எதுவித அலங்காரமுமின்றி சாதாரண உடையிலிருக்கின்றார்கள்.

பக்கத்திலிருப்பவள்தான் மணப் பெண் என்று அவர்களின் தாயார் அறிமுகப்படுத்துகின்றாள்.

பெண் பார்க்க வந்தவனும் சாதாரண உடையில்.

எதுவித அலங்காரமுமின்றி இருக்கும்போதுதான் உண்மை யான அழகைப் பார்க்க முடியும் என்ற எண்ணம் அவனுக்கு.

அருகருகாக இருந்த சகோதரிகளில் இரண்டாவதாக இருந்த பெண்ணை அவனுக்குப் பிடித்துவிட்டது.

பார்த்த உடனேயே அவனுக்கு அவளில் ஒருவித ஈர்ப்பு.

அவளது விழிகளில் சோகத்திரை விரிப்பு.

இளமை அலையடித்துக் கொண்டிருக்கின்றது அவளில். அவளில் யௌவனத்துக்குரிய கம்பீரம்.

அவளது யௌவனம் அவனைக் கிறங்க வைக்கின்றது.

அவனை அறியாமலேயே தன்வசப்படுத்திவிட்டன அவளது விழிகள்

அவளைக் கலியாணம் கட்ட அவனுக்கு பூரண சம்மதம்.

அவனது ஆண்மைக்குரிய கம்பீரம் ஆகர்ஷிப்பு.

அவனைக் கலியாணம் கட்ட அவளுக்கும் சம்மதம்தான்.

மூன்று நாட்களுக்குள் திருமணம் நடத்த இரு தரப்பினரும் முடிவு.

மூன்றாவது நாள் பிள்ளையார் பூசை செய்து அவளுக்கு அவன் தாலி கட்டுகிறான்.

மாப்பிள்ளைக்கு அவள் சோறு குடுக்கின்றாள்.

கலியாணம் முடிந்த கையோடு அவளை தன் வீட்டுக்கு கூட்டிச் செல்கின்றான்.

அவளுடன் செல்வதற்கு அவளது தாயையும் இரு சகோதரி களையும்விட வேறு யார் இருக்கிறார்கள்?

தாயார் கல்யாணப் பெண்ணுடன் செல்ல முடியாது. காரணம் அவள் தாரமிழுந்தவள்.

அவளுடைய தங்கைகள் தாயாரை தனிய விட்டுவிட்டு அக்காவுடன் செல்ல முடியாத நிலை.

அவளது தந்தை இரண்டு வருடங்களுக்கு முன் மாரடைப்பால் இறந்துவிட்டார்.

மூன்று கல்யாண வயசுப் பெண்களையும் அருமை மனைவியையும் தவிக்க விட்டுவிட்டு அவர் திடீரென மறைந்து விட்டார். அவரது மரணம் அக்குடும்பத்தை நிர்க்கதிக் குள்ளாக்கிவிட்டது.

தந்தை இருக்கும் பொழுது மூன்று பெண்களும் செல்லமாகத் தான் வாழ்ந்தார்கள். அவர்கள் நன்றாகப் படித்தார்கள். கல்விச் செல்வம் எல்லாவற்றிலும் பார்க்க மேலானது என்ற எண்ணம் தந்தைக்கு.

தன் பிள்ளைகள் மூவரையும் மேற்படிப்புக்கு படிக்க வைக்க வேண்டும் என்ற பேரவா அவருக்கு. மூன்று பெண்களும் படிப்பில் பெரும் சுட்டிகள்.

மூத்த இருவரும் இரணைப் பிள்ளைகள். முகச் சாயலிலும் உடல்வாகிலும் இருவரும் ஒரே மாதிரி. யார் மூத்தது, யார் இளையது என்று எவராலும் இலகுவில் கண்டுபிடிக்க முடியாது.

ஐந்தாம் வகுப்பிலிருந்து இருவரும் கடும் போட்டி.

அவர்கள் இருவரும் ஏ. எல். பரீட்சையில் நான்கு பாடங்களிலும் ‘ஏ’ சித்தி.

தந்தைக்குப் பெருமிதம். தன் பிள்ளைகள் இருவரையும் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி படிப்பிக்கத் திட்டமிடுகிறார்.

அவரது திடீர் மரணம் அவரின் குடும்பத்தை நட்டாற்றிற் குள்ளாக்கி விட்டது. வீட்டைத் தவிர அவர்களுக்கு வேறு சொத்தோ வருமானமோ இல்லை.

மூன்று பெண் பிள்ளைகளும் கல்விக்குத் தலைமுழுக்கு.

மூத்த இரு பெண்களுக்கும் தையல் வேலை கைவந்த கலை.

ஊரில் தையல் வேலைக்கு அவர்கள் இருவரும் பிரசித்தம்.

கடைக்குட்டி விளையாட்டில் வீராங்கனை.

அவர்களிடம் இரண்டு தையல் மிசின்கள், தையல் வேலையில் கிடைக்கும் வருமானத்தில் அவர்களது வாழ்க்கை ஏனோதானோ என்று நகர்ந்து கொண்டிருக்கின்றது.

மூன்று பெண்களின் வயசும் ஏறிக்கொண்டிருப்பு.

முதற் பெண்ணை கட்டிக்கொடுக்க தாயார் எவ்வளவோ பிரயத்தனம். அவளது முயற்சிகள் அத்தனையும் தோல்வி.

சீதனம் கொடுக்க அவளிடம் சொத்தோ பணமோ எதுவுமில்லை.

முதல் பெண்ணிற்கு அழகுண்டு. கல்வி அறிவுண்டு. அதே வேளை அவளுக்கு ஒரு குறைபாடுமுண்டு. அக்குறைபாடுதான் அவளது திருமணத்திற்கு முட்டுக்கட்டை.

கல்யாணத் தரகர்மார் இரண்டு, மூன்று பேர் கடும் முயற்சி. அவர்களது முயற்சிகள் அத்தனையும் தோல்வி.

கல்யாணத் தரகன் பாஞ்சான் களத்தில் குதிக்கிறான். இதை அவன் சவாலாய் எடுக்கின்றான்.

தரகன் பாஞ்சான் ஊர்விட்டு ஊர்போய் மாப்பிள்ளை தேடல்.

பெண்ணுடைய ஊரிலிருந்து எட்டு மைல்களுக்கப்பால் ஒரு கிராமம்.

அக்கிராமத்தில் சுந்தரம் என்றொரு பஸ் தொழிலாளி.

பாஞ்சானின் சகோதரன் சுந்தரத்தை அவனுக்கு அறிமுகப் படுத்துகின்றான்.

பஸ் தொழிலாளி சூதுவாதற்றவன். தரகன் பாஞ்சான் கல்யாணப் பெண் சுகந்தியின் குடும்பத்தின் பொருளாதார நிலை,

அவளது அழகு, படிப்பு எல்லாவற்றையும் விலாவாரியாகக் கூறுகின்றான். அப்பெண்ணின் அழகைப் பற்றி விஸ்தாரமாகக் கூறியதுடன் பெண்ணுடைய ஒரு குறைபாட்டைப் பற்றியும் பட்டும் படாமலும் சொல்கிறான்.

வாழ்ந்து கெட்ட அந்தக் குடும்பத்தை கைகொடுத்து நிமிர்த்தும் வகையில் பெண்ணெடுக்க வருகின்றான் சுந்தரம்.

பாஞ்சானுடைய ஆலோசனைப்படி சுந்தரமும் அவனுடைய சகோதரியும் பெண்பார்க்க வருகின்றனர்.

சுந்தரத்துக்குத் தாய் தந்தை இல்லை. ஒரே ஒரு சகோதரி மாத்திரம்தான்.

சகோதரி மணமாகி அயல் கிராமத்தில் வசிக்கின்றாள்.

சகோதரியின் கணவன் மின்சார இலாகாவில் சிற்றூழியன். இரு வருடங்களுக்கு முன் மின்தாக்கி விபத்தில் மரணம். பிள்ளை குட்டியில்லை.

தன் கணவனின் வயோதிபத்தாய் தந்தையுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறாள்.

சுந்தரம் ஒரு தொழிற்சங்கவாதி.

இடதுசாரியும் கூட.

சக தொழிலாளர்கள் மீதும் பஸ் பிரயாணிகள் மீதும், அவனுக்கு அளவற்ற அக்கறை. அத்துடன் அவனுக்கு அளவு கடந்த மனித நேயம்.

அடித்தள உழைக்கும் மக்களது துன்ப துயரங்களையும் அவர்களிடையே மண்டிக்கிடக்கின்ற அறியாமையையும் அவன் நேரடியாகப் பார்க்கின்றான். இவற்றைத் துடைத்தெறிவதற்கான போராட்டப் பாதையில் தனது சக தோழர்களுடன் பயணித்துக் கொண்டிருக்கின்றான்.

தனது கொள்கையில் அவன் கொண்டுள்ள நம்பிக்கை உறுதியானதும் உயிர்ப்புள்ளதாகவுமிருக்கின்றது.

தனது கடமை நேரத்தில் அவன் பல தரப்பட்ட மனிதர்களை யும் பார்க்கிறான்.

சில மனிதர்களின் நற்பண்புகளை அவன் காணும்பொழுது அவர்களை மெச்சுகிறான். சிலரின் சின்னத்தனங்களை அடாவடித் தனங்களைப் பார்க்கும் வேளையில் அவனுக்குக் கொதிப்பு. அவர்களுடன் மோதல். இதனால் அவனுக்கு தொழில் ரீதியான நெருக்கடிகள் ஏற்படுகின்றன. இச்சந்தர்ப்பங்களில் தொழிற் சங்கத்தினதும் பிரயாணிகளினதும் ஆதரவினால் இந்த நெருக்கடிகளிலிருந்து மீண்டு வருகின்றான்.

புதுமணத் தம்பதியினர் சுந்தரத்தின் வீட்டை அண்மிக் கின்றனர். தாலி கட்டி முடிந்து அவனுடைய வீடு வந்து சேரும் வரை அவனும் அவளும் தனியாகக் கதைக்க சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. பார்வைகள், புன்னகைகள் மூலம் அவர்கள் தங்கள் உள்ளங்களின் உணர்வுகளை பரிமாறிக் கொண்டிருக்கின்றனர்.

தாலி கட்டி திருமண விருந்து முடிய இரவு ஒன்பது மணியாகி விட்டது.

திருமணத் தம்பதியினர் அவனுடைய வீடு நோக்கி வந்துகொண்டிருக்கின்றனர்.

இடைவழியில் அவனுடைய அக்கா இறங்குகின்றாள் தன் வீட்டிற்குச் செல்ல.

அவனுடைய வீடு வருகின்றது.

இரவு பத்துமணி.

பௌர்ணமி.

பால் நிலவு.

முற்றத்தில் மதத்துச் சடைத்த வேம்பு.

வேப்பம் துளிர்களைத் தழுவி வருகின்ற மென் தென்றல் தம்பதியரின் உடல்களில் தவழ்ந்து இதமூட்டுகின்றது.

தம்பதிகள் வீட்டிற்குள் செல்கின்றனர்.

அவளது விழிகளில் தாபம்.

உடலெங்கும் புல்லரிப்பு.

அவன் அவளை ஏதோ மெதுவாய்க் கேட்கின்றான்.

அவள் மௌனித்து நிற்கின்றாள்.

அவளது உள்ளத்தில் கொந்தளிப்பு. முகத்தில் பீதி.

மீண்டும் அவன் ஆவலுடன் ஏதோ கேட்கின்றான்.

அவள் ஏதோ கூற முயல்கின்றாள்.

வார்த்தைகள் வெளிவரவில்லை.

மௌனியாய் நிற்கின்றாள்.

விழிகளில் கண்ணீர் அருவி.

ஒரு வார்த்தை தன்னும் வெளிவரவில்லை.

அவளது உதடுகள் துடிக்கின்றன.

அவனுக்குப் புரிந்துவிட்டது.

மூன்று பெண் பிள்ளைகளில் யாரோ ஒருவருக்குக் குறைபாடு உள்ளதென்று கல்யாணத் தரகன் கதைவாக்கில் சொன்னது அவனது ஞாபகச் சுவட்டில் தட்டுப்படுகின்றது.

'நான் ஏமாந்து போனேனா?'

'அல்லது'

'அவை என்னை ஏமாத்திப் போட்டினையோ?'

அவனது உள்ளத்தில் கொந்தளிப்பு.

அவளை கோபாவேசத்துடன் வெறித்துப் பார்க்கிறான்.

நடு வீட்டிற்குள் திகைத்தவளாய் அவள்.

விசுக்கென்று வெளியே வருகின்றான் அவன்.

கொந்தளித்து அலைமோதும் உள்ளத்துடன் வீட்டு வெளிவிறாந்தையில் அவன்.

'இது எப்படி நடந்தது?'

'மூத்த பெண்ணுக்குத்தான் குறையெண்டு அவை சொல்லிச் சினை. கல்யாணத் தரகனும் எனக்கு அப்படித்தான் சொன்னான்'

அவள் ஏனோ தானோவென்று நிற்கின்றாள்.

அவளுக்குப் பக்கத்தில் நின்டவளைக் காட்டி அவளைத் தான் பிடிச்சிருக்கெண்டு நான் சொன்னன்.

'அவையளும் ஒப்புக்கொண்டினை.'

'நான் அவளின்ரை முகத்தைப் பார்க்கிறன்.'

'அவளின்ரை முகத்தில் மலர்ச்சி.'

மூன்று நாட்களுக்குப் பிறகுதான் அவளின்ரை கழுத்திலை தாலி கட்டினன்.

'ஆனா இப்ப?'

'அவையள் வேண்டுமென்டு சூழ்ச்சி செய்யேல்லை. அவை திட்டமிட்டு மூத்த பெண்ணை இரண்டாவதாக நிற்கவைக்கேல்லை'.

'அது ஏதேச்சையாய் நடந்து போச்சு. இப்ப நான் என்ன செய்ய?'

'இவளைத் தாய் வீட்டிலை கொண்டு போய் விட்டாலென்ன?'

'அதெப்படி முடியும்?'

'இல்லை அங்கை கொண்டு போய்விட்டால் இவளின்ரை எதிர்கால வாழ்க்கை?'

'அது மாத்திரமில்லை. தங்கைகள் இரண்டின்ரை எதிர் காலம்?'

'அதுகளின் வாழ்க்கை நாசமாவதா?'

'என்ன செய்யிறதெண்டு எனக்குத் தெரியாமல் கிடக்கு.'

விறாந்தையில் படுக்கிறான்.

தூங்க முடியவில்லை.

வீட்டுக்குள் வெளிச்சம்.

அவளும் அதே நிலைமைதான்.

அவன் புரண்டு புரண்டு படுக்கின்றான்.

அவன் எப்பொழுது தூங்கினான் என்று அவனுக்கே தெரியாது.

திடுக்கிட்டு எழுகின்றான்.

கைக்கடிகாரத்தைப் பார்க்கின்றான்.

ஐந்துமணி.

வேலைக்குச் செல்வதற்காக அவன் ஐந்து மணிக்கு எழுவது வழக்கம்.

சோம்பல் முறிக்கின்றான்.

குளிர்காற்று.

அரைகுறையாகத் திறந்திருந்த கதவின் இடைவெளியூடாக வெளிச்சம் வந்துகொண்டிருக்கின்றது.

இரவு நடந்த சம்பவம் அவன் மனத்திரையில் ஓடிக் கொண்டிருக்கின்றது.

வீட்டிற்குள் அவள்.

'எப்படியெண்டாலும் நான் அவளுக்கு தாலி கட்டியவன்.'

'அவள்தான் என்ரை மனைவி.'

'இப்ப நான் உள்ளை போகக் கூடாது.'

கதவு திறக்கப்படுகின்றது.

கையில் சூட்கேசுடன் அவள்.

திகைத்தவனாய் அவன் அவளைப் பார்க்கிறான்.

அவள் முகத்தில் அமைதி.

அவன் எழுகின்றான்.

அவள் கையிலுள்ள சூட்கேஸ் அவன் கையில்.

மறு கையிலுள்ள கடிதத்தை அவள் அவன் கையில் திணிக்கின்றாள்.

அவன் உள்ளே செல்ல முயல்கின்றான்.

அவள் தடுத்து நிறுத்துகின்றாள்.

கையிலுள்ள கடிதத்தைப் படிக்கும்படி அவள் அவனை வற்புறுத்துகிறாள்.

கடிதம் மொட்டையாய்த் துவங்குகிறது.

முத்து முத்தான எழுத்துகள்.

'தாலி கட்டியதாலை நீங்கள் என்னை உங்கள் மனைவியாக ஏற்க வேண்டிய கட்டாயமில்லை. அப்படி ஏற்க வேண்டும் என்று உங்களை நிர்ப்பந்திப்பது நியாயமில்லை'

'எனது குறைபாட்டைப் பற்றித் தான் உங்களுக்குக் கூறியதாகவும் அந்தக் குறைப்பாட்டைப் பொருட்படுத்தாமல் நீங்கள் என்னைக் கல்யாணம் கட்ட முழுமனதுடன் ஒப்புக்கொண்டதாகவும் அந்த புறோக்கர் எங்களிடம் அடித்துச் சொன்னார்'

'புறோக்கர் காசுக்காக உங்களையும் ஏமாற்றியிருக்கின் றான். எங்களையும் நல்லா ஏமாத்திப்போட்டான்'

'அந்த புறோக்கர் சொன்னதை நம்பினதாலைதான் இப்பிடி நடந்து போச்சு'

'உங்களுக்கு இடைஞ்சலா இருக்க நான் விரும்பேல்லை'

'தயவு செய்து என்னை மன்னித்துவிடுங்கோ'

'நான் எங்கடை வீட்டை போறன்...'

கடிதம் முடிவு பெறவில்லை.

தன் கையிலுள்ள அந்தக் கடிதத்தை அவன் கசக்கி எறிகின்றான்.

அவன் கொடுப்பிற்குள் சிறு முறுவல்.

அவளை அவன் வாஞ்சையுடன் அணைத்தபடி வீட்டிற்குள் செல்கின்றான்.

இரு ஆத்மாக்கள் சங்கமிப்பு.

நிலத்தாய் முகத்தில் மலர்ச்சி.

★

2013

# மனச்சரிவு

இவர்களைப் பார்த்ததும் என்ரை நெஞ்சு விறைச்சுப் போச்சு. இவையாலை எப்படி இஞ்சை வரமுடிஞ்சுது? எனக்கு மலைப்பு. என்னாலை வாயே திறக்க முடியேல்லை. நான் அதிர்ந்து போய் இவை இரண்டு பேரையும் பார்த்தபடியே இருக்கிறன்.

இந்தப் பேரிழப்பை இவையாலை எப்படி சமாளிக்க முடிஞ்சுது? பூபதி ரீச்சர் சுபத்திரா வின் பாட்டி வசந்தாவின் அம்மா மட்டக்களப்பு காரைதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பூபதி ரீச்சர் சாந்த சுபாவம். கணவர் சாமித்தம்பி, அவரும் ஆசிரியர். அர்ப்பணிப்பு சேவை.

சாமித்தம்பியும் காரைதீவைச் சேர்ந்தவர்தான். இந்த

ஆசிரியத் தம்பதியினருக்கு இரண்டு பிள்ளைகள். ஒன்று பெண் மற்றது ஆண். பெண் வசந்தா வயது இருபத்தி மூன்று.

வசந்தாவிற்கு பொங்கிப் பிரவகிக்கும் வனப்பு. பூவரசம் பூப்போல் அவளிடம் ஒரு மலர்ச்சியும் அழகும் குடிகொண்டிருந்தது.

மகன் காண்டீபனுக்கு பதினேழு வயது. முறுக்கி விடப்பட்ட கயிற்று உடல் கட்டு. வாலிபம் திமிறிக் கொண்டிருக்கின்றது. தளதளவென்ற கட்டிளங்காளை. காண்டீபன் படிப்பில் புலி. புதுவருடப் பிறப்பைக் கொண்டாட வந்திருக்கிறான்.

காலை பத்து மணியிருக்கும். இலங்கை ராணுவ அதிரடிப் படையினர் காரைதீவு, பிரதான வீதியில் வழமையான ரோந்துப் பணியில். இரண்டு பொடியள் மறைந்திருந்து அதிரடிப் படையினர் மீது துப்பாக்கிப் பிரயோகம். அவர்கள் மாயமாய் மறைவு.

அதிரடிப் படை வீரர் ஒருவர் பலி.

அதிரடி படையினர் அட்டகாசம், வெறியாட்டம். வீதியால் சென்று கொண்டிருந்தவர்கள், வீடுகளில் இருந்தவர்கள் மீது கண்மூடித்தனமான துப்பாக்கித் தாக்குதல்கள்.

பதினேழு பொதுமக்கள் பலி. ஆறு ஆண்கள், எட்டு பெண்கள், மூன்று இளைஞர்கள்.

அநேகருக்குப் படுகாயம்.

கோவிலுக்கு சென்று வணங்கிவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த ஆசிரியர் சாமித்தம்பியும் மகன் காண்டீபனும் துப்பாக்கிச் சூட்டில் துடித்துத் துடித்து இறக்கின்றனர்.

மரணபீதி எங்கும் வியாபித்திருக்கின்றது.

பூபதி ரீச்சர் இடிஞ்சுபோகின்றாள். அவளது வாழ்க்கையே அந்தகாரமாகிவிட்டது. செயலிழந்து நிராசையுற்று காயப்பட்டுப்போன அவளது உள்ளம் ஆறுதலுக்காக ஏங்கித் தவிக்கின்றது. அவளது ஆத்மா தவித்துத் தகிப்பு.

அன்புக் கணவனையும் பெற்ற மகனையும் இழந்த பூபதி ரீச்சரால் பாடசாலைக்குச் சென்று படிப்பிக்க முடியவில்லை. நீண்டகால லீவில் நின்ற அவள் இறுதியில் பென்சன் எடுத்தாள். கோபாலரட்ணம் சாமித்தம்பி மாஸ்டரின் தூரத்து உறவு. நீர்ப்பாசன பொறியியலாளர்.

சாமித்தம்பி ஆசிரியரின் மகள் வசந்தாவை திருமணம் செய்து ஐந்து மாதங்கள் தான். அன்புத் தந்தையினதும் ஆசைத் தம்பியினதும் அகால மரணம் வசந்தாவின் மனநிலையை பெரிதும் பாதித்துள்ளது. அவளுக்கு வாழ்க்கையே அந்தகாரமாகிவிட்டது. அவள் நிராசையின் எல்லையை அடைந்துவிட்டாள்.

ராணுவக் கெடுபிடிகள் அதிகரிப்பு. எந்த நேரத்தில் என்ன நடக்குமோ என்ற பதற்றம், அச்சம். கோபாலரட்ணம் இளம் தம்பதியினரது மனோ நிலையில் பெரும் பாதிப்பு. மகளையும் மருமகனையும் வெளிநாடு செல்லும்படி பூபதி ரீச்சர் வற்புறுத்து கின்றார்.

தாயாரை தனியே விட்டுச் செல்ல வசந்தா மறுக்கிறாள். தாயாரின் வற்புறுத்தலால் தயங்கி தயங்கி கணவருடன் வெளிநாடு செல்ல இணங்குகின்றாள் வசந்தா.

யுத்த நெருக்கடி காரணமாக நாட்டைவிட்டு கிளம்பிய தலைமுறையினர் சிலர் புலம்பெயர்ந்து மேற்குலக நாடுகளில் தஞ்சமடைகின்றனர். அவர்களில் கோபாலரட்ணம் தம்பதியினரும் அடங்கினர்.

தம்முடன் அவுஸ்திரேலியாவிற்கு வரும்படி பூபதி ரீச்சரை வேண்டுகின்றனர். அவள் மறுக்கின்றாள். கோபால் தம்பதியினர் வேறு வழியின்றி நிராசையுடன் புறப்பட்டனர். ஒரு நண்பனின் உதவியுடன் அவுஸ்திரேலியா சிட்னி நகரிலிருந்து முப்பது கிலோ மீற்றரிலுள்ள பென்டில் ஹில் என்ற இடத்திலுள்ள ஒரு மாடி வீட்டில் தங்கியிருக்கின்றனர் கோபால் தம்பதியினர்.

தாய் மண்ணையும் உற்றார் உறவுகளையும் விட்டுப்பிரிந்து அந்நிய மண்ணில் தவித்துக் கொண்டிருக்கின்றனர். உற்றார் உறவினரின் பாசத்திற்காகவும் நேசத்திற்காகவும் அவர்கள் ஏங்கி மருகுகின்றனர்.

தண்ணீர் சோற்றுக்கும் கட்டித் தயிருக்கும் கிண்ணம் பழத்திற்கும், எளிமையான கிராம வாழ்வுக்காகவும் ஏங்குகின்றனர்.

காலப் போக்கில் சூழல் நிமித்தமும் வலுவான அந்நிய கலாசாரத்தின் நிர்ப்பந்தத்தினாலும் அவர்களது கிராமிய வாழ்வியலுக்கான தாபம் கரைந்து போகின்றது.

மேற்கத்திய யந்திரமய வாழ்வு அவர்களை மெதுமெதுவாக விழுங்கிக் கொண்டிருக்கிறது. உணவு, உடை ஏன் சிந்தனையில் கூட மாற்றம்.

கோபாலரட்ணத்திற்கு ஒரு மோட்டார் கம்பனியில் வேலை. மனைவிக்கு ஒரு மருந்தகத்தில் காசாளர் வேலை.

மகள் வசந்தா கருவுற்றிருக்கிறாள் என்பதை அறிந்த பூபதி ரீச்சருக்கு பேரானந்தம். மகளைப் பார்க்க வேண்டும் என்ற பேரவா அவருக்கு.

மகள் வசந்தாவிற்கு பிரசவம் பார்க்க பூபதி ரீச்சர் அவுஸ் திரேலியா செல்கின்றாள். போனவள் போனவள் தான்.

அவள் மகளுடன் நிரந்தரமாகவே தங்கிவிட்டாள். குறுகிய காலத்தில் நாடு திரும்பும் நோக்கத்துடன்தான் பூபதி ரீச்சர் அவுஸ்திரேலியா சென்றாள். பூபதி ரீச்சர் தனது வீடு, வளவு, மாடு கண்டுகள், வயல் நிலம் அனைத்தையும் தனது சொந்தத் தம்பி நாகமணியிடம் ஒப்படைத்து விட்டு சென்றாள்.

மகளுக்குப் பிரசவம் பார்க்க சென்றவள் சென்றவள்தான்.

எட்டு வருடங்களாகியும் அவள் நாடு திரும்பவேயில்லை. மகள் வசந்தாவுக்கு இரு பிள்ளைகள். மூத்தது பெண் மற்றது ஆண். இரு பேரப் பிள்ளைகளையும் அன்புடன் அரவணைத்து வளர்க்கின்றாள் பாட்டி பூபதி.

கோபால் மாமியார் மீது உயிர். அம்மா என்றுதான் மாமியாரை அழைத்து வருகின்றான். மாமியாரும் கோபாலை தன் சொந்த மகனாகவே அணைத்துக் கொள்கின்றாள்.

பூபதி ரீச்சர் தமிழ்ப் பண்பாட்டில் ஊறித் திளைத்தவள். இது மட்டக்களப்பு மக்களின் இயல்பாச்சே.

மட்டு. மக்களுக்கு மண்மீதும் மொழி மீதும் பாசமும் பற்றும். தனது பேரப் பிள்ளைகளை தமிழ்ப் பண்பாட்டுடன் வளர்க்கின்றாள்.

இங்குள்ள புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் இராப்பகலாய் உழைக்க வேண்டிய நிர்ப்பந்தம். அப்படி உழைத்தால் தான் வாழமுடியும்.

வசிப்பதற்கு சொந்த வீடு. வேலைக்குச் செல்வதற்கு மோட்டார் வாகனம் அத்தியாவசியம், கடன் மூலம்தான் இவைகளைப் பெறமுடியும். இக்கடன்களை அடைக்க வாழ்க்கை முழுவதும் கடுமையாக உழைக்க வேண்டிய நிர்ப்பந்தம். இதனால் தமது பிள்ளைகளை அரவணைக்க கால அவகாசமில்லை. கோபால் தம்பதியினரும் இந்த நியதிக்கு விதி விலக்கல்ல.

தங்கள் பிள்ளைகள் நன்றாகப் படித்து டாக்டராகவோ இஞ்சினியராகவோ வரவேண்டும் என்ற வேணவா பெரும்பான்மையான தமிழ் பெற்றோருக்கு. இதற்கு தனியார் கல்வி நிறுவனங்களில் பிரத்தியேக வகுப்புகளுக்கு கற்பதற்கு பெருந் தொகைப் பணம் செலுத்த வேண்டும். இதற்காகவும் பெற்றோர் உழைக்க வேண்டிய கட்டாயம்.

தமது பிள்ளைகளுடன் அன்பாக அரவணைத்து பேசி உறவாட பெற்றோருக்கு போதிய நேர அவகாசமில்லை. உழைப்பு, உழைப்பு யந்திரமாக உழைக்க வேண்டும். யந்திரமய வாழ்க்கை.

கோபால் தம்பதியினது பிள்ளைகள் கொடுத்து வைத்தவர்கள். அவர்களை அன்புடன் நேசித்து பாசத்துடன் அரவணைக்க பூபதி பாட்டி இருக்கிறாரே. பூபதி பாட்டிக்கும்

பேரப்பிள்ளைகளுக்குமிடையில் அறுகம் புல்போல் ஆழவேர் விட்டிருக்கும் பாசம்.

பாட்டியின் பொறுப்பில்தான் பிள்ளைகள். பாடசாலைக்கு காலையில் பிள்ளைகளை கூட்டிச் செல்லல், பின்னர் அவர்களின் வீட்டிற்கு கூட்டி வருதல் பாட்டியின் நித்திய கடமை. பாடசாலை அவர்களது வீட்டிலிருந்து கல்லெறி தூரம்தான்.

தன் பேரப்பிள்ளைகளை தமிழ்ப் பண்பாட்டின்படியேதான் வளர்க்கின்றாள் பாட்டி. மகள் வசந்தாவிற்கு இதில் நாட்டமில்லை. என்ன செய்வது இது தவிர்க்க முடியாததாச்சே. ஆனால், கோபாலுக்கு இதில் பூரண உடன்பாடு.

பேரப்பிள்ளைகளைக் குளிப்பாட்டுவது உடை உடுத்துவது உணவூட்டுவது எல்லாம் பூபதி ரீச்சர்தான். சமையல் வேலையிலும் பெரும் பகுதி பூபதி ரீச்சரின் பொறுப்பில்தான். ஓய்வு நேரங்களில் ஆங்கிலம் தமிழ் சொல்லி கொடுத்து வருகின்றார் பூபதி. ஆனால், இங்குள்ள பரீட்சைக்கேற்றவாறு அவருக்கு கற்பிக்க இயலாத நிலை. இதனால்தான் அவரது பேரப்பிள்ளைகள் பெரும் பணம் செலவழித்து தனியாரிடம் பிரத்தியேக வகுப்புகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். இரவு வேளைகளில் பாட்டியுடன் தாங்கள் படுக்கவேண்டும் என்று பேரப்பிள்ளைகள் இரண்டும் அடம்பிடிப்பு. பெற்றோர் தவிர்க்க முடியாத நிலையில் இணக்கம். பூபதி ரீச்சர் தன் பேரப்பிள்ளைகளைப் பாடசாலைக்கு கூட்டிச் சென்று வரும்போது சில தமிழ்த் தாய்மார்களுக்கு அவருடன் நேசம் ஏற்படுகின்றது. தங்கள் பிள்ளைகளையும் தமிழ் படிக்க அவரிடம் அனுப்புகின்றனர். அவர் உணர்வுபூர்வமாக பிள்ளைகளுக்கு இலவசமாக தமிழும் தமிழ்ப் பண்பாடும் கற்றுக் கொடுக்கின்றார்.

பாரதியாரிலிருந்து சோமசுந்தரப்புலவர், நீலாவணன், சண்முகம் சிவலிங்கம், முருகையன் போன்றவர்களின் கவிதைகளை இசையுடன் கற்றுக்கொடுப்பார் பூபதி.

சிறுசிறு நாட்டார் கதைகளையும் நவீன சிறுகதைகளையும் இந்துமத புரட்சிவாதி விவேகானந்தர், சுவாமி விபுலானந்தர், புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை போன்றவர்களது வாழ்க்கை பற்றியும் அவர்களது செயற்பாடுகள் பற்றியும் எடுத்துரைப்பார். பிள்ளைகளும் இவற்றைக்கேட்டு உள்வாங்குவார்கள். இதனால் பூபதி ரீச்சரின் பேரப்பிள்ளைகள் மாத்திரமல்ல அவரிடம் படிக்க வருகின்ற பிள்ளைகளுக்கும் அவர்களது பெற்றோருக்கும் பூபதி ரீச்சர் மீது பற்றும் பாசமும் பெருமதிப்பும் ஏற்படுகின்றது.

பூபதி ரீச்சருக்கு நீரிழிவு நோய். உணவு, நடைப்பயிற்சி, மருத்துவம் மூலம் அவர் நோயை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கின்றார். எதிர்பாராத விதமாய் அவரது வலது காலில்

ஒரு கட்டி ஏற்பட்டது. இதனால் அவர் இலகுவாக நடமாட முடியாத நிலை. தவிர்க்க முடியாமல் அவர் அரசு வைத்தியசாலையில் சிகிச்சை பெறவேண்டியிருந்தது. அவர் வைத்தியசாலை வார்ட்டில் தங்கியிருந்து சிகிச்சை பெறுகின்றார்.

சுபத்திரா தனது தாயாருடன் அல்லது தந்தையுடன் பாட்டியை பார்ப்பதற்கு ஆஸ்பத்திரிக்குச் செல்வார். சனி, ஞாயிறு தினங்களிலும் விடுமுறை நாட்களிலும் பகல் நேரம் முழுவதும் பாட்டியுடன் வைத்தியசாலை வார்ட்டில் தங்கியிருந்து பாட்டிக்கு பணிவிடைகள் செய்கின்றாள்.

சுபத்திராவின் நடையுடை பாவனை. அவளது குழந்தைத் தனம், பாட்டிக்கு பணிவிடை செய்தல், அருகிலுள்ள நோயாளர்களுக்கு தானாகவே முன்வந்து உதவுவது போன்றவற்றால் அங்குள்ள நோயாளிகளும் தாதிமாருக்கும் சுபத்திராமீது பற்றும் பாசமும் ஏற்படுகின்றது.

தாழம் பூ மடல் மாதிரி சுபத்திராவின் உடல்வாகு, சந்திரனொளி யில் ஜலம் மின்னுவது போன்ற அவளது விழிகள் வெள்ளை மனதின் பேதமை வார்ட்டிலுள்ள நோயாளிகளையும் தாதிமாரையும் வெகுவாக கவர்கின்றது. அவள் மீதும் அவளது பாட்டி மீதும் அளவு கடந்த ஈர்ப்பு.

பூபதி ரீச்சர் மீதுள்ள சுபத்திராவின் பற்றும் பாசமும் அவருக்கு அவள் அற்பணிப்புடன் செய்யும் பணிவிடை தாதியரையும் நோயாளி களையும் வியக்க வைக்கிறது. நோய் குணமடைந்து அடுத்தநாள் காலை பூபதி ரீச்சர் வீடு செல்ல அனுமதி.

பூபதி ரீச்சர் வீடு செல்வதற்கு முதல் நாள் இரவு அவருக்கு வாயாலும் மூக்காலும் திடீரென ரத்தப் பெருக்கு ஏற்பட்டு அவர் மரணமடைகின்றார்.

அடுத்த நாள் காலை பூபதி ரீச்சரை வீட்டுக்கு கூட்டிச் செல்ல வந்த மகள் வசந்தாவுக்கும் சுபத்திராவுக்கும் பேரதிர்ச்சி.

பாட்டியின் மரணம் சுபத்திரா மீது பெரும் பாதிப்பை ஏற்படுத்து கின்றது. உணவு, உறக்கமின்றி அவள் இராப்பகலாய் உருகி அழுகை. அடுத்த நாள் பகல் பத்து மணியளவில் சுபத்திராவின் பாசப்பாட்டியின் உடல் தகனம்.

பூபதி ரீச்சரின் இறுதி கிரியையில் பங்கு கொண்ட மக்கள் சோகத்தில்.

பூபதி ரீச்சரிடம் படித்த பிள்ளைகளும் அவர்களது தாய்மார் களும் கதறி அழுகின்றனர். கதறி அழுது கொண்டிருக்கின்ற சுபத்திரா மயங்கி விழுகின்றாள். திகைப்பு அவளது பெற்றோருக்கு.

பாட்டியின் பிரிவினால் சுபத்திரா சகலதையும் இழந்தவளாய் பேதலிப்பு.

அன்று மாலை நாலு மணியளவில் சுபத்திராவை அவளது தாயார் வசந்தா என் வீட்டிற்கு அழைத்து வருகின்றார். எனக்கு அதிர்ச்சி.

சுபத்திராவின் முகத்தில் சோகம். அந்தி நேரத்தின் துயர். அழுதழுது சுபத்திராவி விழிகளும் முகமும் வீங்கி பொருமியுள்ளது. என்னைப் பார்த்ததும் சுபத்திரா. வெம்பிப் பொருமுகின்றாள்.

நல்லகாலம் சுபத்திராவுடன் படிக்கின்ற பிள்ளைகள் என்வீட்டிற்கு இன்னும் வரவில்லை.

நான் அதிர்ந்து போயிருக்கின்றேன். சுபத்திராவை நான் வாஞ்சையுடன் பார்க்கிறேன்.

வெள்ளப் பிரவாகத்தால் தேங்கி நிற்கின்ற குளம் உடைத்துப் பெருக்கெடுத்து ஓடுவது போல் சுபத்திராவின் விழிகளில் தேங்கி நின்ற கண்ணீர் பெருக்கெடுத்து பாய்கின்றது.

அவள் கதறுகின்றாள். நான் அவளை ஆசுவாசப்படுத்து கின்றேன்.

சுபத்திராவின் தாய் நட்டகட்டையாய் நிற்கின்றாள்.

நான் வசந்தாவை வெறுப்புடன் பார்க்கின்றேன்.

என்னால் வாயே திறக்க முடியவில்லை. என் மனம் குமுறுகின்றது.

'நீ ஒரு தாயா? உன் உள்ளத்தில் ஈவு இரக்கம் பாசம் ஒன்றுமில்லையா?' என் உள்ளத்தில் கொதிப்பு. நான் வாயே திறக்கவில்லை. வெறுப்புடன் வசந்தாவைப் பார்க்கின்றேன்.

'சீ, நீயும் ஒரு தாயா?'

என் மனோநிலையைப் புரிந்து கொள்கின்றாள்.

'மன்னிக்க வேணும் ரீச்சர்'

தயங்கித் தயங்கிக் கூறுகின்றாள்.

கேள்விக்குறியுடன் அவளைப் பார்க்கின்றேன்.

'சுபத்திராவுக்கு வாறமாதம் சிலெக்ரிவ் ரெஸ்ற் இருக்கு அதுதான்'.

★

2013

# பொட்டு

நேற்றுக் காலையிலிருந்து முகத்தாரைக் காணவில்லை. முகத்தாரின்ரை வீட்டார் அவரைத் தேடாத இடமில்லை.

அவர் எங்கை போனார் என்ன ஆனார் என்று ஒருவருக்கும் தெரியேல்லை.

முகத்தாற்ரை மனிசி கண்ணீரும் கம்பலையுமாய்.

மகன் கந்தசாமி உற்றார், உறவினர்கள், வீடுகள், கோயில் குளங்கள், நண்பர்களின் இடங்கள் எங்கும் தன்ரை தகப்பனைத் தேடி அலைந்தான்.

முகத்தாற்ரை மூத்த மகள் சண்டிலிப்பாயில் வாழ்க்கைப் பட்டிருக்கின்றாள். அங்கும் முகத்தார் செல்லவில்லையாம்.

இரண்டாவது மகள் வள்ளியம்மா கோண்டாவிலில். அங்கும் அவர் இல்லை.

ஆறுமுகத்தார் மானஸ்தன். தனது பெண் பிள்ளைகள் வாழ்க்கைப்பட்ட வீடுகளுக்கு அவர் செல்லமாட்டார் என்பது நிச்சயம்.

தன்கையே தனக்குத்துணை என்ற நிலைப்பாட்டில் என்றுமே அவர் உறுதியாய் இருப்பவர்.

ஆறுமுகத்தாருக்கு ஏழு பிள்ளைகள். ஆறு பெண்கள் ஆண் ஒன்று.

ஆண் நடுவில் பிள்ளை, ஆறு பெண்கள் சகோதரிகளுக்கும் கந்தசாமி செல்லப்பிள்ளை.

சகோதரிகளின் மீது கந்தசாமிக்கு கடும் பாசம்.

முகத்தாற்ரை மூத்தமகள் செல்லம்மா நல்ல அழகி. இலந்தைப்பழம் போல.

அவர்களது வீட்டிலிருந்து மூன்றாவது வீடு கணபதியாரின் வீடு.

கணபதியார் தன் மகனுக்கு சண்டிலிப்பாயில் பெண் எடுத்தார். அந்தப் பெண், பொன்னம்மாவின் சகோதரன் வெற்றிவேலு முகத்தாற்ரை மகள் செல்லம்மாவைப் பார்த்துவிட்டான்.

செல்லம்மாவின் அழகிலே மயங்கிவிட்டார் வெற்றியர்.

அவர் எதுவித சீதனபாதனமும் இல்லாமல் செல்லம்மாவைக் கட்டிக்கொண்டார்.

வெற்றிவேலு யாழ்ப்பாணம் பெரிய கடையில் பெயர் பெற்ற ஜவுளி வியாபாரி. அவர் தானுண்டு தன்பாடுண்டு என்ற நிலைப்பாட்டில். முகத்தாற்ரை குடும்பத்துடன் வெற்றியர் ஓடும் புளியம்பழமுமாய்.

ஆறுமுகத்தாற்ரை இரண்டாவது மகள் சின்னம்மா உரும்பிராயில் கல்யாணம் கட்டியுள்ளாள். கணவன் சுருட்டுத் தொழில். ஏனோ தானோவெண்டு அவர்கள் வாழ்க்கை நகர்வு.

முகத்தாற்ரை மற்ற மூன்று பெண்பிள்ளைகளும் ஊரிலுள்ள உறவினர்களின் குடும்பங்களில் வாழ்க்கைப்பட்டுள்ளனர். மூவரின் குடும்பங்களும் கமத்தொழில். அந்தக் குடும்பங்கள் மூன்றும் தளம்பலில்லாமல் தங்கள் சொந்தக் கால்களில் நிற்கின்றன.

ஆறுமுகத்தாற்ரை மகன் கந்தசாமி அந்தக் குறிச்சியில் பெயர் பெற்ற தோட்டக்காரன்.

இரட்டைத்திருக்கல் வண்டிலும் சோடி கறுவல் மாடுகளும் வைத்திருக்கின்றார் முகத்தார்.

திங்கள், புதன், வெள்ளி நாட்களில் சுன்னாகச் சந்தைக்கு முகத்தார் வாழைக்குலைகளை ஏற்றிச் செல்வார்.

அவருடைய குறிச்சியிலுள்ள வாழைத்தோட்டக்காரர்கள் தங்களுடைய வாழைக் குலைகளை முகத்தாற்றை வண்டிலில் ஏற்றிச் செல்வார்கள்.

சுன்னாகச் சந்தையிலுள்ள வாழைக்குலை வியாபாரிகள் இரண்டு, மூன்று பேர் முகத்தாருடன் நல்ல ஒட்டு. முகத்தாருடைய வண்டில் எப்போ வரும் என்று அவர்கள் காத்திருப்பார்கள். காரணம் முத்தாற்றை வண்டிலில்தான் திறமான பெரிய வாழைக்குலைகள் சந்தைக்கு வரும். ஐம்பது, அறுபது வாழைக்குலைகளை முகத்தார் சந்தைக்கு ஏற்றிச் செல்வார். வாழைக்குலையொன்றுக்கு மூன்று சதங்கள் ஏற்றுக்கூலி.

வண்டில் கூலியில் ஒரு பகுதியில் தன் வீட்டிற்குத் தேவையான மளிகைச் சாமான்களை முகத்தார் கொள்வனவு செய்வார். ஊரின் கிழக்குப் பக்கமாய் வயல் நிலங்கள்.

தன் குறிச்சியிலுள்ள சிலரின் வயல் நிலங்களை அவர் கூலிக்கு உழுது கொடுப்பார். சில நாட்களில் முகத்தாற்ரை மகனும் நிலங்களை உழுவான். இதிலும் முகத்தாருக்கு கணிசமான வருமானம். முகத்தாரின் குடும்பம் எதுவித தளம்பலுமில்லாமல் இயங்கிக் கொண்டிருப்பு.

அவற்றை கடைக்குட்டி அன்னலட்சுமி. அன்னத்திற்கு நல்ல உடற்கட்டு, கறுப்பி, நல்ல முகவெட்டு. அவள் அடங்காப்பிடாரி, குத்தல், இடித்தல், அரைத்தல், சமையல் போன்ற வீட்டுவேலைகள், வீடுவளவு கூட்டுதல் போன்ற அனைத்தையும் கனகச்சிதமாகச் செய்வாள் அன்னம். இதனால் அவளுடைய தாயும் தகப்பனும் அன்னத்திற்கு மடக்கம்.

முகத்தாற்றை மனைவி மூத்தம்மா அப்பாவி. கணவனை மனம் கோணாமல் அவனுக்கு சேவை செய்வது, பிள்ளைகளைப் பெறுவது அவற்றை வளர்ப்பது இவை தான் அவளது வாழ்க்கை.

கடைக்குட்டி அன்னத்தை மூத்தம்மா செல்லமாய்த்தான் வளர்த்தாள். அன்னம்மா செய்யும் அட்டகாசங்களை அவள்

கண்டிக்கத்தான் செய்தாள். ஆனால், அவளை முத்தம்மாவால் கட்டுப்படுத்தி சரியான வழியில் கொண்டுவர முடியவில்லை.

ஆறுமுகத்தாற்றை வீட்டுக்குப் பக்கத்தில் பனந்தோப்பு. அந்தப் பகுதியிலுள்ள மக்கள் தங்கள் காலைக்கடனை முடிப்பதற்கு அந்தப் பனந்தோப்பிற்குத்தான் செல்வார்கள்.

அதிகாலை.

விடிநிலவு.

முத்தம்மா தனது காலைக்கடனை முடிப்பதற்கு பனந்தோப்பிற்குச் செல்கிறாள். பனந்தோப்பிலுள்ள பன்னைப் பற்றை மறைவில் உருவங்கள்!

முத்தம்மா அந்த உருவங்களை உற்று நோக்குகின்றாள்.

தனது மகள் அன்னமும் அயல் வீட்டு இளைஞன் கந்தையனும்.

முத்தம்மாவிற்கு அதிர்ச்சி.

முகத்தாரும் மனைவியும் கந்தையனுடைய பெற்றோரை இரகசியமாக நாடுகின்றனர்.

இரு குடும்பத்தினரும் காதோடு காதாகப் பேசி சுமுக முடிவிற்கு வருகின்றனர். இரு வீட்டாரும் பெண் கொடுத்துப் பெண் எடுக்க இணக்கம். சீதன பாதனம் நகை நட்டு ஒண்டுமில்லை. உடுத்த உடை மாத்திரம்தான்.

அன்னத்தை கந்தையாவிற்கும், மகேஸ்வரியை கந்தசாமிக்கும் கட்டி வைக்க முடிவு. மகேஸ்வரி உல்லாசப் பிரியை. தன்னை அழகுபடுத்திக் கொள்வதில் முனைப்பு.

வானவில் வர்ணங்களில் பாவாடை தாவணி. இரட்டை பின்னல் நெற்றியில் கவரும் பொட்டு. பொட்டு பலப்பல உருவங்களில்,

ஓயில் நடை. நடை அலங்காரம் என்று அக்குறிச்சியிலுள்ள இளவட்டங்கள் அழைப்பார்கள்.

கந்தசாமியின் உடல் உழைப்பால் முறுக்கேறியது. வசீகரத்தோற்றம்தான். கறுப்பு நிறம். கவர்ச்சியான முகச்சாயல்.

மகேஸ்வரிக்கு கந்தசாமியில் நாட்டமில்லை. காரணம்?

பிள்ளையார் கோயிலுக்குப் பக்கத்திலுள்ள தையல் நிலையத்திற்கு தினமும் மகேஸ் தையல் பழகச் செல்கையில் தியாகராசன் என்ற இளைஞனால் அவள் ஈர்க்கப்பட்டுள்ளாள்.

தியாகராசன் பகட்டுப் பேர்வழி.

பெற்றோரின் நிர்ப்பந்தத்தினால் மகேஸ் கந்தசாமியைக் கைப்பிடிக்க இணக்கம்.

உற்றார் உறவினர் ஒருவருமில்லை. சமய சம்பிரதாயங்கள் ஒன்று மில்லை.

இரவு எட்டு மணியிருக்கும். கல்யாணப் பெண்கள் அன்னமும் மகேசும் தங்கள் புகுந்த வீடுகளுக்கு முன்னாலுள்ள படலைகளால் செல்லவில்லை. தங்கள் வீடுகளுக்கிடையிலுள்ள வேலிக்கடப்பைக் கடந்து செல்லவில்லை.

கிடுகு வேலியிலுள்ள பொட்டுக்கூடாக தாங்கள் புகுந்த வீடுகளுக்கு உடுத்த உடைகளுடன் தவழ்ந்து செல்கின்றார்கள்.

கிடுகு வேலிப் பொட்டு இரண்டு அயல் வீடுகளுக்கும் சுமுகமான உறவை ஏற்படுத்துகின்றது.

ஆறு மாதங்கள் கூட முடியவில்லை.

ஒரு நாள் மகேஸ் தன் தாய் வீட்டிற்கு பயணிப்பு வேலிப் பொட்டுக்கூடாக. அவள் கணவன் கந்தசாமி அவளை அழைப்பு.

அவள் மறுப்பு.

காரணம்?

விடிந்தும் விடியாத வேளை, அவள் கணவனைத் தட்டி எழுப்புகிறாள் மகேஸ். அவன் என்னவோ ஏதோ என்று பதைபதைத்து எழுகின்றான்.

'என்ன மகேஸ்'

கந்தசாமி பதற்றமாய்க் கேட்கின்றான்.

'இந்த வீட்டிலை ஒண்டில் நான் இருக்கிறதா அல்லது அவர் இருக்கிறதா?:'

'நீ என்ன சொல்லிறாய்? எனக்கொண்டும் விளங்கேல்லை'.

'அவர் இருக்கிற வீட்டிலை இனி நான் ஒரு நிமிம் கூட இருக்க மாட்டன'

'அவர் எண்டால் ஆர்?'

'உன்ரை அப்பன் தான்.'

'என்ரை அப்பருக்கென்ன? அவர் இந்த வீட்டிலை ஏன் இருக்கக்கூடாது?'

'அப்படித்தான்'

'ஏன் அவர் என்ன செய்தவர்?'

'நான் ஆர், அவற்றை மருமகள்தானே?'

'மருமகள் தான்'

'அவற்றை வயதென்ன என்ரை வயதென்ன?'

'இதெல்லாம் என்ன? ஏன் குழப்பிறாய்?'

முகத்தாற்றை சால்வையைக் காட்டுகின்றாள் அவள்.

ஆறுமுகத்தார் அறுபது வயதைத் தாண்டிவிட்டாலும், அவருக்கு உழைப்பால் வைரம் பாய்ந்த உடற்கட்டு.

கோயில் குருக்கள் மாதிரி தலைமுடி. முன்பக்கம் 'புளா வெட்டு' பின்பக்கம் சிறுவாழைப் பொத்திக் குடும்பி.

காதுகளில் கடுக்கன்கள். ஏழு பிள்ளைகளின் தகப்பன் என்று எடுத்த எடுப்பிலே சொல்லிவிட முடியாது. அவரது கடும் உழைப்பும் உணவும்தான் அவரது மிடுக்கான உடற்கட்டுக்குக் காரணம்.

நிலம் வெளுத்து விட்டது. கிணற்றடியில் வேப்பங்குச்சியால் பல் துலக்கிக் கொண்டிருக்கிறார் முகத்தார்.

கந்தசாமி தகப்பனைத் தேடிவருகின்றான்.

'இளங்கண்டு தேவைப்படுகுதோ உனக்கு?'

கேட்கின்ற கந்தசாமியின் கையிலுள்ள துவரங்கம்பு முகத்தாற்ற முதுகைப் பதம் பார்க்கிறது.

முகத்தாருக்கு அதிர்ச்சி! சிலையாய் முகத்தார்.

'உனக்கு என்ன நடந்தது?'

தன்னிலைக்கு வந்த முகத்தார் மகனைக் கேட்கிறார்.

'இந்தச் சால்வை ஆற்றை'

கந்தசாமியின் கேள்வி.

'ஏன்? இது என்ர சால்வைத் தான்.'

முகத்தார்.

'மகேசாக்கள் படுத்திருந்த மாலுக்கை இந்த சால்வை எப்பிடிப் போச்சுது?'

'அவையள் படுத்திருந்த மாலுக்கையுள்ள சீலைக்கொடியிலை மத்தியானம் நான் தான் போட்டனான்.'

முகத்தார்.

'இண்டைக்கு விடியப் புறம் நீ மாலுக்கை போகேல் லையா?'

'உன்னோடைதானே நான் ராத்திரி ஒத்தாப்புக்கை படுத்திருந் தன். இப்பதான் நான் நித்திரையாலை எழும்பி இஞ்சை வந்து பல்லு விளக்கிக் கொண்டிருக்கிறன். நான் ராத்திரி ஒண்டுக்குப் போகக்கூட எழும்பேல்லை.'

முகத்தார் கூறுகின்றார் ஒன்றும் புரியாமல்.

கந்தசாமிக்கு மகேசில் ஐயம்.

'நேற்று முழுவதும் வேலாயுதம் விதானையாற்ற வயலிலை கடும் வெயிலுக்கை உழுத அலுப்பில மரக்கட்டையாக் கிடந்த நான், இப்பதான் எழும்பி வந்தனான்.'

ஆறுமுகத்தார் வெப்பிசாரத்துடன் கூறுகிறார்.

அவருடைய கண்களில் கண்ணீர். உலகமே இருண்டுவிட்டது முகத்தாருக்கு.

தலை குனிந்தவனாய்க் கந்தசாமி அவ்விடத்தை விட்டகலு கிறான்.

கந்தசாமிக்கு மனக்கொந்தளிப்பு.

முகத்தாருக்கு மனக்குமுறல். தனது சால்வைத் துண்டை எடுக்கிறார்.

முகத்தார். அவரது கையில் துவரங்கம்பு. வேகமாக நடக்கிறார்.

சிறிது தூரம் சென்றதும் திரும்பித் தன்வீட்டை ஒருமுறை பாக்கிறார்.

முகத்தார் திரும்பி கால்போன போக்கில் வேகமாக நடக்கிறார்.

ஆறுமுகத்தாரை நேற்றையிலிருந்து காணவில்லை.

செல்வச் சன்னதி கோயிலுக்கு விடியப்புறம் சென்ற வேலாயுதம் அவசர அவசரமாய் ஊர் திரும்புகிறான்.

'தம்பி கந்தசாமி உன்ர அப்பற்ரை வேட்டி சால்வை காதுக் கடுக்கன்கள், வெள்ளி அரைஞாண் கொடி, துவரம் கம்பெல்லாம் செல்வச்சன்னதி கோயில் கடற்கரையில கிடக்குதுகள். பொலிஸும் நிக்குது.'

கந்தசாமி வேலாயுதத்துடன் அவசர அவசரமாய் செல்வச் சன்னதி கோயிலுக்கு விரைகின்றான்.

தனது தகப்பனின் வேட்டி சால்வை, காதுக்கடுக்கன்கள், துவரங்கம்பு எல்லாவற்றையும் பார்க்கின்றான். அடையாளம் காட்டுகின்றான்.

கந்தசாமிக்குத் தன் மேலேயே வெறுப்பு. தானும் சன்னதி கோயில் கடலுக்குள் குதிச்சு தன் உயிரை மாய்த்துவிட வேண்டுமென்ற எண்ணம் தலையெடுப்பு.

தகப்பனுமில்லை. தானுமில்லாவிட்டால் தன் வயோதிபத் தாயின் கதி?

கந்தசாமியின் உள்ளத்தில்.

வேலாயுதத்துடன் வீடு திரும்புகின்றான் கந்தசாமி.

பிரேதம் இல்லாமலே செத்த வீடு நடப்பு.

ஆறுமுகத்தாற்றை மனைவிக்கு அதிர்ச்சி.

மூர்ச்சிப்பு தெளியவில்லை.

இரவு எட்டு மணியிருக்கும்.

மகேஸ்வரி வேலிப்பொட்டுக்கூடாக தன் தாய் வீட்டிற்கு செல்ல முயற்சி.

கந்தசாமி அவளைத் தடுப்பு.

'என்ரை அப்பர் எங்கடை வீட்டிலை இல்லைத்தானே?'

'அதாலை?'

மகேஸ்வரி.

'இனி எங்கடை வீட்டிலை இருக்கலாம் தானே?'

'அதெப்பிடி.'

'நாங்கள் தனிக்குடித்தனம் போகச் சம்மதிச்சால் நான் உன்னோடை வாறன்.'

'போடி போய் உன் அப்பன் வீட்டிலை தனிக்குடித்தனம் நடத்தடி.'

மகேஸ் கிடுகு வேலிப்பொட்டுக்கூடாக தாய் வீட்டிற்குச் செல்கிறாள்.

கந்தசாமி பூவரசம் கதியால்களை நட்டு வேலிப் பொட்டை அடைக்கின்றான்.

★

2014

# வனவாசம்

“தம்பி வங்கிகருமபீடம் திறக்க நேரம் செல்லுமா?”

“ஆர் கேட்கிறது?”

“எனக்கு முன்னாலை ஒரு வெள்ளைதானே நிக்குது.”

“கருமபீடம் திறக்க நேர மாகுமா?”

“மீண்டும் அதேகுரல்.”

‘யாராக இருக்கும்?’ பின்னுக்கு திரும்பிப் பார்க்கிறேன்.

ஒரு முதியவர் நிற்க முடியாமல் நிற்கின்றார். பார்த்தால் அவர் விழுந்துவிடுவார் போலிருக் கின்றது. இவர் ஒரு நோயாளியாக இருக்கவேணும்.

“இவருக்கு நான் எப்படி உதவமுடியும்? நான் நிற்கின்ற

இடத்தை இவருக்கு கொடுக்கலாம். அதன் பின்? எனக்கு முன்னாலுள்ள வெள்ளையைக் கேட்டுப் பார்க்கலாம். ஆனால் அவர் என்ன சொல்வாரோ? சரி ஒருக்கால் அவரை கேட்டுப் பார்க்கலாம்.''

“ஐயா.''

அவரை அழைக்கின்றேன். அவர் திரும்பி என்னை முறைச்சுப் பார்க்கின்றார்.

அந்த முதியவரை அவருக்கு காண்பிக்கின்றேன்.

“இவருக்கு நீங்கள் இடங்கொடுத்து உதவமுடியுமா?'' வினயமாக அவரை கேட்கின்றேன்.

“ஓ நிச்சயமாய்''

முதியவருடைய நிலைமையைப் பார்த்த அவர் தனது இடத்தைக் குடுக்கின்றார். அது மாத்திரமல்ல. முதியவருக்கு உதவும் முகமாய் என்னை முதியவருக்கு பக்கத்தில் நிற்கும்படி கூறுகின்றார்.

இப்போ அந்த முதியவருக்கு முன்பாக ஒரு ஆள்.

கரும பீடத்துக்கு முன்னால் அந்த நபர் மாத்திரந்தான்.

முக்கால் களிசான். அதற்குப் பொருத்தமான நிறத்தில் ரீசேட். தலைமுடி கத்தரிக்கப்பட்டு முள்ளம்பன்றியின் முட்கள் போல சிலுப்பி குத்திட்டு நிற்கின்றன.

ஆணா, பெண்ணா? அடையாளம் காண முடியவில்லை. காதுகளில் தோடு, கழுத்தில் தடித்த பவுண் சங்கிலி.

பெண்தான்!

“அம்மா!''

பௌவியமாக அழைக்கின்றேன்.

“அம்மா.''

பதிலில்லை.

மீண்டும் கூப்பிடுகிறேன்.

அப்பெண் திரும்பிப் பார்க்கின்றாள். அவள் முகத்தில் கோபம் கொப்பளிக்கின்றது.

“இந்த முதியவருக்கு இடம்குடுத்து உங்களால் உதவமுடியுமா?''

அச்சபாவத்துடன் நான் அப் பெண்ணைக் கேட்கின்றேன்.

அவள் சிடுசிடுப்புடன் எம்மை வெறுப்பாய் முறைத்து பார்த்து முகத்தை வெட்டித் திருப்பி நிற்கின்றாள்.

வங்கிக் கருமபீடம் திறக்கப்படுகின்றது.

எங்களுக்கு முன்னால் நிற்கின்ற அப் பெண் தன் வங்கிக் கணக்குப் புத்தகத்தையும் பணக்கட்டையும் கரும பீடத்திலுள்ள பெண் ஊழியரிடம் கொடுக்கின்றாள்.

வங்கி ஊழியர் அதைப் பெற்றுக்கொள்ளவில்லை.

அப்பெண்ணை சற்று ஒருபுறம் தள்ளி நிற்கும்படி சைகை செய்கின்றாள்.

பெண் தான் நிற்கின்ற இடத்திலேயே அசையாமல் நிற்கின்றாள்.

ஒருபுறமாய் தள்ளி நிற்கும்படி வங்கி ஊழியர் தன்கையால் காட்டுகின்றார்.

அந்த நோயாளி முதியவரை வங்கி ஊழியர் அழைக் கின்றார்.

முதியவர் தமது மூத்த பிரசைகளுக்கான பென்சன் வங்கிக் கணக்கு புத்தகத்தை வங்கி ஊழியரிடம் கொடுக்கின்றார்.

வங்கி ஊழியர் அந்தப் புத்தகத்தைப் பெற்று பதிந்துவிட்டு ஓய்வூதியப் பணத்தை முதியவருக்குக் கொடுக்கின்றார். அதைத் தொடர்ந்து என்னை அழைக்கின்றார். எனது கருமத்தையும் முடிக்கின்றாள். அதன் பின்தான் அந்தப் பெண்.

முதியவர் சற்றுக் களைப்பாறுவதற்கு சமீபத்திலுள்ள கதிரையில் இருக்கின்றார். நானும் அவர் பக்கத்தில் இருக்கின்றேன். எங்களுக்குப் பக்கத்தில் எனது மகளும் அமர்கின்றாள்.

“அப்பா இவர்தான் நான் உங்களுக்கு சொன்ன பெரியவர்” என் மகள் அந்த முதியவரை எனக்கு அறிமுகப்படுத்துகின்றாள்.

தன் கருமத்தை முடித்துக்கொண்ட அந்தப் பெண் எம்மை விசுக்கென்று கடந்து செல்கின்றாள்.

“உதிலை போற கொம்பறி மூக்கன் ஆரெண்டு தெரியுமோ?”

பெரியவர் எங்களைக் கேட்கின்றார். தெரியாதென்று நாங்கள் கூறுகின்றோம்.

“உந்தக் காந்தாரிதான் எங்கடை ஆறு பிள்ளையளிலை ஒருத்தி. எங்கடை ஆறு பிள்ளையளிலை உந்தக் காடேறி பிசாசு தான் மூண்டாவது பிள்ளை. அவளுக்கும் எனக்கும் கனகாலமாய் ஒட்டுமில்லை உறவுமில்லை.”

அவர் விழிகளில் கோபத்தீ, வார்த்தைகளில் வெறுப்பு.

இஞ்சை பெண்டில்ஹிலிலை என்ரை பிள்ளையளின்ரை ஐஞ்சு குடும்பங்கள் இருக்குதுகள். எல்லாக் குடும்பங்களும் நல்லாய் வசதியாய் தானிருக்குதுகள்.

அவர் வார்த்தைகளில் கசப்பு, விரக்தி.

“நான் ஒருதரோடையுமில்லை. ஏழுவரியங்களாய் “நான் தனியாகத்தானிருக்கிறன்.”

அவரைப் பார்க்க எங்களுக்கு பெரும் கவலை.

“என்ரை கதையைச் சொல்லி நான் ஏன் உங்களை கவலைப்படுத்துவான். என்ர வேதனை என்னோடயிருக்கட்டும். நீங்கள் போட்டு வாருங்கோ. உங்களை நான் மினக்கெடுத்த விரும்பவில்லை.”

“ஐயா. பெரியவரே. எனக்கு அப்படி ஒரு அவசர வேலையுமில்லை. என்ரை மகள் சுப்பர்மார்க்கட்டுக்குப் போகப் போறாள். அவள் திரும்பி வரும்வரை நாங்கள் கதைச்சுக் கொண்டிருக்கலாம்.”

“நாங்கள் வங்கியிலிருந்து வெளியாலை வரேக்கைதான் நான் போற பஸ்சும் போனது. அடுத்த பஸ் வர இன்னும் ஒரு மணி நேரம் கிடக்கு. அதுவரைக்கும் நாங்கள் கதைச்சுக் கொண்டிருக்கலாம்.”

முதியவர் கூறுகின்றார்.

“தம்பி. எனக்கு களைப்பாய் கிடக்கு. அதோ அங்கே தெரியுதே. பஸ் நிற்பாட்டிற இடம். அதுக்குப் பக்கத்திலை ஒரு சீமெந்துக்கட்டுக் கிடக்கு. அந்த இடத்திலை நல்ல நிழல். நாங்கள் அதிலை ஆறுதலாய் இருந்து கதைப்பமா.”

என்ரை மகள் சுப்பர்மார்க்கட்டுக்குப் போகின்றாள்.

நாங்கள் இரண்டு பேரும் அந்த மரநிழலடிக்குப் போறம்.

பெரு விருட்சம் அடர்த்தியான நிழல். குளிர்மையான காற்று மனதுக்கு இதம்.

“தம்பி நாங்கள் பதினெட்டு வரியத்துக்கு முந்தி இஞ்சை வந்தம்.”

“என்ரை பெயர் சுப்பிரமணியம்.”

“என்ரை சொந்த ஊர் வசாவிளான், பலாலி எயர் போர்ட்டுக்குக் கிட்ட.”

“நான் பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர். முதலிலை மாத்தறை ராகுலக் கல்லூரியிலை படிப்பிச்சன். பிறகு அரசாங்க பிலியந்தல மத்திய மகாவித்தியாலயத்திலை படிப்பிச்சன்.”

“மூண்டு வரியங்களுக்குப் பிறகு வசாவிளான் மத்திய மகாவித்தியாலயத்துக்கு மாற்றமெடுத்து வந்தன்.”

“ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களிலை நான் ஈடுபாட்டோடை படிப்பிச்சன். மாணவர்கள், அதிபர், சக ஆசிரியர்கள் எல்லோரும் என்னிலை நல்ல மதிப்பு. ஏன் என்ரை ஊரிலை கூட எனக்கு நல்ல மதிப்பும் செல்வாக்கும்.”

“என்னட்டைப் படிச்ச மாணவர்களிலை கனபேர் இண்டைக் கும் அரச தனியார் துறையிலை பெரிய பதவியளிலை இருக்கினை. வசாவிளானிலைதான் எங்கடை பூர்வீக வீடு.”

“என்ரை வயோதிபப் பெற்றோருடனும் மூண்டு தம்பிமாரும் இரண்டு சகோதரிகளோடையும் நாங்கள் நிம்மதியாய் வாழ்ந்து வந்தம்.”

“எங்களுக்கு இருபது பரப்பு தோட்ட நிலம். செழிப்பான மண். வெங்காயம், புகையிலை, உருளைக்கிழங்கு பயிர்ச்செய்து வந்தம். நல்ல வருமானம். நிம்மதியான வாழ்க்கை.”

நான் படிப்பிக்கின்ற மகாவித்தியாலயத்தில் தமிழ்ப் பயிற்றப்பட்ட ஒரு ஆசிரியையும் படிப்பித்து வந்தா. அந்த ஆசிரியைக்கும் எனக்கும் திருமணம் நடந்தது. எனது பெற்றோரது அனுமதியுடனும் ஆசியுடனும் தான் எங்கள் கல்யாணம் நடந்தது.

“எங்கடை கலியாணத்தை பேசி ஒப்பேத்தியவர் முருகப்பர். அவர் செல்லக்கண்டர் என்ற எனது மாணவனின் தகப்பன். அவருக்கு எங்கடை ஊரிலை நல்ல மரியாதையும் செல்வாக்கும்.”

“எங்களுக்கு ஆறு பிள்ளைகள் எங்கடை குடும்பம் முருகபத்திக் குடும்பம். என் பெயர் மயில்வாகனம். மனைவி பெயர் அன்னமயில். பாலமுருகன் இளமுருகன் ஆண்பிள்ளைகளின் பெயர்கள். மூன்றாவது பிள்ளை பெண். பெயர் வண்ணமயில்.”

"என்ரை மனைவியின்ரை கிராமம் மயிலிட்டி. அங்கை நாங்கள் ஒரு விசாலமான வீடு கட்டி குடியேறினம். மூன்று மாதங்கள்தான் நாங்கள் அந்த வீட்டிலையிருந்தம்."

"எங்கடை நாட்டிலை மொழிப் பிரச்சினை துவங்கிச்சுது. அது இனப்பிரச்சினையாய் மாற்றப்பட்டு கடைசியிலை இன வெறியுத்தமாய் வெடிச்சுது."

"இன வெறி யுத்தம் எமது நாட்டில் பெரும் தொகையான மக்களை காவு கொண்டு வந்தது. என்ரை பெற்றோர் சகோதர சகோதரிகள் அத்தனை பேரையும் நான் இழந்து தவித்தன்."

"பலாலி விமான நிலைய விஸ்தரிப்புக்கும் உயர்பாதுகாப்பு வலயத்துக்கும் ஆயிரக்கணக்கான பரப்பு நிலங்களும் மக்களின் வீடுகளும் அடாவடித்தனமாகப் பறிக்கப்பட்டன."

"ஆயிரக்கணக்கான வீடுகள் விமான குண்டுத்தாக்குதலால் அழிந்து தரைமட்டமாக்கப்பட்டன."

"இப்பிரதேசத்திலுள்ள பெரிய வீடுகளின் கதவுகள், கதவு நிலைகள், யன்னல்கள், தீராந்திகள் எல்லாம் பெயர்த்து எடுக்கப் பட்டன. இவைகள் அனைத்தும் கப்பல் மூலம் தென் பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டன. பின்னர் இவ்வீடுகள் குண்டுவைத்து தகர்க்கப்பட்டன."

"வடக்கில் பல்லாயிரக்கணக்கான வீடுகள் குண்டு வீசித் தகர்க்கப்பட்டன. அதேவேளை தெற்கில் ஆயிரக்கணக்கான வீடுகள் படையினருக்கு நிர்மாணிக்கப்பட்டன. பொது மக்களுக்கல்ல."

"ஒரு நாள் மதியவேளை, மயிலிட்டியிலுள்ள எங்கடை புதிய வீட்டின் மேல் விமானக்குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது. அந்த வீட்டில் நாங்கள் குடிபுகுந்து மூண்டு மாதங்கள் கூடமுடியவில்லை."

"விமானக் குண்டுத்தாக்குதலில் என்ர அருமை மனைவி அன்னமயில் படுகொலை செய்யப்பட்டாள். அது மாத்திரமே என்ர செல்லக் கடைக்குட்டி வண்ணமயிலும் கோரமாக கொல்லப்பட்டாள். என் வாழ்வே முடிஞ்சுது."

"நாங்கள் இடம் பெயர்ந்தம். வெறும் கையோடைதான். நல்லூரிலையுள்ள என்ரை நண்பன் வீட்டில்தான் நாங்கள் தஞ்சம் புகுந்தம். என்ரை நண்பனும் மனைவியும் மனம்கோணாமல் எங்களை வரவேற்றினை. அவை எங்களுக்கு ஒரு குறையும் விட்டு வைக்கவில்லை. நல்லாய்த்தான் எங்களைப் பராமரிச்சினை.

ஆனால், நாங்கள் எவ்வளவு நாட்கள்தான் அவைக்கு பாரமாய் இருக்கிறது?''

''நாங்கள் கொழும்புக்குப் போனம். கொழும்பில இருந்து செஞ்சிலுவைச் சங்கத்தின்ரை உதவியோடை வந்தம்.''

''அவுஸ்திரேலியா சிட்னி எங்களுக்கு தஞ்சம் குடுத்தது. சிறிது காலம் நாங்கள் ஒரு அகதி முகாமிலை இருந்தம். பிறகு எங்களுக்கு அகதி அந்தஸ்து கிடைச்சுது. எங்களுக்கு ஒரு வீடு தந்தார்கள். மாதாமாதம் எங்களுக்கு அகதி உதவிப்பணம் கிடைச்சுது. எங்கடை பிள்ளையள் படிக்கிறதுக்கும் அரசாங்கம் உதவிப் பணம் தந்தது.''

''என்ரை ஐஞ்சு பிள்ளையளையும் வளர்த்து ஆளாக்க நான் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல. கடையிலை நாங்கள் ஒரு நாளும் சாப்பிடுகிறதில்லை. கடைச்சாப்பாடு அதிக செலவு. அதோடை அது எங்களுக்கு ஒத்துவராது. நான்தான் சமையல்.''

''துவக்கத்திலை என்ரை ஐஞ்சு பிள்ளையளையும் நான் தான் பாடசாலைக்கு கூட்டிக்கொண்டு போறதும் வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு வாறதும். இரண்டு மூண்டு வரியங்கள் இதுகளோடை இழுபறிதான். பிறகு அதுகள் தாங்களாகவே பாடசாலைக்கு போய் வந்ததுகள். அந்த ஐஞ்சு பிள்ளைகளும் இப்ப நல்லாய் இருக்குதுகள். ஐஞ்சு பேரும் கல்யாணம் கட்டீட்டுதுகள். அதுகளுக்கு சொந்த பங்களாக்கள் சொகுசு வாகனங்கள் பெரும் தொகை வங்கிக்கணக்குகள்.''

''மூத்தவன் இஞ்சினியர். ஒரு பெரிய மோட்டார் கம்பனி நடத்துறான். இரண்டாம் மகன் பெரிய டொக்டர். இதயநோய் நிபுணர் மூன்றாவது பெண் அவள் சட்டத்தரணி. காணிகள், வீடுகள், கட்டடங்கள் கொள்வனவு விற்பனை தரகுவேலை றியல் எஸ்ரேற் கொம்பனி நடத்துறாள். நாலாவது மகன் பெரும் ஏற்றுமதிக் கொம்பனிச் சொந்தக்காரன். ஐந்தாவது ஆள் மருந்துகள் ஏற்றுமதி இறக்குமதிக் கொம்பனி வைச்சிருக்கிறான்.''

''ஐஞ்சுபேரும் சிட்னியிலுள்ள தமிழ் சங்கத்தில் பெரும் புள்ளிகள். மதிப்புக்குரிய பிரமுகர்கள். இங்கு நடக்கிற தமிழற்ரை பொது வைபவங்கள் விழாக்களுக்கு அவர்கள் ஒவ்வொருவரும் பிரதம விருந்தினர்கள். பூ மாலைகள் போட்டு பொன்னாடைகள் போர்த்திப் பெரும் கௌரவிப்பு.''

''ஆனால். நான்?''

“பெண்ணுக்கு பெரிய டாக்டரைக் கட்டிவைச்சன். துவக்கத் திலை நான் அவளின்ரை வீட்டிலை தானிருந்தன். என்னை நல்லாய்த்தான் பார்த்தாள். எனக்கு அவள் எதுவித குறையும் விட்டு வைக்கேல்லை. அவளுடைய கணவனும் என்னிலை பாசம். பெரும் மதிப்பு வைச்சிருந்தார்.”

“அப்பா நீங்கள் இந்த தள்ளாத வயதிலை மாதாமாதம் வங்கிக்குப் போய் உங்கடை மூத்த பிரஜைகளுக்கான பென்சனை, எடுத்துவாறியள். உங்களுக்கு ஏன் இந்த வீண் சிரமம்? உங்கடை அந்த பென்சனை என்ரை பேருக்கு சாட்டுதல் பண்ணிவிட்டா லென்ன?”

என்னைப் பௌவியமாகக் கேட்டாள் அவள்.

“பிள்ளை வங்கிக்குப் போறதிலை எனக்கு எதுவித சிரமமுமில்லை. நான் திடகாத்திரமாய்த்தானே இருக்கிறன். அந்த பென்சன் காசை எடுத்து வந்து உன்னட்டைத்தானே தாறன்.”

“அதில்லை அப்பா நான் வங்கிக்கும் போறவேளை உங்கடை பென்சனையும் நான் எடுத்து வரலாந்தானே. நீங்கள் இதுக்காக வீணாய் அலையத் தேவையில்லையல்லவோ.”

“எனக்கு இதிலை எதுவித கரைச்சலுமில்லை. தொல்லையு மில்லை. பிறகுபார்ப்பம்.”

“என்னிலை உங்களுக்கு நம்பிக்கையில்லையே அப்பா?”

“அப்படியில்லை மோனை.”

“பிறகேன் தயங்கிறியள்?”

“இந்த விடயத்திலை அவசரப்படக்கூடாது.”

“இல்லை. இண்டைக்கே இதுக்கு முடிவு கட்டவேணும்.”

“இதெல்லாம் நல்லா யோசிச்சுச் செய்ய வேண்டிய விடயம்.”

“யோசிக்கிறதுக்கு இதிலை என்ன கிடக்கு.”

“என்ரை மூத்தவனிருக்கிறான். மற்ற பொடியளுமிருக்கிறாங் கள். இது எல்லாரோடையும் கலந்தாலோசிக்க வேண்டிய விடயம்.”

“நீ என்னோடைதானே இருக்கிறாய். நான் உன்னை நல்லாய்த்தானே பார்க்கிறன். அப்பேன் நீ அவையோடை கலந்தாலோசிக்க வேணும்?”

“உன்னைப் போல அவங்களும் என்ரை பிள்ளையள் தானே. எங்களைக் கேளாமல் நீ ஏன் இப்படிச் செய்தனி எண்டு அதுகள் என்னைக் கேட்டால் நான் என்ன பதில் சொல்ல முடியும்?”

“இப்ப இருக்கிறது நான் தான். உங்களுடைய ஒரே ஒரு பொம்பிளைப் பிள்ளை. கடைசிகாலத்திலை நான் தான் உங்களைப் பராமரிக்கிறது. ஆனபடியால் நான் தான் உரிமைக்காரி.”

“மற்றதுகளும் என்ரை பிள்ளையள் தானே. உனக்கிருக்கிற உரிமையிலும் பாக்க அவங்களுக்குத்தான் கூடிய உரிமை கிடக்கு. உனக்கு தர வேண்டியதெல்லாம் தந்து உன்னை ஒரு ஆளுக்கு கட்டிக் குடுத்தாச்சு. அதோடை எல்லாம் முடிஞ்சுது. இப்ப அவர்கள்தான் முடிவெடுக்க வேணும்.”

“ஓஹோ அப்பிடியா சங்கதி? இனி நீ என்ரை வீட்டிலை ஒரு நிமிடம்கூட இருக்கக்கூடாது.”

“அவள் உரத்துக் கத்திக்கொண்டு உள்ளை ஓடிப்போனாள். என்ரை சூட்கேசை எடுத்துவந்து வெளியாலை எறிஞ்சாள்.”

“போ... இப்பவே துலைஞ்சுபோ.”

“உரத்து கத்தினாள்.”

“அவளின்ரை புரிசன் ஒன்றும் பேசாமல் பாத்தக்கொண்டு நிற்கிறார். நான் என்ரை சூட்கேசை எடுத்துக்கொண்டு வெளி யேறினன். நான் என்ரை மூத்த மகன் வீட்டை போறன்.”

“மூத்த மகன்ரை பெண்டாட்டி அவுஸ்திரேலியப் பெண்.”

“வாருங்கோ அப்பா.”

“என்ன சூட்கேசோடை வாறியள்.”

“எங்கையாவது பயணம் போகப் போறியளா? எங்களிட்டைச் சொல்லிப் போட்டுப்போக வாறியளா?”

அவசர அவசரமாகக் கேட்கிறான்.

“இல்லை மோனை. என்ரை மகள் என்னை வீட்டைவிட்டு துரத்திப் போட்டாள்’ வெப் பிசாரத்தோடைதான் சொன்னன். ”

“ஏன் அவளேன் இப்படிச் செய்தவள்?”

அதிர்ச்சியோடை அவன் கேட்கிறான்.

“என்ரை பென்சனை தன்ரை பேருக்கு சாட்டுதல் பண்ணச் சொல்லி என்னை வற்புறுத்தினாள். அது முடியாது உங்களோடை யும் கலந்தாலோசித்துத்தான் செய்ய வேணுமெண்டு நான்

உறுதியாகச் சொன்னன்' அதுதான் அவள் ஆத்திரப்பட்டு என்னை தன்ரை வீட்டிலையிருந்து கலைச்சுப் போட்டாள்.''

“இப்பென்ன செய்யப் போறியள்?''

தயங்கித் தயங்கி அவன் என்னைக் கேட்கிறான்.

“உன்னோட இருக்கலாம் என்டுதான் நான் இஞ்சை வந்தன்.''

உடனே அவன்ரை பெண்சாதி அவனை உள்ளை இழுத்துக்கொண்டு போகிறாள்.

“இந்தக் கிழடு எங்களோடை தங்கப் போகுதா?''

“ஐயோ. இதை என்னாலை ஏற்கேலாது. அவள் கத்துகிறாள்.''

“மேரி நீ அவசரப்படாதை. ஒரே ஒரு மாதம்தான். நாங்கள் அவற்ரை பென்சன் பத்திரத்தை தந்திரமாய் எங்கடை பேருக்கு மாத்திப் போடவேணும். அதோடை வங்கியிலுள்ள அவற்றை வைப்புப் பணத்தையும் எங்கடை பேருக்கு மாத்தவேணும். அது முடிஞ்ச உடனை அவரை ஏதாவதொரு முதியோரில்லத்திலை கொண்டு போய்விட்டால் எங்கடை காரியம் முடிஞ்சுது. நீ அவசரப்படாதை மேரி.''

அவை இரண்டு பேரும் மறைவாய் ஹோலுக்கை நிண்டு கதைக்கிறது எனக்குக் கேட்டது. இஞ்சை நான் தங்கேலாது. ஆனா, இந்த நேரங்கெட்ட நேரத்தில நான் எங்கே போறது?' அவர்கள் இரண்டுபேரும் வெளியே வருகின்றார்கள்.

“அப்பா வெளியாலை ஏன் நிற்கிறியள்? உள்ளை வாங்கோ. இரண்டு பேரும் என்னை உள்ளை கூப்பிடுகினை.''

நான் உள்ளைபோய் ஹோலுக்கை நிற்கிறன்.

“அப்பா இஞ்சை போதிய இடவசதியில்லை. உங்களுக்கு தெரியும் தானே. எங்களுக்கு மூண்டே மூண்டு அறையள். ஒண்டுக்கை நானும் என்ரை மனிசியும் மற்ற இரண்டு அறையளுக்கை எங்கடை மகனும் மகளும்.''

“இப்பென்ன செய்யிறது?' என்ரை மனதில் கேள்வி.''

“ஒரு சின்ன அறை பிறம்பாய் கிடக்கு. அதுக்கை சாமான்கள் கிடக்கு. நாளைக்கு அந்தச் சாமான்களை ஒரு புறமாய் ஒதுக்கிப் போட்டுத்தாறம். நீங்கள் அதுக்கை தங்கலாம். இப்ப உங்கடை சூட்கேசை ஒரு புறமாய் வைச்சிட்டு ஹோலுக்கை படுங்கோ.''

“ஹோல் லைட்டை நூத்துப்போட்டு அவர்கள் படுக்க உள்ளே செல்கின்றனர். சாப்பிட்டாச்சா என்று ஒரு சொல்கூட அவன் என்னைக் கேக்கேல்லை. வெறு வயித்தோடை நான் படுக்கிறன். எனக்கு நித்திரை வரரேல்லை. எப்படி வரும்?”

“விடிஞ்சதும் விடியாததுமாய் நான் எழும்பினன். அவையள் ஒருத்தரும் நித்திரை விட்டெழும்பேல்லை. சூட்கேசை எடுத்துக் கொண்டு நான் வெளியேறினன். இரண்டாவது மகன் வீட்டை போறன். காலை பத்து மணியாகியும் அவர்கள் கேற்றே திறக்கவில்லை.”

“என்ரை மகள் அல்லது மூத்தவன் இவையளுக்கு ரெலிபோன் பண்ணி நடந்த விடயத்தைச் சொல்லியிருக்கக்கூடும். மற்றைய இரண்டு மகன்மாரிட்டை நான் போகேல்லை. அங்கே போனாலும் இதேகதிதான். என்ரை பழைய மாணவன் செல்லகண்டர் என்ரை நினைவுக்கு வருகுது.”

செல்லக்கண்டன்ரை வீட்டுக்கு நான் போறன். நான் சூட்கேசுடன் வந்து கொண்டிருப்பதை அவர் பார்க்கின்றார். ஓடோடிவந்து அவர் என்னிடமிருந்த சூட்கேசைப் பறிக்கின்றார். அவர் மனைவி சுபத்திராவும் அவருடன் நான் வாய்பேச முடியாமல் தவிக்கிறேன். என் கண்களில் கண்ணீர். அவர்களுக்கு திகைப்பு.

அவர்கள் என்னை வாயே திறக்கவிடவில்லை. என்னை அணைத்தபடியே அவர்கள் வீட்டிற்குள் அழைத்துச் செல்கின்றனர்.

“ஐயா. முதலிலை காலைக்கடன்களை முடியுங்கோ. சாப்பிட்டுவிட்டு எல்லாம் கதைக்கலாம.”

உரிமையுடன் கூறுகின்றனர்.

செல்லக்கண்டர் அவரது மனைவி மகன் நாங்கள் மூண்டு பேரும் பகல் உணவருந்துகின்றோம்.

“சாப்பாடு முடிஞ்சுது. சரி, இப்ப சொல்லுங்கோ. என்ன நடந்தது?”

எனக்கு நடந்த அக்கிரமங்களை நான் திக்கித் திணறி கூறுகின்றேன்.

“ஐயா நாங்கள் இருக்கிறம். நீங்கள் ஒண்டுக்கும் யோசிக்க வேண்டாம். உங்களுக்கு வேண்டிய எல்லாவற்றையும் நாங்கள் செய்யத் தயாராயிருக்கிறோம். நீங்கள் தயங்காமல் உங்களுக்கு என்ன வேணும் எண்டு சொல்லுங்கோ.”

“பிள்ளையள். நான் தங்கிறதுக்கு ஒரு சின்ன அறை வேணும். உங்களுக்குக் கிட்டடியிலை எங்கையாவது எடுத்துத்தந் தால் பெரிய உதவியாயிருக்கும்.”

“ஐயா உங்களுக்குப் பயித்தியமா. எங்களிட்டை இந்தப் பெரிய வீடு கிடக்கு. நாலு பெரிய அறையள். நாங்கள் மூண்டு பேர் தான். நீங்கள் தாராளமாய் இங்கை எங்களோடை இருக்கலாம். நீங்கள் இஞ்சை எங்களோடைதான் கட்டாயம் இருக்கப் போறியள்’ இருவரும ஏக்காலத்தில் கூறுகின்றனர்.”

“பிள்ளையள் அது ஒத்துவராது.”

“ஏன் ஐயா?”

“இப்ப இது சரியாயிருக்கலாம். எதிர்காலத்திலை என்னை நீங்கள் உங்களோடை வைச்சிருக்கிறதாலை உங்களுக்கு அவப் பேர்தான் வரும்.”

“அப்பிடி என்ன அவப்பெயர் வரப்போகுது ஐயா.”

“என்ரை சொத்தெல்லாத்தையும் அமர்த்திறதுக்குதான் நீங்கள் என்னை உங்களோடை வச்சிருக்கிறியள் எண்டு என்ரை மகளும் அவளின்ரை சகோதரங்கள் எல்லோரும் சொல்லித்திரி வினை. என்னாலை உங்களுக்கு வீண் அவப்பெயர் தான் ஏற்படும்.”

“அதைப்பற்றி எங்களுக்குக் கவலை இல்லை ஐயா. உங்களாலைதான் நாங்கள் இண்டைக்கு உயர்ந்த நிலையிலை இருக்கிறம் ஐயா.”

“நான் உங்களுக்கு அப்படி என்ன பெரிசாய்ச் செய்து போட்டன்?”

“ஐயா, நான் படிக்கிறதுக்கு எவ்வளவு புத்தகங்கள் கொப்பியள் வாங்கித் தந்தியள். உடுப்புகள் வாங்கித் தந்தியள். ஏன் சாப்பாடு கூட எத்தினை நாட்கள் வாங்கித் தந்தியள். இதை என்னாலை எப்படி மறக்கேலும்?”

உணர்ச்சி மயமாய் கூறுகின்றார் செல்லக்கண்டர்.

“நான் ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், தமிழ் ஆகிய பாடங்களிலை புலமை பெற்று பேராசிரியராய் இஞ்சை சேவை புரிவதற்கு நீங்கள் தானே எனக்கு வழிகாட்டினியள். இதுக்கு ஈடாய் என்னாலை என்னத்தைச் செய்யேலும் சேர்.”

செல்லக்கண்டர் நன்றியுணர்வுடன் கூறுகின்றார்.

“மூன்று குமருகளையும் அம்மாவையும் விட்டிட்டு என்ரை அப்பன் ஓடிட்டார். அப்பம் சுட்டு வித்து கூலிவேலை செய்து எங்களை வளத்தா, எங்களை பெத்த அன்புத்தாய்.”

“எங்கடை அவலநிலையைப் பார்த்து மனமிரங்கி நீங்கள் உங்களுடைய மாணவனாயிருந்த செல்லக்கண்டர் ஆசிரியரை எனக்குக் கல்யாணம் செய்து வைச்சியள்.”

“எங்கடை இந்தச் சிறந்த வாழ்க்கைக்கு நீங்கள் தானே காரணம். அப்படிப்பட்ட உங்களுக்கு உதவாமல் எப்படி எங்களாலை நிம்மதியோடை இருக்கமுடியும் சேர்?”

சுபத்திரா திக்கித் திணறி நன்றி உணர்ச்சியுடன் கூறுகின் றாள்.

“சரி. இப்ப நான் உங்கட வீட்டிலை தங்கியிருக்கிறன். ஆனா ஒரு நிபந்தனை'. நான் தங்கியிருக்கிறதுக்கு ஒரு அறை எடுத்துத் தர வேணும்.”

வேறு வழியின்றி அவர்கள் இருவரும் ஒப்புக் கொள்கின்றனர்.

ஒப்புக்கொண்டபடி செல்லக்கண்டர் எனக்கு வசதியான ஒரு அறையை எடுத்துத் தந்தார். ஏழுவரியங்களாய் நான் அந்த அறையிலைதான் இருக்கிறன்.

இந்தப் பகுதியிலை இருக்கிற வசதி குறைஞ்ச குடும்பங் களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு ஆங்கிலம், கணிதம், விஞ்ஞான பாடங்கள் கற்பிக்கிறன். அதுவும் இலவசமாய்த்தான் படிப்பிக்கிறன்.

என்னட்டைப் படிக்கிற பிள்ளைகளிலை கனபேர் தேர்வுப் பரீட்சைகளிலை திறமையாகச் செய்து புலமைப்பரிசில்களைப் பெற்று பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகி படிக்கின்றார்கள். இதைப் பார்க்க எனக்கு பெரும் மனத்திருப்தி. இதிலும் பார்க்க எனக்கு என்ன செல்வம் வேண்டிக்கிடக்கு தம்பி. என்ரை ஐஞ்சு பிள்ளை யளின்ரை குடும்பங்களும் செல்வச் செழிப்பாய்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார் கள். தங்களோடை வந்து இருக்கச் சொல்லி எத்தனையோ தடவைகள் என்னை மண்டாட்டமாய்க் கேட்டினை. நான் மறுத்துப் போட்டன். அவை அவையளோடை. நான் என்ரை பாட்டிலை சுதந்திரமாய் நிம்மதியாக சந்தோசமாய்த் தான் இருக்கிறன்.

அந்த ஐஞ்சு குடும்பங்களும் சீரழிஞ்சு கொண்டிருக்குது. அவையுக்கை போட்டி, பொறாமை அடிக்கடி சண்டையள் சச்சரவு கள் ஒண்டோடை ஒண்டு பேச்சல் பறச்சலில்லை. ஒண்டையொண்டு திட்டித் தூற்றி கொண்டிருக்குதுகள்.

“அதுகளின்ரை பிள்ளையள் கூட தாய்தகப்பனாக்களைப் போலைத்தான்.”

எனக்கு பென்னம் பெரிய குடும்பமிருக்குத்தம்பி. என்னட்டைப் படிக்கிற ஏழெட்டு பிள்ளையளின்ரை அத்தனை குடும்பங்களும் நெருங்கிய உறவுப்பற்றோடையும் பாசத்தோடையுமிருக்கிறது. எனக்கு ஏதாவதெண்டால் அத்தனை குடும்பங்களும் துடியாய்த் துடிக்குதுகள்.

“தம்பி என்ரை கடைசிக்காலம் என்ரை சொந்த மண்ணிலை தான். இது நிச்சயம் நடக்கும்.”

“நான் இன்னும் பத்து பதினைஞ்சு வரியங்கள் உயிரோடை யிருப்பன் எண்ட உறுதியான நம்பிக்கை எனக்கிருக்கு. அதுக்கிடை யிலை இந்த நவீன நரகாசுரரின்ர ஆட்டம் முடிஞ்சுபோம். எங்கடை நாட்டிலை நிச்சயமாய் அமைதியான நிலை ஏற்படும். எங்களிட்டை அடாவடித்தனமாய் பறிக்கப்பட்ட நிலங்கள் நிச்சயமாய் எங்கடை கைக்கு வரத்தான் போகுது.”

தம்பி நான் நிச்சயமாய் ஊருக்குப் போவன்.

என்ரை உயிர் அந்த மண்ணிலைதான் போகும். எனக்கு இப்ப எழுபத்தியிரண்டு வயது. இடைக்கிடை நோய் நொடி வரத்தான் செய்யுது. ஆனால், நான் என்ரை உடலிலை கவனமாய்த்தானிருக் கிறன்.

“போன இரண்டு கிழமையாய் அரசாங்க ஆஸ்பத்திரி வாட்டிலை இருந்தன். எனக்கு குடலிறக்க நோய். ஒப்பரேசன் செய்து குணமாக்கிப் போட்டினை. முந்தநாள்தான் நான் ஆஸ்பத்திரி வாட்டிலையிருந்து வெளிவந்தனான்.”

“நான் எங்கடை ஊருக்குப் போன பிறகு எங்களிட்டை ஒப்படைக்கப்பட்ட நிலங்களை எங்கடை வசாவிளான் மத்திய மகா வித்தியாலய அபிவிருத்திக்குக் கையளிக்க முடிவெடுத்திட்டன். இஞ்சை அவுஸ்திரேலிய வங்கியிலையுள்ள நிலையான வைப்புப் பணத்தை எடுத்து எங்கடை மகாவித்தியாலய விஞ்ஞான ஆய்வுகூடத்தையும் நூல் நிலையத்தையும் விஸ்தரித்து மேம்படுத்துவதற்கு நன்கொடையாய் குடுக்கப்போறன். இதுக்கு வழிவகுக்க என்ரை மரணசாசனத்தை (உயில்) செல்லக்கண்டற்ரை உதவியோடை தயாரித்து ஆஸ்திரேலியாவிலும் இலங்கையிலும் பதிஞ்சு போட்டன். இப்ப எனக்கு பெரும் மனநிம்மதி.”

நான் இறந்தபிறகு செய்திப் பத்திரிகைகளில் பிரசுரிக்கிற துக்கு மரண அறிவித்தலையும் தயாரித்துப்போட்டன். அதையும் அதுக்கான விளம்பரக் கட்டணத்தையும் செல்லக் கண்டரிட்டை ஒப்படைச்சுப் போட்டன்.

"**வசாவிளானைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் வசாவிளான் முன்னாள் ஆசிரியரும், காலஞ் சென்றவர்களான அன்னமயில் ஆசிரியையின் அன்புக் கணவரும் வண்ணமயிலின் பாசத் தந்தையு மாவார். சுப்பிரமணிய ஆசிரியர் ஆஸ்திரேலியாவில் மரணமானார்**"

தனது உடலை எதுவித சடங்கு சம்பிரதாயங்களுமின்றி, அது கெட்டுப் போவதற்கு முன் யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர் களின் ஆய்வுக்கு கூடிய விரைவில் ஒப்படைக்க வேண்டும் என்று அவர் எழுதி செல்லக்கண்டரிடம்தான் ஒப்படைத்துள்ளார்.

"தம்பி உன்ரை மகளும் சுப்பர் மாக்கற்றிலையிருந்து சாமான் களை வாங்கிக் கொண்டு வந்திட்டா. எனக்கும் பஸ்வாற நேரமாச்சு. நீங்கள் போட்டு வாருங்கோ."

மன நிறைவுடன் கூறுகின்றார்.

"ஐயா வெய்யிலும் ஏறிட்டுது. நீங்கள் நல்லாய்களைச்சுப் போனியள். எங்களோடை காரிலை வாருங்கோ. உங்கடை இடத்திலை கொண்டு போய் விடுகிறம்."

என்ரை மகள் அவரை கேட்கிறாள்.

"புள்ளை இண்டைக்கு நீங்கள் என்னை உங்கடை காரிலை கொண்டுபோய் விடலாம். ஆனால், நாளைக்கு அடுத்த நாளைக்கு இவ்வளவு நாளும் நான் பயணித்த பாதையில் இறுதிவரை சென்று கொண்டிருப்பன் எண்ட மனஉறுதி எனக்குண்டு."

எதுவித சலனமுமின்றிக் கூறுகின்றார் பெரியவர்.

பெரியவர் பெரியவர்தான்.

★

2013

# முறிவு

அதிகாலை.

நிலம் வெளிப்பு.

அவனுடய வாழ்க்கையிலும் தான் வெளிப்பு.

இடுப்பில் வேட்டி, இறுகக் கட்டிய சால்வை.

கையில் வெட்டுக்கத்தி.

கண்களில் தீக்கங்குகள்.

நெஞ்சில் சுனாமி.

அவன் நடந்து கொண்டிருக்கின்றான்.

மனதில் ஆயிரம் கேள்விகள்.

"என்ன வேலாயுதம் விடியுது விடிய முந்தி கையும் கத்தியுமாய்?"

எதிரே வந்துகொண்டிருக் கின்ற கோழிச் சிதம்பரி கேள்வி.

பதிலில்லை.

வேலாயுதம் வேகமாய் சென்றுகொண்டிருக்கின்றான் .

“என்ன தம்பி வேலாயுதம்? அவசர அவசரமாய்? ஏதாவது சோலியாய் போறியோ?“

லச்சுமணன் கந்தையா கரிசணையாய் விசாரிப்பு.

பதிலில்லை.

புயலாய் போய்க்கொண்டிருக்கின்றான் வேலாயுதம்.

“இவனுக்கென்ன நடந்தது?“

“கோபாவேசமாய்ப் போய்க்கொண்டிருக்கின்றாரே, இவரை ஒருநாளும் இந்தக் கோலத்தில் நான் பார்த்ததில்லையே?“

“வேலாயுதண்ணை என்ன விடியுது விடிய முந்தி கையும் கத்தியுமாய்? வாழைக்குலைத் தரகன் தறுமனைத் தேடிப்போறியா?”

கந்தையனின் கரிசனையையும் பொருட்படுத்தாதவராய் செல்கின்றான் ருத்ரமூர்த்தியாய் வேலாயுதம்.

ஒரு நாளாவது வேலாயுதண்ணர் இப்பிடி நடந்ததில்லையே.

இவரேன் இப்பிடி கோபக்காரராய்ப் போய்க் கொண்டிருக கின்றார்?

மனக்கிலேசமாய்.

வேலாயுதம் ஒன்றையும் பொருட்படுத்தாதவனாய் போய்க் கொண்டிருக்கின்றான் சிவன் கோயிலடிக்கு.

“நடேசன் ஒரு வேளை உதயகாலப் பூசைக்கு வந்திருப் பானோ? ஒருக்கால் போய்த்தான் பாப்பமே.”

“சிவன் கோயிலடிக்கு போகின்றார்.”

“வேலாயுதம் தோட்டக்காறன்.”

“அவருக்கு ஏழுபரப்பு தோட்ட நிலம்.”

அந்தத் துண்டு நிலத்தில் போகத்துக்குப் போகம் மாற்றுப் பயிர்ச்செய்கை.

புகையிலை, வெங்காயம், சிறுதானியம், மரவள்ளி சிறுதுண்டு நிலத்தில் காய்கறி பயிர் செய்கையும் கூட.

சிறுவயதில் பெற்றோரை இழந்து விட்டான் வேலாயுதம்.

முதலில் தாயார். ஆறுமாதங்கள் கழித்துத் தந்தை.

வேலாயுதத்திற்கு ஒரே ஒரு சகோதரி.

சகோதரி திருமணம் முடித்து மகள் பத்து வயது.

வேலாயுதம் சகோதரியுடன் தான் இருப்பு.

சிறிய வீடு. ஒரே ஒரு அறை. இரண்டு பக்கமும் திண்ணைகள். ஒத்தாப்பில் குசினி.

வேலாயுதம் திண்ணையில் படுத்துறக்கம்.

காலப் போக்கில் சகோதரியின் மகள் பூப்படைவு.

"அக்கா, நான் தனிய இருக்கப் போறன்."

"என்ன நீ திடீரென தனிய இருக்கப் போறன் எண்டு செல்லிறாயடா தம்பி?"

"அக்கா, உன்ரை மகள் பூரணமும் பெரியவளாகி விட்டாள். இடநெருக்கடி. அதுதான் நான் தனியப் போய் இருந்தால் வசதிதானே."

"தம்பி. நீ எங்கே இருக்கப் போகிறாயடா?"

"எங்கடை சிவன் கோயிலுக்கு பக்கமாய் உன்ரை பனங்காணி கிடக்கல்லே?"

"ஓ. அதுக்கிப்பென்ன?'

அதுக்கு பக்கத்திலை நாலு பரப்பிலை ஒரு வளவு கிடக்குத்தானே?"

"ஓ. கனகாலமாய் அந்த வளவு சும்மாதான் கிடக்கு."

"காடு பத்துது."

அக்கா. எவ்வளவு காலமெண்டு நான் உங்களோடை முட்டுப்பட்டுக் கொண்டு இந்த வீட்டிலை இருக்கேலும்.

"அப்பென்ன செய்யப் போறாய்?"

"அந்தப் பனங்காணிக்குப் பக்கத்திலை கிடக்கிற வளவுக்க ஒரு சின்னக் கொட்டில் போடப் போறன்"

"தம்பி. இஞ்சைபார். அந்த கொட்டிலுக்கை நீ என்னண்டு சீவிப்பாய்? சமையல் சாப்பாடு படுத்தெழும்பிறது எல்லாத்துக்கும் அந்தக் கொட்டில் போதுமே?"

"அப்பென்ன செய்யிறது அக்கா."

அந்தப் பனங்காணிக்கை நிக்கிற சில வயிரப் பனையைத் தறிச்சு, ஒரு சின்ன வீட்டை போடு. இரண்டு அறையள், ஒரு குசினி. தலை வாசலும். வேணுமெண்டால் வீடு போடிறதுக்கு நானும் உதவி செய்யிறன்.

“சரி அக்கா அப்பிடிச் செய்வம்”

“அப்ப உனக்கு சாப்பாடு?”

“வீடு கட்டு மட்டும் நீ தருவாய் தானே?”

“அதுக்குப் பிறகு”

“கொஞ்ச நாளைக்கு எனக்கு நீ சமைக்கப் பழக்கிவிடு. அதுக்குப் பிறகு நான் என்ரை பாட்டை பாத்துக்கொள்ளுவன்.”

தன் நம்பிக்கையுடன் வேலாயுதம்.

ஆரம்பத்தில் வேலாயுதத்திற்கு சற்று சிரமமாய்த்தானிருந்தது.

காலப்போக்கில் அவனுக்கு எல்லாம் பழக்கமாகிவிட்டது.

வேலாயுதம் ஒரு நேரம் தான் சமயல். சோறு, இரண்டு கறியள். அவ்வளவுதான்.

மச்சமாமிசமில்லை.

மதியச் சாப்பாடு. பகல் இரண்டு மணியளவில் சோறு. இரவுச் சாப்பாடு பத்து மணியளவில், மிகுதிச் சோறு கறிகள்.

காலைச்சாப்பாடு?

வேலாயுதத்தின் வீட்டுக்குப் பக்கத்தில் அக்காவின் பனங் காணி.

பனங்காணிக்குள் நிற்கின்ற ஆறேழு பனைகளை நிபந்தனை யுடன் கள்ளுச் சீவக் கொடுத்துள்ளான் வேலாயுதம்.

காலையில் ஒரு போத்தல், மாலையில் ஒரு போத்தல் கள்ளு இலவசமாய் கொடுக்க வேண்டுமென்ற நிபந்தனை.

அரைப் போத்தல் கள்ளை வேலாயுதம் குடித்துவிட்டு தோட்ட வேலைக்குப் போவான்.

தோட்டமும் வீட்டுக் கிட்டத்தான். கூப்பிடு தூரத்தில்.

வேலாயுதத்தின் தோட்டத்தில் தெற்குப் புறமாய் ஆயிரம் கண்டு வாழை.

வடக்குப் புறமாய் போகத்துக்குப் போகம் வெங்காயம், சாமி குரக்கன் மாற்றுப் பயிர் செய்கை.

தோட்டச் செய்கைக்கு பணம்?

வேலாயுதம் தூரத்து உறவினர் கோயில் தர்மகர்த்தா முக்கந்தர் நடேசரிடம் கடன் எடுப்பான். கடும் வட்டிக்குத்தான் பணம் கொடுப்பார் நடேசனர்.

புகையிலை அல்லது வெங்காயம் வித்த கையோடை வேலாயுதத்திடமிருந்து வாங்கின கடனை வட்டியுடன் முதலை காறராக அறவிட்டு விடுவார்.

வேலாயுதம் கடும் உழைப்பாளி. அதேவேளை அவன் உல்லாசப் பிரியன்.

அவனிடம் ஒரு ரலி பைசிக்கிளுண்டு.

கோயில் திருவிழாக்கள், கூத்துகள், நாடகங்கள் வண்டில் சவாரிகள் எதையும் அவன் விட்டு வைக்க மாட்டான்.

தென்னிந்தியாவிலுள்ள சிதம்பரக் கோயில் திருவிழாவிற்கு வருடா வருடம் செல்லத் தவறமாட்டான்.

ஒரு நேரச் சமயல். மரக்கறிச் சாப்பாடு.

காலை உணவு ஒரு போத்தல் பனங்கள்ளு மட்டும், இரு தடவைகளில்.

தோட்ட வேலை முடிந்து வந்து பகல் இரண்டு மணிக்கு சாப்பாடு.

சிறிது நேரக் கோழித்தூக்கம்.

நாலு மணிக்கு தோட்ட வேலை தொடங்குவான். இரவு ஏழுமணி வரை தோட்டத்தில் வேலை.

கொத்து வெட்டு, தண்ணீர் இறைப்பு, மாடுகளுக்கு தீன் சேகரிப்பு. கனகச்சிதமாய் வேலை.

அயல் தோட்டக்காரர்களுடன் நல்லுறவு. அவர்களும் அவனுடன் அவ்வாறே.

நிலம் கொத்து வெட்டு தண்ணீர் இறைப்புப் போன்ற சகல வேலைகளிலும் அவர்கள் எல்லோரும் பரஸ்பர ஒத்துழைப்பு. கூட்டுச் செயல்பாடு.

அவன் இல்லாத நாட்களில் அவனுடைய தோட்ட வேலைகள் அனைத்தும் அயல் தோட்டக்காரர்களே செய்வார்கள். அதே போலத்தான் வேலாயுதமும் உதவி ஒத்தாசை.

வேலாயுதத்திற்கு வயதேறிக் கொண்டு செல்லல்.

அவனுடைய சகோதரி அல்லது நெருங்கிய உறவுகள் கல்யாணப் பேச்செடுக்கும் போதெல்லாம் வேலாயுதம் தட்டிக் கழிப்பு.

சுதந்திரப் பறவையாய்த் திரிய வேண்டுமெண்ட எண்ணம்.

வயது அவற்றை எண்ணத்துக்கு இடம் விட்டு வைக்குமா?

வேலாயுதத்துக்கு முப்பது வயதுக்கு மேலாகி விட்டது.

இனித் தாமதிக்க முடியாயதெண்ட நிலை. வேலாயுதத்தின் அக்கா வேறு வழியின்றி நடேசரை நாடிச் செல்கின்றார்.

வேலாயுதம் நடேசருக்கு மடக்கம்.

நடேசருக்கு ஊரில் நல்ல செல்வாக்கு.

நடேசர் ஊரில் நாட்டாமை.

ஊரில் மாத்திரமல்ல ஊருக்கு வெளியே அயல் ஊர்களிலும் அவருக்கு மதிப்பு.

பழம் நழுவிப் பாலில் விழுந்த மாதிரி நடேசருக்கு.

தன் ஊருக்கு தெற்கே நாலு கிராமங்களுக்கப்பால் ஒரு சிற்றூர்.

அந்தச் சிற்றூர் அரைக் கிராமம் அரைப் பட்டணம்.

தொழிற்துறைகள், சமூகக் கட்டுக்கோப்பு, பழக்க வழக்கங் கள் எல்லாமே இரண்டுங் கெட்டான் நிலை.

நடேசருக்கு செல்லப்பா என்றொரு நண்பன். இருவருக்கும் நெருங்கிய தொடர்பு நீண்டகாலமாய்.

செல்லப்பர் ஈரொட்டு வியாபாரம். அத்துடன் மாட்டுத்தரகர், கல்யாணத் தரகரும் கூட.

நொடிந்துபோன குடும்பம். பொறுப்பற்ற மகன். வயதேறிக் கொண்டிருக்கும் மகள்.

செல்லப்பர் கையறு நிலை.

நடேசர் செல்லப்பருக்கு தோள்கொடுத்து உதவ முன்வரு கின்றார். தேவைப்படும்பொழுது பண உதவி.

இருவரும் இடைக்கிடை குடி. போதை தலைக்கேறும் நாட்களில் நடேசர் செல்லப்பர் வீட்டில் இராத்தங்கல்.

செல்லப்பரின் மகள் கனகசுந்தரியை வேலாயுதத்திற்குக் கட்டி வைக்க முன் வருகின்றார்.

மகளுக்கு சீதன பாதனம் கொடுக்க செல்லப்பருக்கு வக்கில்லை.

நடேசரின் அழுங்குப்பிடியில் வேலாயுதம்.

வேலாயுதம் நடேசரை மனதார நம்புகின்றார்.

செல்லப்பரின் மகள் கனகசுந்தரி அங்க லட்சணம், நடேசர் குடும்பத்தில் மதிப்பு, செயல்திறன் பற்றி வேலாயுதத்திற்கு விலா வாரியாக எடுத்துரைப்பு.

வேலாயுதத்திற்கும் கனகசுந்தரிக்கும் திருமணம் நிறைவேற்றம். தாலி கூறை மாப்பிளைக்கு பட்டு வேட்டி சால்வை கல்யாண வீட்டுச் சாப்பாடு எல்லாச் செலவும் நடேசன் தான்.

எல்லோரும் நடேசரைப் போற்றிப் பாராட்டுகின்றனர்.

வேலாயுதத்திற்கு வியப்பு திகைப்பு.

நடேசரை வேலாயுதம் மனசார போற்றிப் பாராட்டுகின்றான்.

வேலாயுதத்தின் குடும்பத்துடன் உறவு இறுக்கம் நடேசருக்கு.

நடேசர் பெரும் புள்ளி.

அவர் எதைச் சொன்னாலும் அதை ஊர் மக்கள் ஏற்பு. அவர் சொல்வதைச் செய்கின்றார்கள் பெரும் பகுதி மக்கள். அவ்வளவு செல்வாக்கு நடேசருக்கு.

நடேசர் நீண்ட காலமாக கிராம சபைத் தலைவராக இருந்து வருகின்றார்.

பண பலம் தான் நடேசரின் பெருமதிப்புக்குக் காரணம். அவ்வூர் சிவன் கோயில் மணியம் பதவி நடேசரிடம்தான்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் பதவி ஆரம்பத்திலிருந்து இன்று வரை நடேசரிடம்தான்.

நடேசர் தினசரி சிவம் கோயிலுக்குப் போய் வருவார்.

கோயில் மணியம் என்ற கோதாவில் கோயில் நிர்வாகம் வரவு செலவு எல்லாம் அவர் கையில்.

தினசரி மாலை ஐந்து மணிக்கு அவர் கோயிலுக்கு செல்வார். கோயில் தொண்டு முடிந்து இரவு எட்டு ஒன்பது மணியளவில் தான் அவர் வீடு திரும்புவார். சில நாட்கள் உதயகாலப் பூசைக்கும் செல்வார். நடேசர் தினசரி இரவு வீடு செல்லும் பொழுது வேலாயுதம் வீட்டில் இடைத்தங்கல்.

நடேசரின் மனைவி நீண்ட காலமாய் நோயாளி.

சமயலும் நோயாளியைப் பராமரிப்பதும் நடேசரின் விதவைச் சகோதரி.

இரவு பத்து மணிக்குத் தான் வீட்டுக்குச் செல்வார் நடேசர்.

நடேசர் முருக பக்தர்.

தோய்த்து உலர்ந்த நாலுமுழ வேட்டி.

சால்வைத்துண்டு கோயிலுக்குச் செல்லும் வேளைகளில் நெற்றி நிறைய திருநீற்றுப் பட்டை. கழுத்தில் உருத்திராட்சப்பட்டை. தோற்றம் குட்டை.

கோயிலில் காலத்துக்குக் காலம் மாலை வேளைகளில் நடைபெறும் புராண படலங்கள் படிப்பிற்கு நடேசர்தான் நீண்ட காலமாக முன்றில்.

பக்தர்கள் மத்தியில் நடேசருக்கு பெருமதிப்பு.

திருமணத்தின் பின் வேலாயுதத்தின் குடும்பத்தில் அவருக்கு கூடிய கரிசினை. அக்கறை. அக்குடும்பத்தில் வருவாயை அதிகரிக்கும் நோக்குடன் பல்நோக்கு கூட்டுறவுச் சங்க இரவு காவலாளியாக வேலாயுதத்தை நடேசர் நியமிப்பு.

மாலை ஆறு மணியிலிருந்து காலை ஆறுமணி வரை வேலாயுதம் சங்ககாவலாளி பதவி. சுமார் சம்பளம்.

நடேசருக்கு நல்ல வாய்ப்பு.

அன்று வேலாயுதத்திற்கு சாடையான வயிற்று வலி.

இரவு பத்து மணியளவில் வலி தாங்க முடியவில்லை.

சங்கத்திற்கு முன்னாலுள்ள வீட்டில் சுடுதண்ணி வாங்கிக் குடித்தும் வலி தாங்க முடியவில்லை.

முன் வீட்டு செல்லையாவை சங்கத்தைப் பார்த்துக் கொள்ளும்படி கூறிவிட்டு தன் வீட்டிற்கு செல்கின்றான் வேலாயுதம்.

வீட்டுப் படலையடிக்கு செல்லும் பொழுது கெக்கலியிட்டு சிரித்து கதைப்பது கேட்கின்றது வேலாயுதத்திற்கு.

‘இந்த நேரத்தில் யாராக இருக்கும்?’

தலைவாசலிலுள்ள சாய்மனைக் கதிரையில் நடேசர் சாய்ந்திருப்பு.

சாய்மனைக் கதிரைச்சட்டத்தில் சுந்தரி இருப்பு.

“வேலாயுதத்தை நினைக்க எனக்கு பரிதாபமாய்க் கிடக்கு”

நடேசர்.

“ஏன்?”

சுந்தரி.

“அவன் இருக்க வேண்டிய இடத்திலை நான் .....”

"விட்டுத் தள்ளுங்கோ அந்தக் கையாலாகாதவன்ரை கதையை."

சுந்தரியின் வார்த்தைகளில் வெறுப்பு.

"கல்யாணம் கட்டிறதுக்கு முன்னம் மூண்டு வரியங்களாய் இடைக்கிடை நாங்கள் ஒண்டாயிருந்தம். ஆனா இப்ப அடிக்கடி."

நடேசர்.

"எடே நடேசா!"

இடி முழக்கமாய் வேலாயுதம்.

கிடுகுத் தட்டியைத் தூக்கி விட்டு தலைதெறிக்க ஓட்டம் நடேசர்.

இருள் நடேசருக்குப் பாதுகாப்பு.

கனகசுந்தரியும் இருளில் ஓடி மறைவு.

கையில் வெட்டுக்கத்தியுடன் வேலாயுதம் இருவரையும் இரவிரவாய் தேடி அலைகின்றார்.

இன்னும் விடியவில்லை.

பலன்? விரக்தியுடன் வீடு திரும்புகின்றார் வேலாயுதம்.

சுந்தரியின் உடுப்புக்களிருக்கின்ற 'சூட்கேசை' எடுத்து வந்து கேற்றுக்கு வெளியே வீசுகின்றார்.

கிணற்றடிக்குச் சென்று நான்கு வாளி தண்ணீரை அள்ளி தலையில் ஊற்றுகின்றார்.

அயல் வீட்டு வேலி மறைவில் ஒளிந்திருந்தும் மலைப்புடன் பார்த்தபடியே சுந்தரி.

இடுப்பில் வேட்டி. இறுகக்கட்டிய சால்வை.

கையில் வெட்டுக் கத்தி.

வீட்டை விட்டு வெளியேறி நடந்து கொண்டிருக்கின்றார் வேலாயுதம்.

சிறிது தூரம் சென்றதும் திரும்பி தன் வீட்டைப் பார்க்கின்றான்.

உள்ளத்தில் எரிமலை.

நடந்து கொண்டிருக்கின்றான் வேலாயுதம்.

★

2014

# அர்ப்பணம்

"இண்டைக்கு மத்தி யானச் சாப்பாடு நீ என்னோடை தான்."

தோழர் ஹென்றி, கிருஷ் ணன் குட்டித் தோழருக்கு கூறு கின்றான்.

கிருஷ்ணன் குட்டி ஹென் றியை வியப்புடன் பார்க்கின்றார்.

"என்ன பார்க்கிறாய் கூட் டம் முடிஞ்சுதுதானே வா சாப்பிடப் போவம்". ஹென்றி.

"எங்க போறது, சைவக் கடைக்கா அல்லது மாத்தறை "பத்" கடைக்கா? அல்லாட்டி யூனியன் பிளேசில் உள்ள ஹோட் டல் "நிப்பனுக்கா"? கேலியாய் கிருஷ்ணன் குட்டி.

"இல்லை டீ மெல் ஸ்றீற் றில உள்ள ஹோட்டலுக்கு".

"டீ மெல் ஸ்றீற்றில புதுசா ஹோட்டல் திறந்திருக்கா?"

"வந்து பாரன்".

"பெரிய ஹோட்டலா?"

"டீ மெல் ஸ்றீற்றில உள்ள இரண்டுமாடிக் கட்டிடத்திலை கீழ் மாடியிலைதான்".

"அந்தக்கட்டிடத்திலை எங்கட கட்சிக் காரியாலயமெல்லோ இருக்குது". குட்டி வியப்பாய்.

"மேல கட்சிக் காரியாலயம், கீழ ஒரு பக்கமாய் தோழர் லூயிஸ் ஐயாவின்ரை டெயிலறிங் கடையை அடுத்த பகுதியில்தான் என்ர ஹோட்டல்". ஹென்றி கிண்டலாய்.

அவர்கள் இருவரும் டீ மெல் வீதியை நோக்கி நடந்து கொண்டிருக்கின்றனர்.

"தோழர் குட்டி உங்களைப்பற்றி நான் நிறையக் கேள்விப் பட்டிருக்கிறன்".

"என்ன கேள்விப்பட்டிருக்கிறாய்?"

"நீங்கள் இந்தியாவிலுள்ள கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர் தானே?'

"ஆமாம் கேரளத்திலை ஏர்ணாகுளம்".

"உங்கடை குடும்பம் பற்றி சொல்லுங்களேன்"

"எங்கட குடும்பத்திலை மூண்டுபேர், நான், என்ர மனைவி, மற்றது என்ர மகள்."

"அவை என்ன செய்யினை?"

"என்ர மனைவி ஆசிரியை. மகள் படித்துக்கொண்டிருந் தாள்."

"அவர்களை விட்டிட்டு நீர் ஏன் இஞ்சை வந்தீர்?"

"வேலை தேடி."

"இஞ்சை என்ன வேலை செய்யிறீர்?"

"திருகோணமலையில் கடற்படைத்தளம். அங்கதான் வேலை."

"என்ன வேலை?"

“கடற்படைத்தளத்திலுள்ள உணவுச் சாலைக்குப் பொறுப்பாயிருந்தன்.”

“எவ்வளவு காலம்.”

“ஆறு மாதங்கள்தான்”.

“அந்த வேலையை ஏன் விட்டியள்?”.

“அந்த கடற்படைத் தளத்திற்கு முன்னால் ஒரு பெரிய பீரங்கி. அதின்ர குழாயில நான் பெரிய அரிவாள். சுத்தியல் சின்னத்தை வெள்ளை பெயின்ரால வரைஞ்சன். நான்தான் இதைச் செய்தன் எண்டதை அறிஞ்ச தளப்பொறுப்பதிகாரி என்னை விசாரணைக்கு உட்படுத்தினான்”.

“என்ன நடந்தது விசாரணையில?”.

“நான் கேரள மாநிலத்தைச் சேர்ந்தவன் எண்டது தெரிய வந்ததும் என்னை எச்சரித்து வேலையிலிருந்து நீக்கிவிட்டான்”.

“அதுக்குப்பிறகு என்ன நடந்தது?”

“நான் கம்யூனிஸ்ட் கட்சியின் முழு நேர ஊழியனானேன். நான் கட்சி வேலையைச் செய்ததுடன் துறைமுகத் தொழிலாளரை ஒன்று திரட்டி ஒரு தொழிற்சங்கத்தை அமைத்தன்”.

“அதன் பின்?”.

“தொழிற்சங்கம் காலத்துக்குக் காலம் பல போராட்டங்களை நடாத்தி, தொழிலாளருக்கு பல உரிமைகளைப் பெற்றுக்கொடுத்தது. இப்ப நான் மட்டக்களப்புக்கு வந்து கட்சி வேலையையும் தொழிற்சங்க வேலையையும் தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறன்”.

அவர்கள் இருவரும் டீ மெல் வீதியில் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகம் அமைந்துள்ள இடத்தை வந்தடைகின்றனர்.

“இது எங்கட கட்சிக் காரியாலயமல்லவா?” வியப்பாய்க் குட்டி.

“ஆமாம் கீழ இரண்டு அறைகள், ஒண்டில லூயிஸ் தோழற்றை தையல் நிலையம், மற்றது என்ர அறை. மேலதான் கட்சிக் காரியாலயம்”.

இருவரும் உள்ளே செல்கின்றனர்.

நேரம் பிற்பகல் இரண்டு மணியிருக்கும். காலை பத்து மணிக்கு தொழிற்சங்கக் கூட்டம் தொடங்கியது. கொஞ்ச நேரம் முந்தித்தான் கூட்டம் முடிந்தது. இனி மூண்டு மணிக்குத் துவங்கி இரவு ஏழு அல்லது எட்டு மணிக்குத்தான் முடியும்.

“பசி வயிற்றை விறாண்டுது”.

“குட்டி இருங்கோ சாப்பிடுவம்”.

இருவரும் சாப்பிடுகின்றனர்.

“தோழர் ஹென்றி உங்கட சாப்பாடு பிரமாதம், நல்ல ருசி”.

ஹென்றிக்கு மனத்திருப்தி.

“ஆர் சமைத்தது.”

“நான்தான்.”

“அப்ப உங்கட மனைவி சமைக்கேல்லையா.”

“இல்லை.”

“அவ இஞ்ச இல்லையா? ஊரிலையா?”

“ஊரில இல்லை.”

“ஊரிலயில்லையா?”

“அப்ப அவ தவறிவிட்டாவா?”

“இல்லையில்லை அவ உயிரோடதான் இருக்கவேணும்”. ஹென்றி அவசரமாய்ப் பதில்.

“நீ கலியாணம் கட்டின உன்ர மனைவி இருக்கிறாவென்று உனக்கே தெரியாதெண்டால்.....?”

குட்டி சந்தேகமாய்.

“கல்யாணம் நடந்ததுதான், ஆனால்?”

“என்ன ஆனால்?” குட்டி சந்தேகமாய்.

“நாங்கள் இருவரும் விவாகப் பதிவுப்புத்தகத்தில் கையொப்பம் போட்டம். கையொப்ப மை காய்வதற்கு முன்னமே அவள் போக வேண்டியவனோட போய் சேந்திட்டாள்”. ஹென்றி தோழர் விசனமாய்.

“போகுமுன் அவள் என் இதயத்தை ஆக்கிரமித்து அழியா ஓவியமானாள்”.

“நீ என்ன சொல்கிறாய் தோழர். ஹென்றி எனக்கு ஒண்டும் புரியேல்லையே?”

“எனக்கும்தான்”

“என்ன நடந்தது அவள் உன்னை விரும்பேல்லையா?

அப்போ நீங்கள் இரண்டுபேரும் விவாகப் பதிவுப் புத்தகத்தில் ஏன் கையொப்பம் போட்டியள்? புரியும்படி சொல்லு தோழா''.

“முப்பது வரியங்களுக்கு முன் ஒருநாள் கட்சித் தலைமைக்குழுத் தோழர்கள் மூண்டுபேர் என்னை அழைத்தனர். எனது தொழிற்சங்க செயற்பாடுகள் கட்சி வேலைகள் பற்றி என்னுடன் கலந்துரையாடினர். எனது செயற்பாடுகள் பற்றி பூரண திருப்தி தெரிவித்தனர். நான் புறப்படலாமா என்று அவர்களைக் கேட்டேன்''.

“ஏன் அவசரப்படுகின்றீர் தோழர். இன்னம் கொஞ்ச நேரம் நீர் எங்களுடன் இருக்கலாமே''. கட்சிப் பொதுச் செயலாளர் கூறினார்.

அவர் ஒரு கடிதத்தை என்னிடம் கொடுத்தார்.

“இக் கடிதத்தை நன்றாக ஆறஅமரப் படித்துவிட்டு உமது முடிவைச் சொல்லும். உமது பதில் சாதகமாயுமிருக்கலாம் அல்லது பாதகமாயுமிருக்கலாம். அது நீர் தீர்மானிக்க வேண்டியது. அது உமது உரிமை''. செயலாளர்.

கடிதத்தைப் படித்துமுடித்ததும் நான் சிரிக்கிறன்.

“இது சிரிக்க வேண்டிய விசயம். அவர்கள் வியப்புடன் என்னை நோக்குகின்றனர்.''

“தோழர் ஹென்றி இது உமது வாழ்க்கை சம்பந்தமான விவகாரம். ஆழமாய் யோசித்துக் கூறும்.'' செயலாளர்.

“ஒரு கையொப்பம் போடுறது பாரதூரமான விவகாரமா?''

“இல்லைத் தோழர், அவசரப்படாதையும் நல்லாய் சிந்தித்துப் பதில் சொல்லும்''. கட்சித் தலைவர் அழுத்திச் சொல்கிறார்.

“கட்சித் தலைமை சொல்றதைச் செய்யேலாட்டி, கட்சி உறுப்பினராக இருக்க என்கு என்ன தகைமை? நீங்கள் என்ன நினைச்சாலும் பறவாயில்லை. நான் நிச்சயமாய் இந்த வேலையைச் செய்துமுடிப்பன். இது என்ரை கடமை''. நான் உறுதியுடன் கூறிவிட்டுப் புறப்பட எழுகின்றேன்.

“கொஞ்சம் பொறும்'' நான் அமர்கிறேன்.

ஒரு புகைப்படத்தை செயலாளர் என்னிடம் கொடுக்கின்றார்.

“நீர் அடையாளம் காண்பதற்கு''. செயலாளர்.

அலட்சியமாய்ப் பார்த்துவிட்டு புகைப்படத்தை திருப்பிக் கொடுக்கின்றேன்.

“நான் கட்டாயம் இந்த வேலையைச் செய்து முடிப்பன்”. உறுதி கூறிவிட்டுப் புறப்படுகின்றேன்.

அடுத்த நாள் நண்பகல் பதினொரு மணி, விவாகப்பதிவாளர் நாயகத்தின் அலுவலகம். விவாகப் பதிவாளர் மேசையை அண்டி அவள் எதிர்ப்புறமாய் நான்.

நான் அவளைப் பார்க்கிறேன். வானத்துத் தேவதையாய் அவள். இயற்கைத் தாயின் வளர்ந்த பொலிவும், வனப்பும் பெற்றிருந்த இளமையின் சந்தனச் சிலையாய் அவள்.

என் மனதில் சலனம். நான் என்னை உசார்ப்படுத்தி ஸ்திர நிலைக்கு வருகின்றேன்.

விவாகப்பதிவாளர் கூறுகின்ற வார்த்தைகளை திரும்பக்கூறி விவாகப் பதிவேட்டில் கையொப்பமிடுகின்றேன்.

அவள் கையொப்பமிடுவதற்கு முன் என்னை நிமிர்ந்து பார்க்கிறாள்.

எங்கள் இருவரது விழிகள் முட்டி மோதலில் ஒளிப்பிழம்பு. அந்த ஒளிப்பிழம்பில் எம்மை யுகயுகாந்திரமாய், ஜென்ம ஜென்மங்களாய் பிணைத்த பிரமை எனக்கு. ஆத்ம சமர்ப்பணம் செய்ய வேண்டுமென்ற உணர்வு கணப்பொழுதுதான்.

எனக்குப் பிரமிப்பு.

நான் ஸ்திரநிலை அடைவு. அவள் கையொப்பமிடுகிறாள். என்னை நிமிர்ந்து பார்க்கிறாள்.

அவளது பார்வையில் நன்றியோ, அனுதாபமோ, தாபமோ எதுவுமேயில்லை நானும் அந்த நிலையில்.

நாங்கள் இருவரும் விவாகப் பதிவு அலுவலகத்திலிருந்து வெளியே வருகின்றோம்.

அவளது வருகைக்காகக் காத்திருந்த பிரித்தானியத் தோழர். அவளது ஆத்மார்த்த காதலன் டேவிட் அவளை தனது மோட்டார் காரில் ஏற்றுகின்றான்.

தோழர் டேவிட் அவரது காதலி சந்தியாவை வங்கத்தில் வைத்துத் திருமணம் செய்ய முடியாது.

பிரிட்டிஷ் பிரஜை இந்திய சுதேசிப் பெண்ணைத் திருமணம் செய்ய முடியாது.

இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்பு விவாகப் பதிவுச்சட்டம் அன்று அமுலிலிருந்தது.

இலங்கையில் இப்படிப்பட்ட சட்டமில்லை.

வங்கக் கம்யூனிஸ்ட் கட்சி இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் உதவி கேட்டு தோழர் டேவிட்டையும் அவரது காதலி சந்தியாவை யும் இங்கு அனுப்பி வைத்தது.

தோழி சந்தியாவின் திருமணம் எதுவித சிக்கலுமின்றி நிறைவேறிவிட்டது.

தன் காதலன் டேவிட்டின் மோட்டாரில் தோழி சந்தியா ஏறுகின்றாள்.

மோட்டாரில் ஏறும் பொழுது சந்தியா பக்கவாட்டாக என்னைப் பார்க்கிறாள்.

"நான் திருமணப்பதிவுப் புத்தகத்தில் கையொப்பமிட்டதும் தோழி சந்தியா என்னைப் பார்த்தாளே அதே பார்வைதான் இப்போதும்."

தோழி சந்தியாவின் அந்தப்பார்வை என் இதயத்தில் ஆழமாகப் பதிந்துவிட்டது. அவளது அந்தப் பார்வை எனது அடிமன தளத்தில் அழியா ஓவியமாகி விட்டது.

சந்தியா என்னைக் காதலித்தாளோ என்னவோ எனக்குத் தெரியாது. ஆனால் நான் அவளைக் காதலிக்கவில்லை. காதல் சோகத்தைச் சுமந்து பயித்தியமாய் அலைந்து திரியவுமில்ல நான்.

எனது கட்சித் தோழர்களில் இரண்டொருவர் எனது கல்யாணம் பற்றிப் பிரஸ்தாபித்தார்கள்.

கட்சித் தலைமையிலுள்ள இரண்டொருவர் என்னைத் திருமணம் செய்யும்படி கூறினார்கள்.

கல்யாணம் கட்டுவதில்லை என்ற என் மன உறுதி எள்ளளவும் தளரவில்லை.

முப்பது வருடங்கள் கடந்துவிட்டன. என் திருமண விடயத்தில் அன்றிருந்த அதே நிலைப்பாடுதான் இன்றும்.

"இன்றும் அழியா ஓவியமாய் அவள் என் இதயத்தில் இருக்கின்றாள். என்றென்றும் என் இறுதிவரை அந்தச் சந்தனச் சிலை இருந்துகொண்டேயிருக்கும். இந்த நிலையில் நான் எப்படி வேறு ஒரு பெண்ணைக் கல்யாணம் கட்டமுடியும்?"

“தோழர் ஹென்றி உனது மன உறுதியைப் பாராட்டாமல் எப்படி என்னால் இருக்கமுடியும்?”.

குட்டி இதயபூர்வமாய் ஹென்றியை மெச்சுகின்றார்.

“இப்பாரிய சுமையை உன் இதயத்தில் சுமந்துகொண்டு தொழிற்சங்க கட்சிப்பணிகளில் எப்படி இவ்வளவு தீவிரமாக ஈடுபடமுடிகிறது?”

“அன்புத்தோழர் குட்டி உன் அன்பு மனைவியையும் ஒரே மகளையும் விட்டுவிட்டு நீர் இங்கு வந்து நாற்பத்தைந்து வருடங்களாய் கட்சியின் வளர்ச்சிக்காக பாடுபட்டு உழைக்கின்றீரே உமது இந்த பரித்தியாகத்தை என்னென்று கூறுவது?”

“தோழர் ஹென்றி நான் மாத்திரமல்ல என்னைப்போல ஆயிரமாயிரம் தோழர்கள் மக்களின் விடிவுக்காக, உன்னத இலட்சியத்துக்காக தங்களது வாழ்வைப் பரித்தியாகம் செய்துள்ளார்கள். இன்றும் செய்துகொண்டேயிருக்கின்றார்கள்”.

“தோழர் குட்டி இன்னம் கொஞ்ச நேரத்திலை கூட்டம் துவங்கப் போகுது. வா கெதியாய்ப் போவம்.”

கொழும்பு சிலேவயிலண்ட் யூனியன் பிளேசிலுள்ள தொழிற்சங்க அலுவலகத்தை நோக்கி இருவரும் விரைகின்றனர்.

காற்றில் மிதப்பான உணர்வு அவர்களுக்கு.

இரு நதிகள் சங்கமம்.

★

2014

# அதிர்ச்சி

“சாப்பாட்டு நேரம் பிழை யான நேரத்திலை வந்திட்டமோ.”

வந்த மூவரும் “பசி யோடை வந்திருப்பியள். எனக்கும் பசிதான்.”

முதலிலை எல்லாரும் சாப்பிடுவம். பிறகு எல்லாத்தையும் கதைப்பம்.

சின்னத்தம்பியர் கூறுகின் றார்.

ஏறு நெற்றி. நெற்றியில் தாம்பாளமாய்ச் சந்தனப் பொட்டு. பிளந்து விரிந்த மார்பு. உருண்டு திரண்ட புயங்கள். தீட்சண்ய விழிகள். சாந்த சுபாவம். பேச்சில் கனிவு. அர்த்தபுஷ்டிச் சிரிப்பு.

சாப்பாட்டு மேசையைச் சுற்றி நால்வர்.

சின்னத்தம்பியரும் அவரைச் சந்திக்க வந்த மூவரும் இருப்பு.

"செல்லம் பரிமாறு."

நான்கு பெரிய தலைவாழை இலைகள். செல்லம்மா இலைகளில் கறிவகைகளைப் பரிமாறுகிறாள்.

இண்டைக்கு வெள்ளிக்கிழமை. அதுதான் மரக்கறிச் சாப்பாடு.

"தங்கம் சோற்றை வை." தங்கம்மா சோற்றைப் படைக்கி றாள்."

"ஓஹோ இவர் வள்ளி - தெய்வானையைக் கைப்பிடித்த முருகனோ!

சோறு ரோஸ் நிறம்.

சுடு சோற்றில் நெய் விடுகின்றாள் செல்லம்மா. கம கமவென்ற பசுநெய் வாசம்.

"எங்கடை பசுமாட்டு நெய். மொட்டைக்கறுப்பன் அரிசிச் சோறும் எங்கடை வயலிலை விளைஞ்ச நெல்லும்."

சின்னத்தம்பியர் பெருமையுடன் கூறுகின்றார்.

பசி வயிற்றை விறாண்டுகின்றது.

பசி எண்டால் என்ன எண்டு சின்னத்தம்பியருக்கு நல்லாய்த் தெரியும். சின்ன வயதிலை சின்னதம்பியர் பசியிலை எத்தனை நாட்கள் துடிச்சிருப்பார். சின்னத்தம்பியர் மாத்திரமில்லை அவற்றை ஆச்சி, அக்காமாரெண்டு மூண்டு பேரும் எத்தினையோ நாட்கள் வெறு வயித்தோடை படுத்திருப்பினம்.

நீண்ட பெருமூச்சு விடுகின்றார் சின்னத்தம்பியர்.

அது பழங்கதை.

"எல்லாரும் சாப்பிடுவம். ஏன் தயங்கிறியள்? எப்பிடித் திடீரெண்டு உங்களுக்கு சாப்பாடு சமைச்சதெண்டு யோசிக்கிறியா? நீங்கள் வருவியள் எண்டு உங்களுக்கு சாப்பாடு சமைக்கேல்லை."

"இண்டைக்கு எங்கடை வயலிலை சூடு மிதியல் ஏழெட்டு ஆக்கள் அங்கை வேலை செய்யினை. அவைக்கும் அவையின்டை குடும்பங்களுக்கும் சேத்துத்தான் சமைச்சது."

"நீங்கள் மூண்டு பேர் சாப்பிட்டா போல குறைஞ்சா போகப்போகுது?"

“சரி, எல்லாரும் சாப்பிடுவம்.” கூறிக்கொண்டே சாப்பிடத் தொடங்கினார் சின்னத்தம்பியர். சின்னத்தம்பியர் சாப்பிடுகின்றார். ஆனால் அவரது மனசு எங்கோ தொலைதூரத்துக்குச் சென்று சஞ்சரிக்கின்றது.

ஒரு நாளல்ல. இரண்டு நாளல்ல. எத்தனையோ நாட்கள் ஆச்சி, நான். அக்காமார் எல்லாரும் பட்டினியாய்க் கிடந்தம்.

நாங்கள் சின்ன வயதாயிருக்கும் போதே அப்பு செத்துப் போனார். எங்களுக்கு சொந்தமாய் தோட்ட நிலமில்லை. கூலிப் பிழைப்புத்தான். என்னாலை எந்த வேலையும் செய்யேலாது.

ஆச்சியும் அக்காக்களும்தான் கூலி வேலைக்குப் போவினை. வேலை கிடையாத நாட்களிலை எல்லாரும் பட்டினி.

ஆச்சியாக்கள் வேலைக்குப் போய்விடுவினை.

காலையிலை நாங்கள் எல்லாரும் அரைகுறைச் சாப்பாடுதான். சிலநாளிலை அதுவுமில்லை.

நான் எங்கடை படலையடியிலை நிக்கிற பூவரச மர நிழலிலை இருப்பன்.

வெய்யில் ஏற ஏற எனக்கும் பசி ஏறிக்கொண்டிருக்கும்.

எங்கடை கைஒழுங்கையாலை ஆக்கள் போவதும் வருவதுமாயிருப்பினை. சிலர் தங்கடை தோட்டங்களிலை இருந்து மரவள்ளிக் கிழங்கு சுமையோடை வருவினை.

சில நாளையிலை சின்னையாப் பொடியன் மரவள்ளிக் கிழங்குச் சுமையோடை எங்கடை படலையடியாலை வருவான்.

”தம்பி, தம்பி எனக்கு கடுமையாய் பசிக்குது மோனை. ஒரு கிழங்கு தா மோனை. நான் சுட்டுத் தின்ன. நான் மன்றாடிக் கேப்பன்.”

சிலவேளை அந்தத் தம்பி மனமிரங்கி ஒரு கிழங்கைத் தரும். நான் சுட்டுத் தின்னுவன்.

சின்னத்தங்கச்சி அக்கா ஒரு சில நாளையில் நார்க் கடகத்திலை பனம்பழங்கள் சுமந்துகொண்டுவருவா.

“அக்கா, என்ர ஆசை அக்காவல்லே. எனக்குப் பசிக்கு தெணை. நான் சுட்டுத்தின்ன ஒரு பனங்காய் தாணை. நான் சுட்டுத் தின்ன.”

நான் இரண்டு கைகளையும் நீட்டி அவவை மண்றாடிக் கேட்பன்.

அவ இரக்கப்பட்டு எனக்கு ஒரு பனம்பழத்தை தருவா. நான் சுட்டுத் தின்னுவன்.

சிலவேளை ஏதாவது கிடைக்கும். ஒண்டும் கிடைக்காட்டி அம்மாக்கள் வருமட்டும் பட்டினிதான். நாப்பது வரியங்களாகியும் நான் இதுகளை மறக்கேல்லை.

“தம்பிமாரே, நல்லாய்ச் சாப்பிடுங்கோ. ஒரு நாளும் வயித்துக்கு வஞ்சகம் செய்யக்கூடாது.”

“செல்லம், தங்கம் தம்பியளுக்கு என்ன வேணும் எண்டு பார்த்து வையுங்கோ.”

“சோற்றை அவைக்கு வைத்து மோர் விட்டு ஊறுகாயும் வையுங்கோ. இல்லாட்டி மிளகு ரசம் விடுங்கோ.”

செல்லம் - தங்கம் ஆக்களைப் போலை என்ரை அக்காக் கள் மூண்டு பேரும் நல்ல லட்சணம். அவை ஒவ்வொருத்தராய் வெளியூர்க்காரர்களை கலியாணம் கட்டிக்கொண்டு போச்சினை. இடைக்கிடை எப்பாலும் அவை எங்களை எட்டிப் பார்ப்பினை.

அவையின்ரை பாடும் கஸ்டம்தான்.

என்ரை ஆச்சியாலை வேலை செய்யேலாமல் வந்திட்டுது. அவவுக்கு கைகால் மூட்டு வலி. அப்பம் சுட்டு வித்தா. அதுவும் நட்டத்திலை போச்சுது.

ஒண்டுக்கும் ஏலாத்தன்மையிலை ஆச்சியும் நானும் கடைசியிலை பிழைப்புத்தேடி வன்னிக்கு வந்து சேர்ந்தம்.

முல்லைத்தீவு எங்களுக்குத் தஞ்சம் குடுத்தது. அந்தப் பகுதியில உள்ள ஆக்கள் எங்களுக்குக் கைகுடுத்து உதவிச்சினை. முதலில றோட்டுக் கரையிலை உள்ள ஒரு பெரிய மரத்துக்குக் கீழை ஒரு சின்னக் கொட்டிலைப் போட்டம்.

தொடக்கத்திலை தேத்தண்ணி, வடை, சுண்டல் வித்தம். படிப்படியாய் வியாபாரம் கூடிச்சுது.

முதலிலை வேப்ப மர நிழலிலை களைப்பாறுறதுக்கு வண்டிலை நிப்பாட்டிறவை தேத்தண்ணி குடிச்சினை. பிறகு லொறிகாரர். பஸ்காரரும் தங்கடை வாகனங்களை நிப்பாட்டிச்சினை.

எங்களுக்கு யாவாரம் களைகட்டிச்சுது. இடியப்பம், புட்டு, தோசை எண்டும் பிறகு சோறும் விக்கக்கூடியதாய்க் கடை பெரிசாய் வந்திட்டுது.

வெறும் தேத்தண்ணிக் கடையாய்த் துவங்கினது அமுதசுரபி ஹோட்டலாய் வளந்தது.

துவக்கத்திலிருந்து நான் காசு மேசையிலதான்.

ஒருகட்டத் திலை ஆச்சியாலை வேலை செய்யேலாமல் போச்சுது. நான்தான் முழுப்பொறுப்பும். சமையலுக்கு இரண்டு பேர். சாப்பாடு பரிமாற மூண்டு பேர். காசுமேசையிலை நான்.

எங்கட ஹோட்டலில் இருந்து கல்லெறி தூரத்திலை ஒரு காணிவாங்கி வசதியான ஒரு வீடு போட்டம்.

எங்கடை வீட்டுக்குப் பக்கத்திலை தம்பிமுத்தற்ரை வீடு. அவருக்கு இரண்டு பெண்பிள்ளைகள். தாய் சிறு வயதிலேயே செத்துப்போனா.

தம்பிமுத்தர் கடலில் பிழைப்பு.

அவற்றை மூத்த மகள் செல்லம்மாவைத்தான் கல்யாணம் கட்டினன். ஐஞ்சு வருடமாகியும் எங்களுக்கு குழந்தை கிடைக் கேல்லை.

செல்லம்மாவின்ரை ஆலோசனைப்படி அவளின்ரை தங்கை தங்கம்மாவின்ர முழுச் சம்மதத்தோடை அவளைக் கல்யாணம் கட்டினன்.

தங்கம்மாவுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது.

இரண்டு வரியங்களுக்கு பிறகு செல்லம்மாவுக்கும் ஒரு ஆண் குழந்தை கிடைச்சுது. அதுக்குப் பிறகு எங்களுக்கு நாலு குழந்தைகள் எல்லாமா ஆறு.

அமுதசுரபி வளர்ச்சி கண்டது. அதோடை நான் ஒரு நெல் வயலையும் கொள்முதல் செய்தன்.

நாப்பது பரப்பு. வயலும் வருடாவருடம் நல்ல விளைச்சல் கண்டு வருகுது.

கொழும்பு ஓட்டத்துக்கு இரண்டு லொறிகள். முல்லைத் தீவிலிருந்து மீன், கருவாடு கொழும்புக்கு அந்த லொறியளிலை அனுப்பிவைக்கப்படும்.

கொழும்பிலையிருந்து சீனி, மா போன்ற சாப்பாட்டுச் சாமான் களை இஞ்சை ஏற்றிவரும் அந்த லொரியள்,

பெற்றோல் நிலையத்தை எனக்கும் செல்லம்மாவுக்கும் பிறந்த மகன் செல்லையா நடத்துறான்.

கொழும்பு ஓட்ட லொறியளுக்கு எங்கடை மகன்மார் செல்லத்துரையும் சுப்பிரமணியமும் பொறுப்பு. நான் இப்பவும் அமுதசுரபி மேசையிலை தான்.

திடீரென ஆச்சி இறந்துபோனா. எனக்கு எல்லாமே முடிஞ்ச மாதிரி. ஆனால் என்ரை செல்லமும் தங்கமும் என்னைத் தாங்கிப்பிடிச்சுக் கொண்டு இருக்கினை.

என்ரை பிள்ளையளும் எனக்கு பக்கபலமாயிருக்குதுகள்.

வீட்டு நிர்வாகத்தையும் வயல் பராமரிப்பையும் செல்லமும் தங்கமும் சீராக நடத்தினை.

வயல் மூண்டு போகங்களும் நெற்செய்கை.

ஆறேழு பசுமாடுகளைப் பராமரிக்க ஒரு ஆள். சமையல் வேலைக்கும் வளவைப் பராமரிக்கவும் ஒரு பெண். இவர்கள் செல்லத்தின் மேற்பார்வையில் வயல் வேலைக்கும்.

தங்கத்தின் பொறுப்பில் ஆறு ஏழு பேர் வேலை.

"தம்பியள் சாப்பிட்டு முடிஞ்சுதா? எப்பிடிச் சாப்பாடு?"

சின்ன தம்பியர்.

"சாப்பாடெல்லாம் பிரமாதம் பெரியவரே. இப்படியிருக்கும் எண்டு நர்கள் நினைக்கேல்லை."

மூவரும் ஏககாலத்தில்.

"சரி இப்ப நீங்கள் வந்த விசயத்துக்கு வருவம்."

"எதுக்காக நீங்கள் என்னைப் பாக்க வந்தியள்?"

சின்னத்தம்பியர் அவர்களைக் கரிசனையுடன் கேட்கிறார்,

"எங்கடை ஊருக்கு மேற்குப் பக்கமாய்க் கிடக்கிற காணி யிலை ஒரு பள்ளிக்கூடம் கட்டினம். அந்தக் காணி பத்துப்பரப்பையும் இறந்துபோன தன்ரை கணவன் ஆறுமுகம் ஆசிரியருடைய மனைவி பள்ளிக்கூடம் கட்டிறதுக்கு நன்கொடையாக் குடுத்தது."

"பள்ளிக்கூடத்தக்கு மூண்டு அறையள் கட்டி முடிச்சம்."

"தலைமை ஆசிரியருக்கு ஒரு அறை. மற்ற இரண்டும் சின்ன வகுப்பறைகள்."

"இரண்டு வகுப்புகள் மர நிழலில் நடக்குது. அடுத்தவரியம் ஐந்தாம் வகுப்பு துவங்க இருக்கு. அதுதான் இன்னும் மூண்டு வகுப்பறைகள் கட்ட நினைக்கிறம்."

"மூண்டு புதிய வகுப்பறையள் கட்டிமுடிக்க நிதி சேர்க்க முடிவெடுத்திருக்கு."

"இது நல்ல முயற்சிதான்." சின்னத்தம்பியர் ஆமோதிக்கிறார்.

“நிதி சேர்க்கிறதுக்கு உங்களுக்கிட்டைத்தான் முதல் முதலாய் வந்திருக்கிறம்.”

வந்த மூவரில் ஒருவர் தயங்கித்தயங்கிக் கூறுகின்றார்.

“தம்பியள் எங்கடை வீட்டுக்குக் கிட்ட ஒரு பள்ளிக்கூடம் இருந்தது. அது வேதப் பள்ளிக்கூடம். அங்கை மூண்டாம் வகுப்புவரைதான் இருந்தது. நான் அங்கைதான் படிச்சனான்.”

“அந்தப் பள்ளிக்குடத்திலை இரண்டு வாத்திமார்தான் படிப்பிச்சவை. அவையிரண்டு பேரும் கணவனும் மனைவியும்.”

அந்தப் பள்ளியிலை ஏழைப் பிள்ளையள்தான் படிச்சுதுகள்.

“பெம்பிளைப் பிள்ளையள் கந்தல் அழுக்குச் சட்டைய ளோடை வருங்கள். ஆம்பிளைப் பிள்ளையள் அழுக்குத் துண்டை அரையிலை கட்டிக்கொண்டு வருவினை. மேல்சட்டை இல்லை. அதுக்கு வழி இல்லை.”

“அந்தப் பள்ளிக்குடம் காலை ஒன்பது மணிக்குத்தான் துவங்கும். சில பிள்ளைகள் ஒன்பதரை பத்து மணிக்குத்தான் வருங்கள். ஏன் பிந்தி வாறியள் எண்டு அதுகளைக் கேட்பாரில்லை.”

“அங்கை படிப்பிக்கிற வாத்தியாராக்கடை வீடு பள்ளிகுடத் தோடைதான்.”

“வாத்தியாரம்மா தங்கடை மத்தியானச்சாப்பாடு சமைச்சுப் போட்டு தங்கடை வீட்டு வேலையள் எல்லாம் செய்து முடிச்சுப் போட்டுத்தான் பள்ளிக்கூடத்துக்கு வருவ.”

“பள்ளிக்கூடத்துக்கு கிணறில்லை. பக்கத்து வீட்டுக்காறற்ரை தான் கிணறு.”

“அவை தண்ணி அள்ளி ஊத்தினாத்தான் நாங்க தண்ணி குடிக்க முடியும். இல்லாட்டி நாங்கள் வீட்டை போய்த்தான் தண்ணி குடிக்க வேணும்.”

“எனக்கு படிக்கவேனுமெண்ட ஆசை. ஆனா நான் மூண்டாம் வகுப்புவரை தான் படிக்க முடிஞ்சுது. மூண்டாம் வகுப் புக்கு மேலை படிக்க வேனுமென்டால் தெருவுப் பள்ளிக்கூடத் துக்குத் தான் போக வேணும்.”

“அங்கை போறதுக்கு நல்ல உடுப்பு வேணும்.”

“நல்ல உடுப்பு வாங்க எங்களிட்டை காசில்லை.”

“தெருவுப் பள்ளிக்கூடம் தூரத்திலை இருக்கு.”

“வேதப்பள்ளிக்கூடத்துக்கு ஆச்சி என்னை தன்ரை ஒக்களையிலை தூக்கி வைச்சுக்கொண்டுதான் போறவ.”

“ஆச்சியாலை என்னை தன்ரை இடுப்பிலை தூக்கி வைச்சுக்கொண்டு தூரத்திலை உள்ள தெருவுப் பள்ளிக்கூடத்துக்கு போகேலாது.”

“மூண்டாம் வகுப்போடை என்ரை படிப்பு முடிஞ்சுது. மேலை படிக்க வேணுமெண்டு ஆசை. ஆனா படிக்க முடியேல்லை எண்ட கவலை எனக்கு.”

“சரி தம்பியள், என்னட்டை நீங்கள் வந்த விஷயத்தை இப்ப எனக்கு சொல்லுங்கோ. எதுக்கு வந்தனியள்?”

“உங்களிட்டைத்தான் நாங்கள் முதல் முதல் வந்திருக் கிறம்.”

நிதி சேர்க்கும் பட்டியலை நாங்கள் அவரிடம் குடுக்கிறம்.

அவர் குறைஞ்சது ஒரு பத்தாயிரம் ரூபாவாவது போடுவார் எண்ட எதிர்பார்ப்பு எங்களுக்கு.

அவர் நிதிப் பட்டியலை எங்களிட்டையிருந்து வாங்கேல்லை.

எங்களுக்கு அதிர்ச்சி.

“அப்ப நாங்கள் இவ்வளவு தூரத்திலை இருந்து இவரிட்டை வந்தது. வீண்தானா? நாங்கள் நூற்றைம்பது மைல் தூரத்திலையிருந்து வந்திருக்கிறம். அப்பிடி இருந்தும் நாங்கள் வெறுங்கையோடை திரும்பிப் போக வேணுமோ?

இவரை நம்பி நாங்கள் வந்தது வீணாச்சு.

எங்களுக்குப் பெரும் ஏமாற்றம், கவலை.

போனவரியம் நாலு தொண்டர்கள் எங்கடை ஊரிலை இருந்து இவரிட்டை வந்தினை. அவையள் மத்தியானம் இவற்றை வீட்டிலை பசியாறின பிறகு, என்ன விசயமாய் நீங்கள் என்னட்டை வந்தனியள் எண்டு அவையளைக் கேட்டார்.

எங்கடை ஊரிலை உள்ள பிள்ளையார் கோயிலுக்கு ஒரு புதுக் கோபுரம் கட்டப் போறம். எங்கடை ஊரிலையுள்ள மற்ற மூண்டு கோயில்களின்ரை கோபுரங்களை விட உயரமானதாய் கட்டிறதுக்கு முடிவெடுத்திருக்கிறம். அதுதான் உங்களிட்டை முதல் முதலாய் வந்திருக்கிறம் எண்டு அவை சொல்லிச்சினை.

"தம்பியள், வேறை ஏதாவது நல்ல விசயத்துக்கு நிதி உதவி கேட்டு நீங்கள் வாருங்கோ. நான் தாராளமாய், நிச்சயம் நிதி உதவி செய்யிறன்' எண்டு அவர் சொல்லி வெறுங்கையோடை அவையளைத் திருப்பி அனுப்பிப் போட்டார்."

அதைப்போலை இவர் எங்களுக்கும் சொல்லப்போறாரோ?

"தம்பியள் இப்ப நீங்கள் ஊருக்குப் போங்கோ' எங்களை வெறும் கையோடை திரும்பிப் போகச் சொல்லிறாரே இவர். இவரை நாங்கள் நம்பி வந்ததுதான் பெரும் பிழை. இவர் ஒரு மனிசனா?"

எங்களுக்கு எரிச்சல் ஆத்திரம்.

"நீங்கள் ஊருக்குப் போன கையோடை, உங்கடை பள்ளிக்கூடத்துக்கு தேவையான மூண்டு வகுப்பறையளைக் கட்டி முடிக்கிறதுக்கு எவ்வளவு தொகை பணம் தேவைப்படும்? அதுக்கான ஒரு எஸ்ரிமேற்றை எடுத்து உடனடியாக அனுப்புங்கோ."

என்ன இவர் சொல்லுறார்?

எங்களுக்கு ஒண்டும் புரியேல்லையே.

"அதுக்குத் தேவையான முழுத் தொகைப் பணத்தையும் நான் உடனை உங்களுக்கு நிச்சயமாய் அனுப்பி வைப்பன்."

உறுதியுடன் கூறுகின்றார் சின்னத்தம்பியர்.

இதை எங்களால் நம்ப முடியேல்லை. நாங்கள் தயக்கத் துடன் அவற்றை முகத்தைப் பாக்கிறம்.

"நீங்கள் ஒண்டுக்கும் தயங்க வேண்டாம். நான் சொன்னால் சொன்னதுதான்."

அவர் திடமாய், உறுதியாய்க் கூறுகிறார்.

எங்களுக்குப் பேராச்சரியம்.

"ஆனால் ஒரு நிபந்தனை.""என்ன நிபந்தனை பெரியவரே?"

"நீங்கள். கட்டட வேலையைக் கெதியாய்ச் செய்து முடிக்க வேணும்."

நாங்கள் நிச்சயமாய்ச் செய்து முடிப்பம். ஒப்புக்கொள் கின்றோம்.

"இன்னொரு முக்கிய விசயம்" "என்ன பெரியவரே?" பிள்ளையள் தண்ணி குடிக்க அந்தப் பள்ளிக்கூட வளவுக்கை கிணறு இருக்கா?

“இல்லை. பக்கத்து தோட்டத்திலையுள்ள கிணத்திலைதான் தண்ணியள்ளி ஊத்தவேணும்.” நாங்கள் கூறுகின்றோம்.

“பள்ளிக்கூட வளவுக்கை ஒரு கிணறு வெட்டி கட்டி முடிக்க வேணும். அதுக்கு எவ்வளவு செலவாகும் எண்ட எஸ்ற்றிமேற்றும் எடுக்க வேண்டும். இரண்டு வேலையளையும் செய்து முடிக்க எவ்வளவு பணம் தேவைப்படும் எண்டு இரண்டு எஸ்ற்றிமேற்று களையும் எடுத்து உடனடியாக எனக்கு நீங்கள் அனுப்பி வையுங்கோ. அதுக்கான முழுத் தொகைப் பணத்தையும் நான் உங்களுக்கு உடனை அனுப்பி வைப்பன்.”

அறுதி, உறுதியாகக் கூறுகிறார் சின்னத்தம்பியர்.

பூரண திருப்தியுடன் நாங்கள் புறப்படுகிறோம்.

குழந்தையாய்த் தரையில் தவழ்ந்து வந்து எங்களை வழி அனுப்பி வைக்கின்றார். சின்னத்தம்பியார்

தவழ்ந்து வந்த அவரைப் பார்த்த எங்களுக்கு மலைப்பு.

★

2013

# சிதைவு

படகு மக்கள்.

கூட்டம் கூட்டமாய் வந்து கொண்டிருக்கின்றனர் படகு மக்கள்.

ஆண்கள், பெண்கள், இளைஞர், வயோதிபர், சிறுவர், சிறுமிகள், எல்லோரும் வந்துகொண்டிருக் கின்றனர்.

அவுஸ்திரேலியா புறநகர்ப் பகுதி துங்காபி பூங்காவை நோக்கி அவர்கள் வருகை.

பூங்காவின் தென்புறமாய் திரையிட்டு நிற்கின்றன சவுக்கு மரங்கள்.

சவுக்கு மரங்கள் முனகல்.

பச்சைக்கம்பளப் புல்தரை.

கூட்டம் கூட்டமாய் 'மைக் பை' பறவைகள் மேய்ந்து கொண்டிருக்கின்றன.

பூங்காவின் மேற்குப் புறமாய் சிறுவர் விளையாட்டு மைதானம்.

தென்மேற்குப் புறமாய் இரண்டாம் உலக யுத்தத்தில் மரித்த போர்வீரர் ஞாபகார்த்த மண்டபம் சோகமே உருவாய் சயனிப்பு.

கனகசுந்தரமும் நண்பர்களும் படகு மக்களை பூங்காவிற்கு அழைத்து வருகின்றனர்.

கனகசுந்தரம் புகழ்பெற்ற தமிழ் சமூக சேவையாளர். அவர் அரசு சேவையில் உயர் பதவிப் பிரமுகர் செல்வாக்கு மிகுந்தவர்.

ஆஸ்திரேலிய பாராளுமன்ற சில உறுப்பினர்கள், அரசு அதிகாரிகள் மத்தியில் செல்வாக்கு கனகசுந்தரனாருக்கு.

தமிழ் சமூக அமைப்புகளில் கனகசுந்தரம் உயர் பதவிகளில். அவர் ஆஸ்ரேலியா தமிழ் சமூகத்தின் முன்னேற்றத்திற்காக அல்லும் பகலும் பாடுபட்டு உழைக்கின்றார்.

சிட்னி தமிழ் சமூகத்தில் அவருக்குப் பெரும் மதிப்பும் மரியாதையும். காரணம் அவர்களுக்கு அரசு அதிகாரிகளால் ஏற்படுகின்ற நெருக்கடிகளை கனகசுந்தரம் தனது செல்வாக்கினால் தீர்த்து வைக்கின்றார்.

சிட்னியில் நடைபெறும் தமிழ் கலை இலக்கிய விழாக்கள், தமிழ் புத்தாண்டு, தைப்பொங்கல் விழாக்கள், இசை விழாக்கள் எல்லாவற்றையும் கனகசுந்தரம் நீண்ட காலமாய் முன்னின்று நடத்தி வருகின்றார்.

இலங்கையிலிருந்து படகு மூலமாய் வந்து கொண்டிருக் கின்ற தமிழ் அகதிகள் மீது கனகசுந்தரனாருக்கு திடீர் அக்கறை.

பாவம் எங்கடை தமிழ் மக்கள். அவையள் பயங்கரமான, ஆபத்தான படகு பயணத்தை மேற்கொண்டு இஞ்சை வருகினை. இஞ்சையுள்ள எங்கடை தமிழ் சமூகம் அவையளை ஏற்றுக்கொள் வதில்லை. அவையள் துன்ப துயரங்கள், வேலையில்லாமை, பொருளாதார நெருக்கடிகள் இங்குள்ள தமிழ் சமூகத்தின் புறக்கணிப்பு எல்லாவற்றிற்கும் முகம் கொடுத்து பெரும் துயரைச் சுமந்து கொண்டு நடைப்பிணங்களாய் அலைந்து திரியுதுகள்.

“எங்கடை தமிழ் மக்களை சிட்னி தமிழ் சமூகம் உள்வாங்க அரவணைக்க ஏன் தயங்குது? அவையின்ரை இன்னல்களை அகற்ற நாங்கள் ஏன் முயற்சிக்கக்கூடாது?”

தனது நெருங்கிய நண்பர் நவரத்தினத்தைக் கேட்கிறார் சுந்தரம்.

“சுந்தரம் நீயா இப்பிடிக் கேக்கிறாய்?”

வியப்பாய் நவரத்தினம்.

“ஏன் நான் கேக்கக்கூடாதா?”

“சுந்தரம்”

“இந்தக் கேடுகெட்ட படகுச் சனங்களினாலை சிட்னித் தமிழ் சமூகத்துக்கு பெரும் அவமானமாய்க் கிடக்கு.

“ஏன் அப்படிச் சொல்கிறாய் சுந்தரம்”

“இஞ்சை கள்ளத்தனமாய் நுளையுதுகள். இதுகளுக்குப் படிப்பறிவோ பண்பாடோ எதுவுமே இல்லை. பிச்சைக்காறராய் அலைந்து திரியுதுகள். இதுகள் களவுமெடுக்குதுகள். இதுகளாலை எங்கடை மானம் போகுது. பெரும் தொல்லையாய்க் கிடக்கு.”

“இது இண்டு நேற்றல்ல. சண்டை முடிஞ்ச கையோடை பெருமளவாய் நடக்குது. இதனாலை எங்களுக்கும் ஆஸ்திரேலிய அரசாங்கத்துக்கும் பெரிய தொல்லையாய்க் கிடக்கு.”

“ஆஸ்திரேலிய அரசாங்கம் இதுகளை நாடுகடத்த வேணுமெண்டு நீ அடிக்கடி சொல்லித் திரிஞ்சாய். அப்பிடிப்பட்ட நீ இதுகளை சிட்னி தமிழ் சமூகத்துக்குள் உள்வாங்கவேணுமெண்டு சொல்லிறியே. உனக்கு என்ன நடந்தது? இப்பிடி ஏன் மாறீட்டாய்?”

சுந்தரத்தை நவம் வியப்பாய் கேட்கின்றான்.

“நவம், போன வெள்ளிக்கிழமை நான் சிட்னி முருகன் கோயிலுக்குப் போயிருந்தன். அண்டைக்கு அங்கை நான் நாலஞ்சு படகு மக்களைச் சந்திச்சன்.”

“நீ தானே படகு மக்களை திருப்பி அனுப்ப வேணுமெண்டு சொல்லித் திரிஞ்சாய். அதுகளை உடனடியாய் பொலிசிலை பிடிச்சுக் குடுத்திருக்கலாம் தானே?”

நவம் கிண்டலாய்க் கேட்கின்றான்.

“நவம் அதுகள் கண்ணீரும் கம்பலையுமாய் சொன்ன கதைகளைக் கேட்ட என்ரை நெஞ்சே வெடிச்சு விடும் போலை கிடக்குது. அந்தத் துயரக் கதைகளை, அதுகள் பட்ட அவலங்களைக் கேட்ட நேரத்திலையிருந்து எனக்கு நிம்மதியில்லை. அவையளுக்கு ஏதாவது உதவி செய்ய வேணுமெண்டு அந்தக் கணமே நான் முடிவெடுத்தன்”

“சுந்தரம் உன்ரை மனமாற்றத்தைப் பார்க்கேக்கை வியப்பாய்க் கிடக்கு”

"நவம் அந்த அப்பாவி மக்களுக்கு நாங்கள் உடனடியாய் உதவி செய்ய வேணும்"

"இப்ப நாங்கள் அவையளுக்கு என்ன உதவி செய்ய வேணுமெண்டு நீ நினைக்கிறாய் சுந்தரம்?"

சுந்தரத்துக்கு ஏற்பட்ட மனமாற்றத்தையும் ஏதாவது அந்த மக்களுக்கு செய்ய வேணுமெண்ட தவிப்பையும் பார்க்க நவரத்தினத் துக்கு அவர் மேல் பச்சாதாபமாயிருக்கின்றது.

"முதலிலை நாங்கள் அதுகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதாவது இந்தப் படகு மக்களை இஞ்சையுள்ள தமிழ் சமூகத்திற் குள் உள்வாங்க வேண்டும்."

"எப்பிடி இதைச் செய்யிறது சுந்தரம்?"

"முதலிலை சிட்னியிலும் புறநகர்ப்பகுதியிலும், சிதறி அலைந்து கொண்டு திரியிற படகு மக்களை ஒன்று சேர்க்க வேணும்"

"இந்த மக்களை நாங்கள் எப்பிடி ஒண்டு சேர்க்கிறது?"

"அந்தந்தப் பிரதேசங்களிலை சிதறிக் கிடக்கிறவர்களுடன் தொடர்பு கொண்டு ஒரு நாளைக்கு ஒரு இடத்திலை சந்திக்க ஏற்பாடு செய்ய வேணும்"

"எப்பிடி ஒண்டு சேர்க்கிறது"

"சிட்னி புறநகர்ப்பகுதியிலுள்ள ஒரு பூங்காவில் இந்த மக்களுக்காக ஒரு முழுநாள் ஒன்றுகூடலை ஏற்பாடு செய்ய வேண்டும். அவையளுக்கு காலை, மதிய உணவும், சிற்றுண்டி, குளிர்பானம் எல்லாம் வழங்க வேண்டும்."

"இது எல்லாத்தையும் எப்பிடிச் செய்வது? இதுக்கான பணம்?"

"நவம், சிட்னி புறநகர்ப்பகுதியிலுள்ள எங்கடை தமிழ் உணவகங்களதும் சிற்றுண்டிச்சாலைகளதும் உரிமையாளர்களை நாங்கள் தொடர்பு கொள்வோம். நூற்று ஐம்பது பேருக்கு உணவு, சிற்றுண்டி வகைகள், குளிர்பானம் எல்லாத்தையும் வழங்கும் பொறுப்பை அவர்களை ஏற்றுக்கொள்ளும்படி எங்களால் நிச்சயமாக செய்ய முடியும். அதுக்கு நான் உத்தரவாதம்"

சுந்தரம் உறுதியாய்க் கூறுகின்றார்.

"அதோடை ஒரு கிரிக்கட் ஆட்டத்தையும், ஆடல்பாடல் நிகழ்ச்சிகளையும் நடத்த ஏற்பாடு செய்வோம்"

சுந்தரம் உற்சாகத்துடன் கூறுகின்றார்.

துங்காபி பூங்காவில் நூற்றுக்கணக்கான படகு மக்கள் ஒன்று கூடுகின்றார்கள்.

சகலருக்கும் காலை உணவு தாராளமாக வழங்கப்படுகின் றது.

கிரிக்கற் ஆட்டம் நடைபெறுகின்றது.

சிறுவர் பூங்காவில் பிள்ளைகள் உற்சாகமாக விளையாடிக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆடல் பாடல்களை மக்கள் ஆர்வத்துடன் ஆண்களும் பெண்களும் நிகழ்த்திக் கொண்டிருக்கின்றார்கள்.

சிறிய இடைவேளை.

சிற்றுண்டி வகையும் குளிர்பானமும் வழங்கப்படுகின்றது.

கிரிக்கட் ஆட்டம் உச்சக்கட்டத்தில் ரசிகர்கள் சிலிர்ப்பு.

இடைவேளை.

மதிய உணவு தாராளமாய் வழங்கல். நல்ல சாப்பாடு. அதோடை மதுவும் மக்கள் ரசித்துப் புசிப்பு.

மீண்டும் கிரிக்கட் ஆட்டம் ஆரம்பம்.

மக்கள் தங்களை மறந்து ஆட்டத்தை ரசிக்கின்றனர்.

துங்காபிப் பூங்காவில் மக்கள் மாலை வரை மகிழ்ச்சிக் கடலில்.

மாலை மயக்கம்.

குளிர்காற்று.ஆட்ட முடிவில் பரிசில்கள் வழங்கல்.

சிறுவர்களுக்கு விளையாட்டுப் பொருட்கள் வழங்கல். மக்கள் சுந்தரத்தை புகழ்ந்து பாராட்டல்.

இறுதியில் கிரிக்கட் விளையாட்டு வீரர்களுக்கு வெற்றிக் கிண்ணங்கள் வழங்கல்.

சம்பியன் வெற்றிக் கிண்ணம் செல்வராசன் என்ற துடுப்பாட்ட வீரனுக்கு.

மக்கள் மகிழ்ச்சிக்கடலில் ஆர்ப்பரிப்பு.

சம்பியன் செல்வராசனுக்குப் பக்கத்தில் மோகனசுந்தரம் என்ற மற்றொரு துடுப்பாட்ட வீரன் நிற்பு.

இரு கைகளையும் அகல நீட்டியபடியே சுந்தரம் சம்பியன்களை நோக்கிப் பாய்ந்து செல்கின்றார்.

சம்பியன் செல்வராசனுக்குப் பக்கமாய் நிற்கின்ற மோகனசுந்தரத்தை ஆர்வமாய்க் கட்டித்தழுவுகிறார் கனகசுந்தரம்.

சென்ற வாரம் வந்த படகு மக்களில் துடுப்பாட்ட சம்பியன் செல்வராசனும் ஒருவன்.

அந்த படகு மக்களில் மோகனசுந்தரமும்.

மோகனசுந்தரம் கனகசுந்தரத்தின் உடன் பிறப்பு.

ஆசைத்தம்பி.

★

2014

# தேய்நிலா

"என்ரை பிரேமா எப்ப வந்து சேரப் போறாளோ?"

சமிந்தாவின் மனதில் அவஸ்த்தை.

கட்டுநாயக்கா விமான நிலையம்.

பிரயாணிகளை வழி அனுப்புவதற்கும் வரவேற் பதற் கும் பரபரப்பான மக்கள் கூட்டத் தில் சமிந்தாவும் நானும்.

மூன்று வாரங்களாய் அவளுக்காக அவன் படுகின்ற தவிப்பு சொல்லி மாளாது.

பிரேமா அவனைப் பிரிந்திருப்பது இது தான் முதல் தடவை.

உல்லாசமாய் ஊர் சுற்றிப் பார்ப்பதற்காக தன் நேசத்திற்

குரியவனையும் பாச மகன்களையும் விட்டுவிட்டுச் செல்லவில்லை பிரேமாவதி.

பிரேமாவதியின் தாய் தந்தை தங்கள் நேத்திக்கடனைப் பூர்த்தி செய்வதற்காக தல யாத்திரை சென்றுள்ளனர். வடஇந்தியாவிலுள்ள புத்தகாயாவிற்குத் தான் அவர்கள் யாத்திரை சென்றுள்ளனர்.

தன் வயோதிபப் பெற்றோருக்கு ஊன்றுகோலாய்ச் சென்றுள்ளாள் பிரேமா.

அவளது கணவன் சமிந்த, பிரேமாவை அவன் பெற்றோருடன் மனப்பூர்வமாய் யாத்திரைக்கு அனுப்பி வைத்துள்ளான்.

பிரேமாவதி தற்துணிவுடையவள். எந்தப் பிரச்சினைக்கும் முகம் கொடுக்கும் துணிவும் ஆற்றலுமுடையவள் என்பது கணவன் சமிந்தவிற்கு நன்றாகத் தெரியும்.

ஏகபுத்திரியான பிரேமா தன் பெற்றோரில் எவ்வளவு ஆழமான பாசம் வைத்திருக்கின்றாள் என்பதை நன்றாகப் புரிந்தவன் சமிந்த. அதனால் தான் தன் அன்பு மனைவியை அவர்களுடன் அனுப்பி வைத்துள்ளான்.

சமிந்தவிற்கும் பிரேமாவிற்கும் இரண்டு சுட்டியன்கள். மூத்தவனுக்கு ஐந்து வயது. இரண்டாமவனுக்கு மூன்று வயது.

எங்களுடன் இரண்டு சுட்டியன்களும் நல்ல ஒட்டு.

நித்திரை கொள்ளும் நேரத்தைத்தவிர அவர்கள் மற்றெல்லா நேரமும் எங்கள் வீட்டில் தான்.

எங்களுக்கும் இரு பிள்ளைகள். மூத்தது பெண் ஆறு வயது. இரண்டாவது மகன் மூண்டு வயது. இவர்கள் இருவரும் சமிந்தவின் பிள்ளைகளைப் போல சுட்டிகள். நான்கும் ஒண்டு சேர்ந்து எங்கள் வீட்டையே புரட்டிப் போடுவார்கள்.

எந்த நேரமும் சமிந்தவின் பிள்ளைகள் எங்கள் வீட்டில் தான். ஒரே குதியன், ஆடல்பாடல், பிச்சல் புடுங்கல்கள். நாங்கள் எவரும் தலையிடுவதில்லை. நான்கும் கும்மாளம்.

என் மனைவி மகேசும் அவர்களுடன் ஒன்றிணைவு.

எங்கள் வீடுகள் இரண்டும் அக்கம்பக்கமாய், வாடகை வீடுகள் தான். ஐந்து வருடங்களாய் நாங்கள் அயலவர்கள்.

பிரேமா இல்லாத இந்த மூன்று வாரங்களும் அவர்களது

பிள்ளைகள் இருவரும் நித்திரை நேரத்தைத் தவிர எங்கள் வீட்டில் தான்.

கட்டுநாயக்க விமான நிலையம்.

ஒரே பரபரப்பு.

பிரேமாவதியாக்கள் பிரயாணம் செய்துகொண்டிருக்கின்ற விமானம் எப்போ வந்து சேரப் போகின்றதோ என்ற தவிப்பு சமிந்தவுக்கு.

சென்னையிலிருந்து இலங்கை நோக்கி வந்து கொண்டிருக் கின்ற ஏயர் லங்கா விமானம் ஒரு மணி நேரம் தாமதம் என்ற அறிவித்தல்.

சமிந்தவிற்கு திகைப்பு.

எனக்கும் எரிச்சல்.

எங்கடை அரசாங்கத்தைப் போலவே. அதன் போக்கு வரத்துச் சேவையும் நிர்வாகச் சீர்கேடு.

என் மனதில் புகைச்சல்.

சமிந்தவின் சுட்டியன்கள் இருவரும் குதியன், ஒளிந்து விளையாட்டு.

“தம்பியைக் காணேல்லை”.

சமிந்தவின் மூத்தமகன் தினேஸ் பரபரப்புடன் கூறுகின்றான்.

நாங்கள் அவனைத் தேடல்.

சமிந்தவிற்கு பதட்டம்.

பரபரப்புடன் நாங்கள் அவனைத் தேடுகின்றோம்.

விமான நிலையத்திற்கு வந்து போவோர் அமர்வதற்கு வரிசையாய் ஆசனங்கள்.

ஆசன வரிசையின் தொங்கலில் ஒரு பெண்.

அவள் பின்னால் ஒரு சிறுவன் ஒளித்திருப்பு. அவள் அவனைப் பார்க்கவில்லை.

யாரோ தன் பின்னைால் நெருக்கமாய் நிற்பதை ஸ்பரிசத் தினால் உணர்கின்றாள்.

திடீரென அவள் திரும்பிப் பார்க்கின்றாள்.

ஒரு சிறுவன்.

சிறுவனின் விழிகளில் குறும்புத்தனம்.

அவள் அவனை உற்றுப் பார்க்கின்றாள்.

அவள் பார்வையில் பரிவு.

குறும்பாய் அவன் சிறு முறுவல். அவளும்தான்.

அவள் வாஞ்சையுடன் அவனை வாரி அணைக்கின்றாள்.

அவனுக்கு திகைப்பு.

தன் கைப்பையிலிருந்து ஒரு சொக்லட்டை எடுத்து அவனுக்கு கொடுக்கின்றாள்.

அவன் சொக்லட்டை வாங்கத் தயக்கம்.

அவள் சொக்லட் பேப்பரை உரித்து விட்டு அவன் வாய்க்குள் பாசமாய் வைக்கின்றாள்.

அவன் ருசித்துச் சாப்பிடுகின்றான்.

அவள் அவனை வாஞ்சையுடன் அணைத்து கன்னங்களில் முத்தமிடுகின்றாள்.

மூடியிருக்கின்ற அவளது விழிகளில் கண்ணீர்தாரை.

தன்னுடைய மகன் தன் அணைப்பில் இருக்கின்றான் என்ற பிரமையா அவளுக்கு?

சிறுவனைத் தேடிக்கொண்டிருக்கின்ற என் பார்வையில் இந்தக்காட்சி.

எனக்கு வியப்பு.

இந்த அற்புதக்காட்சியைக் காண்பிப்பதற்கு நான் அவசரமாய் சமிந்தவிடம் விரைகின்றேன்.

நானும் சமிந்தவும் அப்பெண் இருக்கின்ற இடத்தை வந்தடைகின்றோம்.

இருவரும் ஒருவரை ஒருவர் அணைத்தபடி மெய்மறந்திருப்பு.

சமிந்த கிட்டச்சென்று அவர்களை நோக்குகின்றான்.

எங்கோ பார்த்த முகமாய் அவளது முகம்.

உற்றுப் பார்க்கின்றான்.

“நந்தாவின் முகம் போலச் சாயல்”

பிரமை அவனுக்கு.

“நந்தாவேதான்”

சமிந்தவிற்கு அதிர்ச்சி. எனக்கும்தான்.

'நந்தா ஏன் இங்கு?'

எங்கள் இருவர் மனங்களில் கேள்வி.

சமிந்த எமது கலாசார மையத்தில் நூலகராகப் பணிபுரிகின்றான்.

நாங்கள் ஏழுபேர் பணியாளர்கள்.

கருணாரட்ணா சிங்களப் பிரிவுப் பொறுப்பாளர்.

நான் தமிழ் பிரிவுக்கு பொறுப்பாளர்.

சிறந்த சிங்கள, தமிழ் ஏனைய பிறமொழி படங்களை தெரிவு செய்து விலைக்கு வாங்குதல், அவற்றை பாதுகாத்தல், திரையிடுதல், காட்சிகளை ஏற்பாடு செய்தல் போன்றவற்றிற்கு பொறுப்பாளர் சமிந்த. தன் கடமைகளைப் பொறுப்புணர்வுடன் நிறைவேற்றி வருகின்றான் சமிந்த.

சமிந்த கம்பஹா மாவட்டத்திலுள்ள ஒரு குக்கிராமத்தை சேர்ந்தவன். அவன் குடும்பத்தில் ஐந்து உறுப்பினர்கள். தாய், தந்தை, ஒரு அண்ணன், தங்கை, சமிந்த.

அண்ணா கிராம சேவையாளர். தங்கை சீதா ஏ.எல்.படிக்கின்றாள்.

சமிந்த எங்கள் கலாசார மையத்தில் பணி.

சமிந்த குடும்பத்துக்கு நான்கு ஏக்கர் நெல்வயல். ஒரு சிறு காய்கறித் தோட்டம். மாலை வேளைகளிலும் ஓய்வு நாட்களிலும் சமிந்த அண்ணருடன் சேர்ந்து விவசாயம் செய்து வருகின்றான்.

வேலைக்கு வரும் பொழுது சமிந்த இரண்டு சோற்றுப் பொதிகளுடன் வருவான். காலை ஒண்டு, பகல் மற்றொரு பொதியைச் சாப்பிடுவான். சாப்பிடும் பொழுது பக்கத்திலுள்ள வர்களுக்கு பங்கிடுவான்.

வழமையாய் சாப்பாட்டு வேளைகளில் சமிந்தவின் ஒருபக்கம் நான், மறுபக்கம் நந்தா.

நந்தாவதி கண்டி புறநகர் பகுதியைச் சேர்ந்தவள்.

நந்தாவின் குடும்பத்தில் எழுவர். தாய் தந்தையுடன் ஐந்து பெண்கள்.

தந்தை ஓய்வு பெற்ற விமானப்படை அதிகாரி. அவர் எந்த நேரமும் மதுப்போத்திலுடன்.

நந்தாவின் தாயார் ஆங்கில ஆசிரியை. இரண்டு சகோதரிகள் ஆசிரியைகள். மூத்த பெண் கண்டியிலுள்ள பிரபல உல்லாசப் பயண நிறுவனப் பணிப்பாளர். நந்தா எமது மையத்தில் நூலகர்பணி. கடைசித் தங்கை பல்கலைக்கழக இறுதியாண்டு ஆங்கில பட்டதாரி மாணவி.

நந்தா ஏ. எல். சித்தியின் பின் நூலகர் பயிற்சி பெற்றவள். நூலகர் டிப்புளோமா சித்தி. தனது நூலகர் சேவையைத் திறம்படவே செய்து வருகின்றாள்.

சிறந்த சினிமா, கலை இலக்கிய, ஓவிய நூல்களை தெரிவு செய்து கொள்முதல் செய்வதில் வல்லவள். ஆங்கில, சிங்கள புலமை பெற்றவள். தமிழ் நூல்களை தேர்ந்தெடுப்பதில் நான் நந்தாவிற்கு உதவி.

சமிந்த ஒரு சிறந்த திரைப்பட ரசிகன்.

புகழ்பெற்ற சிங்கள, தமிழ், ஆங்கில கலைத் திரைப் படங்களைத் தேர்ந்தெடுப்பதில் வல்லவன்.

எங்கள் கலாச்சார மையத்திற்குத் தேவையான உலகப் புகழ் பெற்ற கலைப் படங்களைத் தேடி கொள்முதல் செய்து களஞ்சியப்படுத்தி வைத்திருக்கின்றான்.

மாதாமாதம் எமது மையத்தின் சார்பில் சிறந்த திரைப் படங்களைக் காட்சிப்படுத்தி இப்படங்கள் சம்பந்தமான உரையாடல் களை நடத்தி அவற்றை ஒலிநாடாவில் பதிவு செய்து களஞ்சியப்படுத்தி வருகின்றான்.

சமிந்தவும் நந்தாவும் நெருங்கிப் பழகி வருகின்றனர். கால கெதியில் அவர்களுக்கிடையில் காதல் மலர்கின்றது.

ஒரு நாள் இக்காதல் பற்றி சமிந்தாவிடம் கேட்டேன். முதலில் அவன் மழுப்பினான். பின்னர் ஒப்புக்கொண்டான்.

நாங்கள் இளம் காதலர்களை வாழ்த்தினோம்.

நந்தாவிற்கு செந்தளிப்பான முகம். எப்பொழுதும் அவள் முகத்தில் மெல்லிய புன்னகை. கனிவான பேச்சு. குழந்தைத்தனம். அவளுக்கு எல்லோரிடமும் நேசபாசத்துடன் பழகும் சுபாவம்.

நந்தாவும் எல்லோருக்கும் செல்லப்பிள்ளை.

அவள் மேல் மத்தியத்தர வர்க்க குடும்பத்தைச் சேர்ந்தவள்.

தந்தைக்கு திமிர்த்தனம். தடிப்பான பேச்சு. அடக்குமுறை மனப்பான்மை. மனைவி பிள்ளைகளை அடக்கி ஒடுக்கி வைத்திருக்கும் சுபாவம் அவருக்கு. நந்தா எப்பொழுதும் தந்தையுடன் நேரடி மோதல். தாயார் அவர்களை கஸ்டப்பட்டு சமரசம் செய்து வருகின்றார்.

நந்தாவின் தாயார் சிறந்த ஆங்கில ஆசிரியை. குடும்பப் பொறுப்பு அவள் தலையில். சீரான நிர்வாகம். நான்கு பெண்பிள்ளைகள். பிள்ளைகளையும் பாசத்துடன் கட்டுப்பாடாக வளர்த்து வருகின்றாள்.

மூன்றாவது மகள் பல்கலைக்கழகத்தில் கலைப்பிரிவு இறுதியாண்டு. ஆங்கிலத்தில் சிறப்பு செய்கின்றாள். தாயாரைப் போல ஒரு சிறந்த ஆசிரியையாவது அவளது லட்சியம்.

இக்காதலர்கள் இருவரும் கண்டபடி பூங்கா, கடற்கரை, சினிமா, ஹோட்டல்கள் எங்கும் சந்திப்பதில்லை. அவர்களுக்கு இவற்றில் நாட்டமில்லை. இருவரும் சுயகட்டுப்பாட்டுடன் பார்வைகள் ஊடாக தங்கள் உணர்வுகளைப் பரிமாறிக் கொள்கின்றனர்.

நந்தாவின் தாயாருடைய சொந்த அண்ணனின் மகன் பாலிதறட்ண.

அண்மையில்தான் அவன் இத்தாலியிலிருந்து வந்தவன்.

திடீரென அவன் நந்தாவைப் பார்க்க எமது மையத்திற்கு வருகின்றான்.

வரும்பொழுது அவன் தோடம்பழம், திராட்சை, அப்பிள் பழங்கள் கொண்டு வருகின்றான்.

இத்தாலியிலிருந்து பெரும் தொகைப் பொருட்கள் அடங்கிய பெரிய பொதியைக் கப்பல் மூலம் இலங்கைக்கு அனுப்பி வைத்ததாகவும், அப்பொதி இங்கு வந்துவிட்டது. ஆனால் சுங்கப்பகுதியினரின் பரிசோதனையின் பின் மூன்று நாட்களுக் கிடையில் அதை தான் பெற்றுவிட முடியும் என்று பாலித நந்தாவுக்குக் கூறுகின்றான்.

நந்தா பாலித சந்திப்பு குறுகிய நேரம்தான்.

பாலித புறப்பாடு.

நான்காவது நாள் அவன் நந்தாவைச் சந்திக்க வருகின்றான்.

பெரிய வெளிநாட்டு சொக்லட் பெட்டி, விலையுயர்ந்த 'சென்ற்' போத்தல், பெரிய ஒப்பனைப் பெட்டி போன்ற பரிசுப் பொருட்களுடன் பாலித வந்திருக்கின்றான்.

நந்தா பரிசுப் பொருட்களை ஏற்றுக்கொள்ள மறுப்பு.

சூடான வாக்குவாதம்.

நந்தா பாலிதவை உடனே வெளியேறும்படி சத்தமாய் கத்துகின்றாள்.

அவன் வெளியேறத் தயக்கம்.

நந்தா திடீரென உள்ளே வருகின்றாள்.

பாலித தயங்கியவனாய் வெளியேறுகின்றான்.

அன்று முழுவதும் நந்தா அனலில் மிதித்தவளாய் குமுறிக் கொண்டிருக்கின்றாள்.

சில நாட்களின் பின்னர் சிங்கள தமிழ் புத்தாண்டு விடுமுறையில் நந்தா பிறந்தகம் செல்கின்றாள்.

விடுமுறை முடிந்தும் அவள் வரவில்லை.

ஒரு வாரம் கழிந்தும் நந்தாவைக் காணவில்லை.

நந்தா இரண்டாவது வார இறுதியில் வருகின்றாள்.

அவளில் பழைய நந்தாவைக் காணவில்லை.

செந்தளிப்பு, கம்பீரம், கலகலப்பு ஏன் உயிர்த்துடிப்பு எதையுமே அவளில் காணவில்லை.

நந்தா நடைப்பிணம்.

இழக்க முடியாத மதிப்புமிக்க பெண்மையை இழந்தவளாய் நந்தா திரும்பி வருகை.

தான் தற்கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டி, நந்தாவை பாலிதவிற்கு பலவந்தமாய் கட்டி வைத்துள்ளாள் அவளது தாய்.

நந்தா திரும்பிவரும் பொழுது பாலிதவின் மனைவியாய்.

எங்களுக்கு மலைப்பு.

நந்தா தன்னாலானமட்டும் போராடினாள்.

தாய் இரு சகோதரிகள் குடிகாரத் தந்தை எல்லோரும் ஒன்று சேர்ந்து நந்தாவை நிர்ப்பந்தித்து பலியாக்கி விட்டார்கள்.

சமிந்த இடிந்து போனான்.

எங்களுக்கும் சொல்லொண்ணா துயர்.

நந்தா நடைப்பிணம்.

நாட்கள் ஓட்டம்.

நந்தாவின் சம்பளத்தில் பெரும் பகுதியை பாலித பறிப்பு.

நீண்ட காலமாய் நந்தா தனது வீட்டிற்கு செல்லவில்லை.

நந்தாவிற்கு இரத்த சோகை.

காரணம் விடுதிச் சாப்பாடுக் குறைபாடு. போசாக்கற்ற உணவு.

நாங்கள் முறை வைத்து வாரத்தில் ஐந்து நாட்களும் மதியச்சாப்பாடு.

பிரசவத்திற்காக நந்தா வீடு செல்கின்றாள்.

நந்தாவிற்கு ஆண்குழந்தை.

பிரசவ லீவு முடிந்தும் நந்தா வேலைக்கு வரவில்லை.

நிர்ப்பந்தத்தில் நந்தாவின் பதவி விலகல் கடிதம் வந்தது.

எங்களுக்கும் பேரதிர்ச்சி.

நந்தாவிற்காகப் பரிதாபப்படுவதைத் தவிர எங்களால் என்ன செய்ய முடியும்?

சமிந்த இடிந்து போனான்.

இந்தத் தாக்கத்திலிருந்து மீள்வதற்கு அவனுக்கு நாங்கள் பக்கபலமாயிருந்தோம்.

சமிந்தவின் பாடசாலைத் தோழியும் விளையாட்டு வீராங்கனையுமான பிரேமாவதியை திருமணம் செய்கின்றான். இருவரது பெற்றோரும் கலந்து பேசி அவர்களது திருமணத்தை முடித்து வைத்தனர்.

திருமணத்திற்கு முன்பே தனக்கும் நந்தாவுக்குமிடையில் ஏற்பட்டிருந்த காதல் விவகாரம் பற்றி சமிந்த பிரேமாவிற்கு விளக்கிக் கூறுகின்றான்.

பிரேமா சமிந்தவின் திறந்த மனதைப் புரிந்துக் கொண்டு அவனைத் திருமணம் செய்ய உளப்பூர்வமாக இணங்குகின்றாள்.

மூன்றாண்டுகளுக்குப் பின் எங்கள் சக ஊழியர் குணதா சவின் தந்தையாரின் மரண வீட்டிற்கு ஏழுபேர் கண்டி கடுகஸ் தோட்டைக்கு செல்கின்றோம்.

நாங்கள் திரும்பும் வழியில் நந்தாவைப் பார்க்கச் செல்கின்றோம்.

சமிந்த எங்களுடன் வரவில்லை.

நாங்கள் மூவர் மாத்திரம் நந்தாவின் வீட்டிற்கு செல்கின்றோம்.

பாலிதவின் சகோதரி வீட்டின் ஒதுக்குப் புறமாய் ஒரு சிறிய ஒத்தாப்பில் நந்தா வசிக்கின்றாள். ஒரு கதிரை கூட போட இடமில்லை.

எங்களுக்கு தேநீர் கூட வழங்க முடியாத நிலை நந்தாவிற்கு.

நந்தாவிற்கு சேரவேண்டிய ஊழியர்சகாயநிதி முப்பத்தையாயிரம் ரூபா காசோலை எம்மிடம்.

அந்தக் காசோலையை இரகசியமாய் நந்தாவிடம் கொடுக்கின்றோம்.

நந்தாவின் விழிகளில் துயரச் சுமை கண்ணீராக ஓடுகின்றது.

நந்தாவின் நான்கு வயதுச் சிறுவன் வியப்புடன் எங்களைப் பார்க்கின்றான்.

அவனுக்கு ஒரு சொக்லட் பெட்டியைக் கொடுக்கின்றோம்.

அவன் முகத்தில் மலர்ச்சி.

பாலித போதைவஸ்திற்கு அடிமை.

அவன் ஒரு வாரமாக வீட்டிற்கு வரவில்லை. எப்போதாவது தான் அவன் வருவான்.

நந்தாவின் இளைய சகோதரி ஆசிரியை.

வீட்டாரின் அனுமதியின்றி அவள் சக ஆசிரியரைக் காதலித்து திருமணம் செய்து கொண்டாள்.

விரக்தியுற்ற நந்தாவின் தாய் நோய்வாய்ப்பட்டு படுத்த படுக்கையாக.

ஆறு மாதங்களில் நந்தாவின் தாயார் மரணம். தந்தையும் இரண்டு வாரங்களில் கண் மூடினார்.

நந்தா தனி மரம்.

தாயார் வீட்டிற்குச் செல்கின்றாள் நந்தா.

இளைய சகோதரி தாயார் வீட்டில்தான்.

தன் மகனை நந்தா இளைய சகோதரியிடம் ஒப்படைக்கின்றாள்.

மூத்த சகோதரியின் உதவியுடன் நந்தா வீட்டுப்பணிப் பெண்ணாக சவுதி செல்ல ஏற்பாடு.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் நந்தா.

அவள் மடியில் சிறுவன்.

நந்தா கொடுத்த சொக்லற்ரை சிறுவன் ரசித்துச் சாப்பிட்டுக் கொண்டிருக்கின்றான்.

அவன் மூஞ்சியெல்லாம் சொக்லற் அப்பிக் கிடக்கின்றது.

நான் அப்பெண்ணிற்கு கிட்டச் சென்று பார்க்கின்றேன்.

பெண் மெய்மறந்திருப்பு.

சிறுவன் சொக்லட்டில் லயித்திருப்பு.

இந்த அற்புதக்காட்சியைக் காட்டுவதற்காக சமிந்தவிடம் விரைகின்றேன்.

சமிந்தவும் நானும் அப்பெண் இருக்கின்ற இடத்திற்கு துரிதமாகச் செல்கின்றோம்.

சமிந்த கிட்டச் சென்று அவர்களை பார்க்கின்றான்.

சமிந்தவின் மகன் தான் அச்சிறுவன்.

சமிந்தவிற்கும் மகிழ்ச்சி.

பெண்ணை உற்று நோக்குகின்றான் சமிந்த.

நந்தாவின் முகம் போல....

நந்தா! நந்தாவே தான்!

சமிந்தவிற்கு அதிர்ச்சி!

அவனால் திறந்த வாய் மூடமுடியவில்லை.

சமிந்த வைத்த கண் வாங்காமல் நந்தாவையே பார்த்துக் கொண்டு நட்ட கட்டையாய் நிற்கின்றான்.

சமிந்தவின் விழிகள் நந்தாவின் முகத்தில் நிலை குத்தி நிற்பு.

நாணம் பளிச்சிடும் அவளது விழிகள்.

பளபளத்த இள நகையின் மென்மை.

முகத்தில் மின்னலிடும் இளமை ஒளி.

எதையுமே நந்தாவின் முகத்தில் சமிந்தவினால் பார்க்க முடியவில்லை.

தலை முடியில் இள நரை.

முகத்தில் தோல் சுருக்கங்கள்.

பள்ளங்களில் பதுங்கியிருக்கும் துயர் சுமந்த விழிகள்.

கொஞ்சங்கூட மங்காத அதிசயிக்கத்தக்க கூரிய பார்வை.

நிராசையின் எல்லையை அடைந்துவிட்ட நந்தாவை சமிந்த பார்த்தபடியே சிலையாய் நிற்கின்றான்.

'நந்தா உனக்கா இந்தக்கதி?'

சமிந்தவின் உள்ளம் குமுறி அலறல். அவனால் வேறு என்னதான் செய்ய முடியும்?

"நந்தா நீ?"

நான் வினயமாய்க் கேட்கின்றேன்.

"நான் சவுதி பயணம்"

கொஞ்சம்கூட தளராத கம்பீரக் குரல்.

"உன்னை வழி அனுப்பி வைக்க உன்னுடன் எவரும் வரவில்லையா?"

"என்னை வழி அனுப்பி வைக்க எனக்கு ஆர் இருக்கினம்?"

கூறியபடியே தன் பயணப் பொதியை இழுத்துக்கொண்டு நடக்கின்றாள் நந்தா.

அவள் இதயத்தில் துயரச் சுமை.

கற்சிலையாய் சமிந்த. சோக சாகரத்தில்.

★

2014

# மீட்சி

இப்ப நான் என்ன செய்ய?

அம்மான் செல்லத்துரை.

சிறுவர் முதல் பெரியோர் வரை செல்லத்துரையாரை அம் மான் என்றுதான் அழைக்கின்ற னர்.

அவர் எல்லோருக்கும் செல்லம். காரணம் அவர் எந்நேரமும் எல்லோருக்கும் எந்தவித உதவியை யும் செய்து வந்துள்ளார்.

இப்ப நான் என்ன செய் வேன்?

எனக்குக் குந்தியிருக்கக் குழிநிலமுமில்லை.

படுத்தெழும்ப ஆறடி நிலமு மில்லை.

கட்டின பெண்சாதியும் போய்ச்சேந்திட்டாள்.

பெத்த பிள்ளையும் அவ ளோடை போட்டுது.

இப்ப நான் தனிக்கட்டை.

இந்தப் பாழாய்ப்போன சண்டையாலைதான் எனக்கு இந்தக் கதி.

அந்தப் பாழ்படும் ஆமிக்காரன்கள் அடிச்ச செல் எங்கடை வீட்டுக்குமேலை விழுந்து வெடிச்சுது.

என்ரை மனிசியும் மூண்டுமாதக் குழந்தையும் சின்னப் பிள்ளையாய் சிந்திச் செத்துப் போச்சுதுகள்.

நானும் என்ரை மனிசியும் எட்டுவரியங்களாய் குழந்தை வேண்டி கந்தசஷ்டி உபவாசமிருந்து பெத்த குழந்தை.

அந்த நேரம் நான் எங்கடை வீட்டிலை நிண்டிருந்தால் எனக்கும் அதே கதிதான்.

எங்கடை வீட்டுக்குப் பக்கத்திலைதான் எங்கடை தென்னந் தோப்பு.

முதல்லை அந்தத் தோப்பை பொடியள் எடுத்தாங்கள் தங்கடை முகாம் போட.

எப்பவும் பொடியள் சனங்கள் நெருக்கமாயிருக்கிற குடியிருப்பு இடங்களிலை தான் தங்கடை முகாம்களைப் போடுவாங்கள். ஏனென்டால் தங்கடை பாதுகாப்புக்காகத்தான்.

எங்கடை தென்னந்தோப்பிலையுள்ள நல்லாய்க் காய்க்கிற வயிரத் தென்னை மரங்களைத் தறிச்சு பதுங்கு குழிகளை போட்டிருந்தார்கள்.

அந்தத் தென்னந் தோப்பிலையிருந்தும் எங்களுக்கு நல்ல வருமானம் கிடைச்சுது.

எங்களுக்குத் தேவையான தேங்காயை எடுத்துக்கொண்டு மிச்சத்தை வித்து நல்ல வருமானம்.

பழுத்து விழுந்த தென்னோலைகளை கிடுகுகள் பின்னி விக்கிறதிலை காசு சம்பாதிச்சம். காய்ந்த தென்னம்பாளை தென்னைமட்டையள் எரிக்க விறகாச்சு. நல்ல வரும்படி.

பொடியள் எல்லாத்திலையும் மண்ணைப் போட்டிட்டான்கள்.

பொடியள் வன்னிக்கு ஓடின கையோடை ஆமிக்காறன் வந்து பொடியள் இருந்த இடங்களை எல்லாம் அபகரிச்சுப் போட்டாங்கள்.

கறையான் புத்தெடுக்க பாம்பு வந்து குடியேறின கதையாச்சு. இப்ப எங்கடை இடத்திலை நாங்கள் அகதியள்.

எங்கிருந்தோ வந்த அந்நியன்கள் எங்கடை சொத்தெல் லாத்தையும் அனுபவிக்கிறாங்கள்.

குளத்தைக் கலக்கி பிராந்திட்டைக் குடுத்த கதைதான்.

இந்த இக்கட்டான நேரத்திலை என்ரை அக்காவின்ரை பிள்ளையள் எனக்குக் கை குடுத்துதுகள்.

அதுகள் எங்கடை வீட்டிலையிருந்து இரண்டு கட்டைக் கங்காலை இருக்குதுகள்.

என்ரை வீட்டிலை இழவு விழுந்த உடனை அக்கான்ரை பிள்ளையள் தான் முதலிலை ஓடிவந்ததுகள்.

என்ரை பெண்சாதி பிள்ளையின்ரை செத்த வீட்டை அதுகள் தான் முன்நிண்டு நடத்தி வைச்சுதுகள். ‘எட்டு’ வைச்சது, அந்தியட்டி, வீட்டுச்சவண்டி எல்லாத்தையும் பொறுப்பேத்து அதுகள்தான் நடத்தி வைச்சுதுகள்.

என்ரை அக்காவின்ரை மூத்த பிள்ளை பாலசிங்கம். அவனுக்கு முப்பது வயது.

அக்காவின் இரண்டாவது மகள் விசாலாட்சி. இருபத்தெட்டு வயது. கடைக்குட்டிக்கு இருபத்தைஞ்சு.

இன்னும் ஒருதரும் கல்யாணம் கட்டேல்லை.

தகப்பன் செல்லத்துரை பொறுப்பில்லாத பிறவி. குடும்பத் திலை எள்ளளவும் அக்கறையில்லை.

அத்தான் செல்லத்துரை ‘கோட்டுப்புலி’. எந்த நாளும் அவர் கோட்டடியிலைதான்.

அவற்றை கையிலை எப்பவும் இரண்டு மூண்டு கிறிமினல், சிவில் வழக்குகள்.

அயலவையோடை எந்த நெரமும் சண்டை. இரண்டு மூண்டு கிறிமினல் வழக்குகள்.

தோட்டக்காணியளை ஒவ்வொன்டாய் வித்து வழக்காடி வந்தார். தோட்டக்காணியள் வித்து முடிய வீடு வளவையும் ஈடுவைச்சார். எல்லாம் வழக்குகளுக்குத்தான்.

ஈடுவைச்ச அந்த வீடு வளவு அவர் தகப்பன்தாய் இருந்தது. கடைசியாய் அக்காவுக்கு சீதனமாய் குடுத்த வீடு வளவையும் ஈடுவைக்க முயன்றார். அக்கா அதுக்கு இடங்குடுக்கேல்லை. அக்கா கண்மூடின கையோடை அதுவும் போய்த் துலைஞ்சிட்டுது.

அவருக்கு சலரோக வியாதி வந்தது. அவர் கவனமெடுக் கேல்லை. நெஞ்சுவலி திடீரென வந்து கண்மூடிட்டார்.

பிள்ளையளைப்பற்றி அவருக்கு எள்ளளவும் கரிசனை யில்லை. அதுகளுக்குக் கலியாணம் காச்சி ஒண்டுமேயில்லை. வயதும் ஏறிக்கொண்டு போகுது.

நாங்கள் இரண்டு மூண்டு இடத்திலை கல்யாணம் பேசி வந்தம்.

அக்காவும் பிள்ளையளும் ஒவ்வொண்டுக்கும் முட்டேலை மயிர் புடுங்கிச்சினை. நாங்கள் கொண்டு வந்த ஒவ்வொரு பகுதியாருக்கும் சொட்டை சொல்லி பேச்சுகளை முறிச்சினை.

தோட்டக்காறனுக்கு என்ரை பிள்ளையளைக் கட்டிக்குடுக்க மாட்டன் எண்டு அக்கா பிடிவாதம்.

தமிழ் வாத்திமாரைக் கட்ட மாட்டன் எண்டு பொடிச்சியள் மறுத்துதுகள்.

கால்சட்டை போட்ட கவுன்மேந்து உத்தியோகம் பாக்கிற உயந்த பதவி மாப்பிளைதான் வேண்டுமெண்டு அதுகள் பிடிவாதம் பிடிச்சுதுகள்.

பொடியனும் பொறுப்பில்லாமல் நடக்கிறான்.

நாங்கள் ஏதாவது சொன்னால் நீங்கள் எங்கடை விசயம் ஒண்டிலும் தலையிடக்கூடாது எண்டு வெட்டி முறிச்சுப் பேசிச்சுதுகள். தகப்பன்தான் குடும்பத்திலை அக்கறையில்லாம அல்லாட்ட விட்டிட்டுப்போட்டார்.

தாயும் குலப் பெருமையைப் பேசிக்கொண்டு நாங்கள் கொண்டு வாற கல்யாணப் பேச்சுக்களை முறிச்சுவந்தா.

நாங்கள் என்ன புறம்போக்குக் குடும்பங்களைச் சேந்தனாங் களே. எங்கடை குலமென்ன கோத்திரமென்ன? எங்கடை சபை பந்தியிலை உக்காரத் தகுதியுள்ளவையின்ரை வீடுகளிலை தான் நாங்கள் சம்பந்தம் வைச்சுக்கொள்ளுவம் எண்டு அக்கா அழுங்குப் பிடியிலைநிண்டா.

இப்பென்ன நடந்துது? அவவும் போச்சேந்திட்டா. குமருகளும் பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்குதுகள்.

சண்டை உக்கிரமாய் நடக்குது.

பொடியள் நிண்டு பிடிக்கேலாமல் வன்னிக்கு ஓடிட்டுதுகள். தங்கடை ராணுவ முகாமைப் பலப்படுத்த எங்கடை வீடுவளவையும் தென்னந்தோட்டத்தையும் ஆமிக்காறன் எடுக்கப் போறானாம்.

எங்கடை வளவுக்கு அருகிலுள்ள நாலு வீடுகளையும் வளவுகளையும் தாங்கள் எடுக்கிறதுக்கு அங்கை இருக்கிற ஆக்களை மூண்டு நாட்களுக்குள் வெளியேறச் சொல்லியிருக் கிறாங்கள்.

நாளைக்கு என்னட்டையும் வர இருக்கிறதாக எங்கடை பக்கத்து வீட்டு ஆறுமுகம் அண்ணரிடம் சொல்லிப்போட்டு போயிருக்கிறாங்கள் ஆமிக்காறர். சண்டை முடிஞ்சு ஆறுவரியங் களாச்சு.

என்ரை மனிசியையும் பிள்ளையையும் பறிகுடுத்திட்டு திரி கிறன்.

“என்ரை வீட்டையும் செல்லடிச்சு தகர்த்துப்போட்டான். இப்பநான் எங்கை போறது?”

மருமகளுக்கு சொன்னன்.

“மாமா உங்கடை வீடுவளவையும் தென்னந்தோப்பையும் ஆமிக்காறன் எடுக்கப் போறானாம். இப்ப நீங்கள் என்ன செய்யப்போறியள்.”

“ஓம் மருமகள் என்ன செய்யிறதெண்டு எனக்கொண்டும் தெரியேல்லை. ”

“நீங்கள் ஏன் யோசிக்கிறியள் மாமா? நீங்கள் எங்களோடை வந்திருக்கிறதுதானே”

மூத்த மருமகள்.

“நீங்கள் வேறை நாங்கள் வேறையா? எல்லாம் ஒரே ரத்தம் தானே”

இரண்டாவது மருமகள்.

“நீங்கள் அல்லல்பட நாங்கள் எப்பிடிப் பார்த்துக் கொண்டிருக்கிறது?”

கடைக்குட்டி.

“நீங்கள் ஒண்டுக்கும் யோசிக்க வேண்டாம். வாங்கோ எங்களோடை.”

மருமகள்.

“நீங்கள் எங்களோடை கட்டாயம் வரவேணும்.”

“உங்களை நிற்கதியாய் விட்டிற்று எங்களாலை எப்படிப் போய் நிம்மதியாய் இருக்கேலும்”

இளையவள் ‘வாங்கோ எங்களோடை?’

எல்லாரும் வற்புறுத்துகின்றனர்.

இளைய மருமகள் என்ரை கையைப் பிடிச்சு இழுக்கின்றாள்.

ஒண்டும் செய்யேலாத நிலைமையில் அவையின்ரை வற்புறுத்தலில் நிர்ப்பந்தத்தால்தான் அவையளோடை போறன்.

அம்மான் செல்லத்துரை மருமக்களுடன் செல்கின்றார். ஒன்றும் செய்யேலாத நிலையில் ஆமிக்காறன் இருக்கிறதுக்கு மேற்குப்புறமாய் இரண்டு கட்டைக்கு அங்காலைதான் அக்காவை யிடை வீடு. பாதுகாப்பான இடம்.

வசதியான வீடு. நாலு அறைகள்.

லண்டனிலையுள்ள பெரியப்பாவின் மகள்தான் இந்த வீட்டைக் கட்டினவள். கடைசி காலத்திலை ஊரோடை வந்து நிம்மதியாய் இருக்க வேணும் எண்ட எண்ணத்தோடைதான் அவை காணி வாங்கி இந்த விசாலமான வீட்டை கட்டினவை.

இந்த சண்டைக்கு பயந்து அவை கனடாவுக்குப் போட்டின.

இனி இஞ்சைவாறேல்லை எண்ட முடிவாலே இந்த வீடு வளவை அக்காவின்ரை பிள்ளையளின்ரை பேருக்கு எழுதிப் போட்டு போட்டின.

விசாலமான வசதியான வீடு.

நான் நம்பிப் போனன். அதுகளை நம்பிப் போனனான்.

பெரிய மூண்டு அறையள். விறாந்தையை அண்டி ஒரு அறை. அதை எனக்கு தந்தினை.

வகை வகையான சாப்பாடு.

நல்ல பராமரிப்பு.

என்ரை நம்பிக்கை வீண்போகேல்லை.

எனக்கு ஏதாவது சின்னத்தலைவலி ஏற்பட்டாலும் அதுகள் தவிக்கிற தவிப்பைப் பார்க்கேலாது.

காலத்தின் கரைவு.

எனக்கு நிம்மதியான வாழ்க்கை. நான் குடுத்துவைச்சவன். எனக்கு மனத்திருப்தி.

மருமக்களிலை எனக்கு அளவு கடந்த நேசம் பாசம்.

"மாமா உங்கடை பதினாறு பரப்பு தோட்டக்காணி மலடுபத்துது. உங்களாலை இனி தோட்டம் செய்யேலாது. ஒருத்தருக்கும் குத்தகைக்கு நம்பிக் குடுக்கேலாது. அதை என்ன செய்யப்போறியள்?"

"தம்பி என்ன செய்யிறதெண்டு எனக்கே தெரியேல்லை."

"அதை நீங்கள் என்ரை பேரிலை மாத்தி எழுதித் தந்தால்..."

"அதை வைச்சுக் கொண்டு நீ என்ன செய்யப் போறாய்?"

அந்தக் காணியை ஈடு வைச்சு அந்தக் காசிலை ஒரு உழவு மிசின் வாங்கினால் எங்கடை தோட்ட நிலத்தை உழுகிறது லேசாயிருக்கும். அதோடை மற்ற தோட்டக்காறற்றை நிலங்களையும் உழுது நல்ல காசு சம்பாதிக்கலாம் எண்டு என்ரை மருமக்கள் எனக்கு ஆசை காட்டிச்சுதுகள்.

"அது நல்ல யோசினை தான். ஏன் காலத்தை வீணடிப்பான். கையோடை விசயத்தை முடிப்பம்."

நான் உற்சாகமாய் சொன்னேன்.

"மாமா உங்களை கடசிக்காலத்திலை ஆர் பாக்கிறது? நாங்கள்தானே. நாங்கள் நல்லாய் உழைச்சு காசு சம்பாதிச்சால் தானே உங்களை நல்லாய் பாக்க முடியும். நாங்களும் நல்லாய் வாழ முடியும். நாங்கள் சொல்லிறது சரிதானே?"

"உங்களுக்கும் வயதாகிக் கொண்டிருக்கு. உங்கடை உடல் நிலையும் தளர்ந்துகொண்டு வருகுது. இனிமேல் உங்கடை காணி பூமியை நாங்கள் போய் பராமரிக்கேலாது. உங்கடை மருமக்கள் நாங்கள் இருக்கிறம். உங்கடை காணி பூமியளை நாங்கள் பராமரிப்பம். உங்களையும் நல்லாய்ப் பார்ப்பம். நீங்கள் உங்கடை காணி பூமியளை எங்கடை பேருக்கு மாத்தி விடுகிறியளா?"

மூண்டு பேரும் வினயமாய் கேட்டுதுகள்.

"உங்களிலை எனக்கு நல்ல நம்பிக்கையிருக்கு. இப்ப நான் என்ரை பெண்சாதி பிள்ளை வீடு வாசல் எல்லாத்தையும் பறிகுடுத்திட்டு நிக்கேக்கை ஆர் உதவ வந்தது? நீங்கள் தானே எனக்கு கைகுடுத்தியள். உங்களை நம்பாமல் நான் வேறை ஆரை நம்பிறது? காலத்தை வீணாக்காமல் என்ரை சொத்தெல்லாத் தையும் உங்கடை பேருக்கு மாத்திற அலுவலை உடனை பாருங்கோ?"

நான் முழுமனசோடை சொன்னன்.

சொத்தெல்லாம் என்ரை மருமக்களின்ர பேருக்கு மாத்தி எழுதியாச்சு.

வங்கியிலை என்ரை பேரிலையுள்ள காசிலை ஒரு உழவு மிசின் வாங்கிச்சினை.

அதாலை என்ரை மருமக்களின் நிலங்களும் வயல் காணி யும் லேசிலை உழுது பண்படுத்தப்படுது. அதோடை மற்றாக் களின்ரை நிலங்களையும் உழுது நல்ல வருமானம் வந்து கொண்டிருக்கு.

என்ரை பத்துப் பரப்பு தோட்ட நிலம், பதினாறு பரப்பு வயல் நிலம், ஒன்பது பரப்பு தென்னந்தோப்பு, ஆறு பரப்பு என்ரை வீடு வளவுக்காணி எல்லாம் என்ரை மருமக்களின்ரை பேரிலை எழுதிக்குடுத்திட்டன்.

எனக்கு நிம்மதி.

சம்சார பந்தத்திலையிருந்து விடுபட்டதான உணர்வு எனக்கு.

எதுவித பொறுப்புமின்றி, நான் கோயில்குளம் எண்டு காலத்தைக் கடத்தினன்.

எனக்கு பெரும் நிம்மதி.

தோட்டச் செய்கையும் வயல் வேலையும் எதுவித பிரச்சினையுமின்றி நடந்து கொண்டிருந்தது.

இந்த வேலைகளுக்கு தேவையான செலவு என்ரை பேரிலை வங்கியிலை இருந்த பணத்தை அப்ப அப்ப நான் எடுத்துக் குடுத்தன்.

தோட்டத்துக்கு தண்ணீர் இறைக்கிறதுக்கு கறன்றிலை ஓடுற மோட்டர் வாங்கிறதுக்கு பணம் குடுத்தன்.

தோட்ட நிலம் கொத்த, தண்ணீர் இறைக்க, மற்ற தோட்ட வேலையள் செய்ய கூலி ஆட்களைப் பிடிக்கவும் பணம் குடுத்தன். வயல் காணி உழவு, பசளை போடுறதுக்கும் பணம் குடுத்தன்.

என்ரை பேரிலை வங்கியிலை கிடந்த பணம் முழுவதும் முடிஞ்சுது. பூஜ்யம்.

நான் கோயில் திருவிழாக்கள், கூத்து, வண்டில் சவாரி எண்டு பொழுதுபோக்கு எனக்கு.

காலம் செல்லச் செல்ல என்ரை மருமக்களின்ரை நடவடிக் கையிலை மாற்றம் ஏற்பட்டு வாறதை நான் அவதானிச்சன். நான் அதை பெரிசாய் கணக்கெடுக்கேல்லை.

என்மேலை அவைக்குள்ள கரிசினை, அக்கறை குறைஞ்சு வாறதை நான் அவதானிச்சன்.

முந்தி என்ன வேலை செய்யிறதென்டாலும் என்னைக் கேட்டுத்தான் செய்வினை.

இப்ப ஒண்டுமே கேக்கிறேல்லை.

அவை தங்கடைபாடு. நான் என்ரைபாடு.

நான் அவைக்கு அந்நியனாப் போட்டன்.

சாப்பாடு கூட நேரத்துக்கு தாறேல்லை.

அவை சாப்பிட்டு மிஞ்சிறதை வேண்டா வெறுப்பாய் தாறதை நான் அவதானிச்சன்.

ஏதாவது கேட்டால் வெடுசுடெண்டு பதில்.

எனக்கேதாவது நோய் நொடி வந்தாலும் காணாதது மாதிரி புறக்கணிப்பு.

கோயில் குளத்துக்குப் போட்டுப் பிந்திவந்தால் அரை குறைச் சாப்பாடு. சிலவேளை ஒண்டுமே இருக்காது. வெறும் வயித்தோடை எத்தினை நாட்கள் நான் பட்டினியாக் கிடந்தன்.

பேச்சல் பறச்சல் கூட குறைவு. வேண்டாப் பெண்டாட்டி கைபட்டால் குற்றம் கால் பட்டால் குற்றம் என்ட நிலை எனக்கு.

எனக்கு என்ன செய்யிற எண்டு தெரியேல்லை.

பொல்லுக்குடுத்து அடிவாங்கினவன் போலை என்ரை நிலை.

பொறுத்துப்பாப்பம். எவ்வளவு தூரம் போகுதெண்டு நான் பொறுமையாயிருந்தன்.

நான் பேசினாலும் அவை பேச்சில்லை. புறக்கணிப்பு.

ஒருநாள் கந்தசாமி கோயில் இராத்திருவிழா முடிய தாமதமாய் போச்சு.

வீட்டுக்கு வந்தால் கதவு பூட்டு.

தட்டிப்பாக்கிறன் கதவு திறப்படேல்லை.

கூப்பிடுகிறன் சத்தமாய். பதிலேதுமில்லை.

பனிக்குளிர்.

வீட்டு விறாந்தையில் படுத்திருந்தன்.

விடிய விடிய தூக்கமில்லை.

விடிஞ்சு ஏழு மணிக்குத்தான் கதவு திறந்தினை.

ஒரு பேச்சுமில்லை.

"திருவிழா முடிய நேரம் போட்டுது. அதுதான் நான் வரப் பிந்திப் போச்சு."

"நீ வரும் வரை நாங்கள் நித்திரை முளிச்சு உனக்காகக் காத்திருக்க வேணுமோ?"

நான் பதில் பேசல்லை.

வெறும் வயிறு புகையுது.

"தேத்தண்ணி....."

அதெல்லாம் முடிஞ்சு போச்சு. இனி ஒண்டும் செய்யேலாது.

"நீ இண்டைக்கு வரமாட்டாய் எண்டு நினச்சம். அதுதான் உனக்கு சாப்பாடு வைக்கேல்லை."

"நேற்று வாங்கின பாணிலை இரண்டு மூண்டு துண்டுகள் கிடக்கு. சம்பல் குழைச்சுத்தாறம் திண்டுதுலை."

மூத்தமருமன்.

மத்தியானச் சாப்பாடும் அரைகுறை.

இரவு கோயிலுக்குப் போட்டு வரப் பிந்திட்டுது.

சாப்பாடில்லை.

வெறுவயித்தோடை பட்டினியாக் கிடந்தன்.

என்ரை தோட்டம் துரவு வீடு வாசல் எல்லாம் போச்சு.

காசும் கரைஞ்சு போச்சு.

வெறுங்கை.

இனி இஞ்சை இருந்து பயனில்லை.

நாலு முழ வேட்டி கிழிஞ்ச சால்வைத் துண்டு.

என்ரை உடுப்புகள் வைப்புச் சொப்புகள் எல்லாத்தையும் விட்டிட்டு தான் வெளிக்கிட்டன்.

வெறுங்கையோடை மனக்கொந்தளிப்புடன் நான் வெளியேறினன்.

இப்பநான் என்ன செய்ய?

எங்கை போறது? இந்தக்கையாலை உழைச்சுத்தான் நான் இவ்வளவு சொத்தையும் சேத்தன்.

எல்லாச் சொத்தையும் அவை என்னை ஏமாத்திப் பறிச்சுப் போட்டினை. போனால் போகட்டும்.

இனி நான் செய்ய வேண்டியதைச் செய்வம்.

என்ரை உடலிலை பலமிருக்கு.

மனதிலை தென்பிருக்கு.

எனக்கு பரீட்சயமானது தோட்ட வேலைதான். இவ்வளவு காலமும் இதைத்தானே செய்து வந்தன். திரும்பவும் துவங்க வேண்டியதுதான்.

நிலம்?

செல்லத்துரை வாத்தியாற்ரை குடும்பம் ஆமிக்குப் பயந்து கனடாவுக்குப் போட்டுது.

செல்லத்துரையற்ரை தோட்ட நிலம் சும்மா கிடந்து வேடை பத்துது.

சண்முகம் செல்லத்துரையற்ரை ஒண்டைவிட்ட தம்பி.

சண்முகம்தான் செல்லதுரையற்ர காணிபூமியளுக்கு பொறுப்பு.

ஆரேன் நல்லாக்கள் வந்தால் அந்தத் தோட்ட நிலத்தைக் குத்தகைக்குக் குடுக்கப் போறன் எண்டு சண்முகம் சொல்லிச்சுது.

இப்பவே நான் சண்முகத்திட்டைப் போறன்.

அம்மான் செல்லத்துரைக்கு உழைக்க வேணும் என்ற வேட்கை.

சண்முகத்திடம் வைராக்கியத்தோடு விரைகின்றான் அம்மான் செல்லத்துரை.

★

2013

# உறவு

## கல்தேக்கு.

கல்தேக்கு மரத்துடன் மரமாய் அவன்.

இன்று நேற்றல்ல. இருபது வருடங்களுக்கு மேலாக கல்தேக் கிற்கும் அவனுக்கும் தொப்புள் கொடி உறவு பாசம்.

தேக்கமரம் வசதி படைத் தவர்களுக்கு உல்லாச வீடுகள் கட்டவும், ஆடம்பரத் தளபாடங்கள் செய்யவும் உதவுகின்றது.

கல்தேக்கு வசதியற்ற வழிப்போக்கர்களுக்கு வெய்யில் காலங்களில் குளிர் நிழல்பரப்பி, சாமரை வீசி, வெப்பம் தணித்து ஆசுவாசப்படுத்துகின்றது.

ஏழைச்சிறுவர்கள் கல்தேக் கங்காய்களை உடைத்து அதனுள் இருக்கின்ற பருப்பை விரும்பி உண்பார்கள்.

காலிவீதியில் அமைந்துள்ள 'குட்டி யாழ்ப்பாணம்' என்று சொல்லப்படுகின்ற வெள்ளவத்தை,

அது கொங்கிறீட் காடு. அந்த கொங்கிறீட் காட்டின் மத்தியில் கிழக்குப்புறமாக சந்தை.

சந்தைக்கு எதிர்ப்புறமாய் முச்சந்தி.

முச்சந்தியின் வடமேற்குப்புறமாய் கம்பீரமாக நிற்கும் கல்தேக்கமரம்.

அந்த கல்தேக்க மரத்தடிதான் அவனது உறைவிடம். அவன் உண்பது உறங்குவது எல்லாம் அந்த கல்தேக்க மரத்தின்கீழ்தான்.

ஓட்டோச் சாரதிகள், பிச்சைக்காரர்கள், வழிப்போக்கர்கள் அனைவரும் அவனை ஆரம்பத்தில் விரோதியாகப் பார்த்தனர். சிலர் விரோதமாகப் பார்த்தனர். காலப் போக்கில் அவனைப் புரிந்து கொண்டனர். அவனை அணைத்தனர்.

அழுக்குச் சாரம், இடுப்பின்மேலே கந்தல் சேட் இரண்டு அழுக்குத் துணிப்பைகள், அவற்றுக்குள்தான் அவனது தேட்டம்.

நீண்ட காலமாய் எண்ணெய் தண்ணி காணாமல் அவனது தலைமுடி காய்ந்து, சிக்காகி, முறுகி இருபக்கங்களிலும் பின்புறமாகவும் புளியங் காய்களாய் தொங்கிக் கொண்டிருக்கின்றன. அடர்த்தியான தாடி மீசை.

குழிவிழுந்த கண்கள், ஆனால் தீட்சண்யமான பார்வை.

அவன் எல்லா நேரத்திலும் எல்லோரிடமும் கை நீட்டுவதில்லை, கேட்பதுமில்லை. யாராவது விரும்பிக்கொடுத்தால் சிலவேளைகளில் ஏற்றுக்கொள்வான். சிலவேளைகளில் ஏற்றுக்கொள்ளமாட்டான். அவன் பாரம்பரிய பிச்சைக்காரனல்ல.

மதிய வேளை உணவு நேரம், கல்தேக்கமரத்தடியில் இருக்கின்ற அவனுக்கு ஒரு சோற்றுப்பார்சலைக் கொடுக்கின்றான் சுமணசிறி என்ற ஓட்டோச் சாரதி. அவன் ஏற்க மறுப்பு.

"இது பிச்சையல்ல. இப்ப நீ எங்களில் ஒருவன் ஏற்றுக்கொள்".

அவன் தயக்கம்.

"இப்ப நாங்களும் நீயும் ஒரே படகில். இந்தா இதை ஏற்றுக்கொள்". சுமணே வற்புறுத்தல்.

தயக்கத்துடன் அவன் சோற்றுப்பார்சலை ஏற்றுக் கொள் கிறான்.

அன்றிலிருந்து அவனுக்கும் அவர்களுக்குமிடையில் அன்னி யோன்னியம். ஆனால் கொடுக்கல் வாங்கல் இல்லை. பகல்வேளைகளில் சவாரி இல்லாத நேரங்களில் அவர்கள் அவனுடன் நாட்டு நடப்புப்பற்றி அலசல்.

அவன் சரளமாக சிங்களம் பேசுவான். அவனுக்கு மும்மொழிப்புலமை. அவர்களுக்கு வியப்பு.

அவன் இடைக்கிடை தமிழ் ஆங்கில செய்திப்பத்திரிகை களிலுள்ள முக்கிய விடயங்களை சிங்கள மொழியில் அவர்களுக்குக் கூறுவான்.

இருதரப்பினருக்குமிடையில் புரிந்துணர்வு. உறவு வளர்ந்தது. பிச்சைக்காரர்களும்கூட.

சந்தியின் தென்புறமாய் பிரபல ஹோட்டல். வடபுறத்தில் பெயர்பெற்ற மதுச்சாலை.

அந்த மதுச்சாலையின் உரிமையாளர் சைமன் என்ற சிங்கள முதலாளி.

ஹோட்டல் முதலாளி நடேசர்.

சிங்கள தமிழ் முதலாளிகள் இருவரும் நெருங்கிய கூட்டு.

ஓட்டோ சாரதிகளையும், அசிங்கம் பிடித்த அவனையும் அவ்விடத்திலிருந்து அகற்றுவதற்கு பல தடவைகள் முயற்சித்தனர் இரு முதலாளிகளும்.

முதலில் முதலாளிகள் இருவரும் பொலிஸை நாடினர்.

பொலிஸ் கைவிரிப்பு.

முதல் முயற்சி தோல்வி. அவர்கள் ஓயவில்லை.

மதியவேளை. கல்தேக்கு மரத்தைத் தறிக்க கோடாலியுடன் ஒருவன் வருகை.

மரத்தின் மையப்பகுதியில் கோடாலி வெட்டு விழுகிறது.

“அடோ. மரத்தை வெட்டாதையடா.”

அவன் கர்ச்சிப்பு.

இரண்டாவது தடவை கோடாரி வெட்டு விழுகின்றது.

அவன் மரத்தைக் கட்டிப்பிடிக்கின்றான். இருவரும் அவனைத் தாக்குகின்றனர்.

அவன் பிடி தளரவில்லை. தாக்குதல் தொடர்கிறது.

ஓட்டோ சாரதிகள் தலையீடு.

கைக்கூலித் தடியன்களின் முயற்சி தோல்வி.

அவர்கள் பின்வாங்கல்.

அர்த்தசாமம். ஆளரவம் இல்லை. அவன் ஆழ்ந்த நித்திரையில்.

மூன்று தடியன்கள் ஈரச்சாக்கால் அவனை மூடி அமத்திப் பிடிப்பு.

அவனால் அசைய முடியவில்லை. ஒருவன் கல்தேக்க மரத்தைத் தறிக்கின்றான்.

மரம் சாய்கிறது.

அடிமரம் வேருடன் அகழ்வு. கல்தேக்கு இருந்த அடையாளமே இல்லை.

அவன். அவ்விடத்திலே சாய்ந்து கிடக்கிறான்.

**விடியல்.**

ஓட்டோச்சாரதிகள், பிச்சைக்காரர்கள், பாதசாரிகள் குவிகின்றனர்.

அனைவருக்கும் அதிர்ச்சி. அவனைத் தட்டி எழுப்பல். அவன் மரமாய்க்கிடப்பு.

நேரம் நகர்வு. பொழுது சாய்வு.

இரவு முழுவதும் பேய் மழை. பெருவெள்ளம்.

விடியல். தென்புடன் எழுகின்றான் அவன். அவன் உடலில் புத்துணர்வு.

அவன் வேகமாய் கடற்கரைக்குப்புறப்பாடு. காலைக்கடன் முடிப்பு புதர் மறைவில்.

கடல்தாயின் மடியில் அவன்.

எவ்வளவு நேரம்தான் சென்றதோ?

பொழுது புலர்வு.

அவன் முச்சந்தியை நோக்கிப் புறப்பாடு. உடலில் புத்துணர்வு. நடையில் வேகம்.

அவன் தோள்களில் இரண்டு துணிப்பைகள். வலது கையில் கல்தேக்கங் கன்று ஒண்டு.

அவன் முச்சந்திக்கு வருகை. சந்தியிலிருந்து கடற்கரைக்கு நோக்கிச் செல்லும் சாலையில் மூன்றாவதாய் ஒரு வீடு. வீட்டிலிருந்து ஒரு கடப்பாரையை அவன் பெறுகின்றான். அசுர வேகத்தில் வேலை. கூடி நின்றவர்களில் சிலர் பங்களிப்பு.

கல்தேக்கங் கன்று கம்பீரமாய் நிற்கின்றது. அதன் நாற்புறமும் தடிகள் நட்டு பாதுகாப்பு வேலி தேக்கங் கன்றுக்கு.

"என்னை அழித்தபின்தான் இந்த தேக்கங் கன்றை அழிக்க முடியும்". அவன் வேட்கையுடன் சபதம்.

காலத்தின் கரைவு. கல்தேக்கு கம்பீரமாய் வளர்ந்தோங்கி சடைத்து கருநிழல் பரப்பி நிற்கிறது.

* * *

நான் ஏ. எல் வகுப்பு முதலாமாண்டில்.

புதிய ஆசிரியர் ஒருவர் வருகை. ஆசிரியர் தன்னை அறிமுகப்படுத்தல்.

தமிழ், வரலாறு, பொருளியல், அரசியல் பாடங்களைக் கற்பிக்கும் பொறுப்பு அவருக்கு.

அவர் ஒவ்வொரு பாடத்தையும் புதிய அணுகு முறையில் கற்பிக்கின்றார்.

நாங்கள் ஆர்வமாய்க் கற்கின்றோம்.

பாரதியையும், கம்பனையும், வள்ளுவனையும், அவர் எமக்குப் புதிய கோணத்தில் கற்பிக்கின்றார்.

"பரீட்சையில் சித்தியடைதல் உங்களின் இலக்காக இருக்க வேண்டும். அதேவேளை உங்களுக்கு அறிவுத் தேடலும் அவசியம்."

அவர் அடிக்கடி கூறுவார்.

ஏ. எல் பரீட்சையில் எனக்கு நான்கு பாடங்களிலும் "ஏ" பெறுபேறு.

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் நான் கலைப்பிரிவில். தமிழ் சிறப்புப் பாடம்.

கொழும்புத் தேசிய நூலகம் எனது அறிவுத் தேடலுக்கு கைகொடுக்கிறது.

பல்கலைக்கழகத்தில் இறுதி ஆண்டில் நான்.

மாணவர் உரிமைப் போராட்டத்தில் நாங்கள் மூவர் முன்னணியில்.

உரிமைப் போராட்டம் சில கருங்காலிகளின் ஒத்துழையாமை யினால் தோல்வி.

போராட்ட முன்னணியில் நின்ற எங்கள் மூவருக்கும் சீட்டுக் கிழிகிறது.

காரணம் வன்முறையைத் தூண்டியதென்ற குற்றச்சாட்டு.

தமிழ் தினசரிப்பத்திரிகை ஒன்றில் இணைந்தேன். அப்பத்திரிகையின் வாரஇதழில் கலை, இலக்கியம், பொருளாதாரம், சமூகம் சார்ந்த கட்டுரைகளை ஆர்வத்துடன் எழுதி வந்தேன்.

பத்திரிகை ஆசிரியர் பாராட்டு.

நாட்டுநடப்பு அரசியல் சம்பந்தமான கட்டுரைகள் எழுதினேன்.

அக் கட்டுரைகளைப்போட ஆசிரியர் மறுப்பு. காரணம் கேட்டேன்.

அரசாங்கத்துக்கு எதிரான கட்டுரைகளைப் பிரசுரித்தால் அரசாங்கத்தை விரோதிக்க வேண்டி வரும். இதனால் அரசாங்கத்தின் விளம்பரங்கள் எமக்குக் கிடைக்காமல் போய்விடும் நிலை ஏற்படும் என்றது பத்திரிகை நிர்வாகம்.

முரண்பாடு முற்றியது. நான் வேலையை ராஜினாமா செய்தேன்.

பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தேன். நல்ல வருமானம். நிம்மதியான வாழ்வு.

எண்பத்து மூன்றில் ஜே. ஆர். ஜெயவர்த்தனா தமிழ் இனக் கலவரத்தை ஆரம்பித்து வெற்றிகரமாக நடாத்தினார்.

தமிழர்கள் சகலதையும் இழந்து பிறந்த மண்ணுக்குத் தப்பி ஓட்டம்.

நானும் யாழ்ப்பாணத்திற்குத் தப்பிச் செல்ல நிர்ப்பந்திக்கப் பட்டேன்.

எங்கள் வீட்டில் என் அண்ணர் குடும்பம். நல்ல வரவேற்பு. என் தந்தை அரசாங்க உயர் அதிகாரி.

எனது தாயார் பெண்கள் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர்.

மூன்று ஆண்டுகளுக்கு முன் மோட்டார் வாகன விபத்தில் இறந்துவிட்டனர் இருவரும்.

அண்ணர் குடும்பம் எதுவித குறையுமின்றி என்னைப் பராமரித்தது.

குறிப்பாக என் அண்ணரின் மனைவி என்மீது அளவுகடந்த பாசம். என்னைத் தனது செல்லப் பிள்ளைகளில் ஒன்றாய் அரவணைத்தார். அவர் எனக்கு எதுவிதகுறையும் விட்டுவைக் கவில்லை.

உணவு உடை கைச்செலவுக்கு பணம் எல்லாம் எனக்கு வாரிவழங்கினார் அன்பு அண்ணி.

எங்கள் வீடு பெரியது விசாலமானது வளவும் சோலை.

என் அக்கா கலியாணம் கட்டி கணவருடன் வெளிநாட்டில். எங்கள் வீடுவளவின் தனது பங்கை அண்ணருக்கும் எனக்கும் எழுதி வைத்துவிட்டுச்சென்றார்.

என் அண்ணரின் மனைவி குடும்பம் பெரிய வர்த்தகக் குடும்பம்.

என் அண்ணியின் தந்தை செல்லையா உணவுப் பொருட்கள் மொத்த வியாபாரி.

அண்ணியின் இரு சகோதரர்களும் தந்தையின் வர்த்தகத்தில் பங்காளிகள்.

அண்ணியும் ஒரு தொழிலை ஆரம்பிக்க ஆர்வமிருப்பதாக எனக்குச் சொன்னா.

என்ன தொழில் என்று ஆர்வத்துடன் கேட்டேன்.

உழவுயந்திரக் கொம்பனியின் கிளையொன்றை யாழ்குடா நாட்டில் தொடங்க தனக்கு ஆர்வமுள்ளதாகக் கூறினா. அது நல்லதுதான் என்று நானும் சொன்னேன்.

எனது உதவி தேவை என சொன்னா. நான் எந்த உதவியும் செய்யத் தயார் என்றேன்.

அத் தொழிலுக்கு பண முதலீடு தேவையில்லை சொத்துப் பிணை கொடுத்தால் போதும் என்று அண்ணி கூறினா.

நானும் அண்ணனும் எதுவித தயக்கமுமின்றி அண்ணியின் பெயருக்கு எமது வீடு வளவை எழுதிக் கொடுத்தோம்.

ஆறு மாதங்களாகியும் உழவுயந்திரக் கொம்பனியின் கிளை யாழ்ப்பாணத்தில் திறக்கப்படவில்லை.

காரணம் கேட்டதற்கு வேறொருவருக்கு அந்தக்கிளையை யாழ்ப்பாணத்தில் தொடங்குவதற்கு கம்பனியால் பொறுப்புக் கொடுக் கப்பட்டு விட்டது என்று அண்ணி கூறினார்.

எங்கள் வீடுவளவைத் தன்னுடைய பெயருக்கு எழுதுவிப் பதற்காகத்தான் அண்ணி இந்த நாடகத்தை நடத்தினா என்று

எனக்குப் பின்னர்தான் புரியவந்தது.

அண்ணனின் மனைவிக்கும் எனக்குமிடையில் முரண்பாடு ஆரம்பம்.

அவனுக்கு சிங்களம் நன்றாகத்தெரியும். அவன் ஆமியின்ரை உளவாளி என்று புலிகள் இயக்கத்திற்கு அண்ணி துப்புக்கொடுத்தாள்.

புலிகள் இயக்கம் என்னைப்பிடித்து ஆறு மாதங்கள் சிறைவைத்து சித்திரவதை செய்தது.

இக்கொடும் சித்திரவதையால் எனக்கு புத்தி பேதலித்தது. வெளியே வந்த நான் பயித்தியக்காரனாய் அலைந்து திரிந்தேன்.

தொண்ணூற்றைந்தில் குடாநாட்டு மக்கள் வெளியேற்றப்பட்டு வன்னிக்கு வந்தனர்.

அவர்களில் நானும் ஒருவன்.

ஏதோ ஒருவிதமாய் நான் கொழும்பு வந்து சேர்ந்தேன்.

* * *

கொழும்பு குட்டி யாழ்ப்பாணம் வெள்ளவத்தை முச்சந்தி.

முச்சந்தியில் தன்னந்தனியாய் தவமிருக்கும் கல்தேக்கமரம்.

கல்தேக்கமரம் அவனுக்கு தஞ்சம் கொடுக்கிறது.

அழுக்கு உடை. நரைத்து சடைத்து வளர்ந்த தாடி மீசை. எண்ணை தண்ணி காணாமல் காய்ந்து முறுகிச் சடைத்து வளர்ந்த தலைமயிர். முறுகித் திரண்ட தலைமயிர் புளியங் காய்களாய் பின்னுக்கும் இருபக்கங்களிலும்.

அன்றிலிருந்து கல்தேக்கமரமும் அவனும் இணைவு அதுதான் அவனுக்குத் தஞ்சம்.

போவோர் வருவோரிடம் அவன் கண்டபடி கையேந்துவதில்லை.

எவர் கொடுத்தாலும் வாங்கும் பிச்சைக்காரனுமல்ல அவன்.

தானுண்டு தன்பாடுண்டு என்றிருக்கின்றான் அவன்.

அவனுக்கென்று சில வாடிக்கையாளர்கள் உண்டு.

அவன் பழைய ஆங்கிலப்பத்திரிகையின் ஒரு துண்டை ஆழ்ந்து வாசித்துக் கொண்டிருக்கின்றான். இதை ஒரு வழிப்போக்கன் அவதானிக்கின்றார்.

"உனக்கு ஆங்கிலம் வாசிக்கத் தெரியுமா?"

வழிப்போக்கர்.

“ஓ நல்லாத்தெரியும்.”

அவன். வியப்பு வழிப்போக்கருக்கு.

“உங்களிடம் பழைய வாரப் பத்திரிகைகள் உண்டா?” அவன்.

“இருக்கு, உனக்கேன் அவை?”

“நான் வாசிக்க, இல்லையில்லை நான் படிக்க.”

ஆர்வத்துடன் அவன்.

அவர் தொடர்ந்து ஆங்கிலப்பத்திரிகைகளை அவனுக்கு கொடுத்து வருகிறார்.

ஓட்டோ சாரதி சுமணவிடமிருந்து சிங்களப் பத்திரிகைகளை யும் இடைக்கிடை வாங்கி வாசிக்கின்றான்.

தமிழ் பத்திரிகைகளையும் வேறு ஒருவரிடமிருந்து வாங்கி ஆர்வத்துடன் படிக்கின்றான்.

அவன் இடைக்கிடை தமிழ் நூல்களையும் இரண்டொரு வரிடமிருந்து பெற்றுப் படித்து வருகின்றான்.

காலத்தின் நகர்வு.

யுத்தம் முடிந்தது.

அரசாங்கத்திற்கு வெற்றி.

உலகத்திலேயே மிகக் கொடிய புலிப்பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டு முற்றாக அழித்தொழிக்கப்பட்டுவிட்டது என்று அரசாங்கம் அடித்துக்கூறி ஆண்டுதோறும் நாடெங்கும் வெற்றி விழாக் கொண்டாடப்பட்டு வருகிறது.

அரசாங்கம் மார்தட்டி நான்காவதாண்டு யுத்த வெற்றி விழாவை கோலாகலமாகக் கொண்டாடி சாதனை படைத்தது.

**நள்ளிரவு.**

வேகமாக வந்த டிரக் வண்டி முச்சந்தியில் நிறுத்தப்படுகிறது. டிரக்கிலிருந்து நான்கு சீருடையினர் குதிக்கின்றனர்.

கல்தேக்கமரத்தடியில் அவன் ஆழ்ந்த தூக்கத்தில். அவனைக் குண்டுத்தூக்காக சீருடையினர் தூக்கி டிரக் வண்டிக்குள் போடுகின்றனர்.

அவன் திடுக்குற்று விழிக்கின்றான்.

“அடோ! ஆரடா நீங்கள்? விடுங்கோடா என்னை.” அவன் உரத்துக் கத்துகின்றான்.

அமத்திப்பிடித்த சீருடையினர் அவனைக் கொடூரமாகத் தாக்குகின்றனர்.

அவன் உரத்துக்கத்தி தன்னை விடுவிக்க உக்கிரமாகப் போராட்டம்.

அவனுடைய வாயையும் கை கால்களையும் கட்டுகின்றனர் சீருடையினர்.

கடைகள் ஓரமாகத் தூங்கிக் கொண்டிருக்கின்ற பிச்சைக் காரர்கள் அவல ஓலங் கேட்டு திடுக்குற்று எழுகின்றனர்.

அவர்களுக்கு திகைப்பு; பதட்டம்.

டிரக் வண்டி வேகமாகப் பறந்து மறைகின்றது.

**விடியல்.**

கல்தேக்கமரத்தடி வெறுமை.

மக்கள் கூடுகின்றனர்.

அவனுக்கு என்ன நடந்தது என்று அறிய அவர்களுக்கு ஆவல்.

ஒருவர் செய்திப் பத்திரிகையுடன் வருகின்றார்.

'புலி உளவுப் பிரிவு உறுப்பினர் தற்கொலை. வெள்ள வத்தைக் கடற்கரையில் பிரேதம்.'

பத்திரிகை தலைப்புச் செய்தி. கொட்டை எழுத்தில்.

மக்கள் பரபரப்பு.

தங்களது நெருங்கியவரைப் பறிகொடுத்துவிட்ட துயரம் ஓட்டோ சாரதிகளுக்கு

கல்தேக்கமரத்தடியில் தேடுவாரற்ற நிலையில் இரண்டு அழுக்குத் துணிப்பைகள்.

சோகமே உருவாய் கல்தேக்கமரம்!

★

2014

# ஆசிரியரின் ஆக்கங்கள்

## சிறுகதைகள்


1. மேடும் பள்ளமும் 1961
2. உதயம் 1978
3. பாதை 1997
4. வேட்கை 2000
5. ஜென்மம் 2005
6. நீர்வை பொன்னையன் சிறுகதைகள் 2007
7. திமிர்வு 2009
8. காலவெள்ளம் 2010
9. நினைவுகள் அழிவதில்லை 2013
10. உறவு 2014
11. லெங்கத்துகம சிங்கள மொழிபெயர்ப்பு (பாசம்) 1914
12. Devils & Demans (பேய்களும் பிசாசுகளும்) 1914

## ஏனைய நூல்கள்

1. உலகத்து நாட்டார் கதைகள் 2001
2. முற்போக்கு இலக்கிய முன்னோடிகள் 2002
3. நாம் ஏன் எழுதுகின்றோம் 2004
4. நினைவலைகள் 2012

## தொகுக்கப்பட்ட நூல்கள்

1. ஈழத்துச் சமகால இலக்கியம் (தொகுதி 1) 1998
2. ஈழத்துச் சமகால இலக்கியம் (தொகுதித 2) 1999
3. முற்போக்கு இலக்கியத்தில் புனைகதைச் சுவடுகள் 2006
4. முற்போக்கு இலக்கியத்தில் கவிதைச் சுவடுகள் 2006
5. ஈழத்து முற்போக்குச் சிறுகதைகள் 2007



“தம்பி என்ரை கடைசிக்காலம் என்ரை சொந்த மண்ணிலைதான். இது நிச்சயம் நடக்கும்.”

“நான் இன்னும் பத்து பதினைஞ்சு வரியங்கள் உயிரோடையிருப்பன். எண்ட உறுதியான நம்பிக்கை எனக்கிருக்கு. அதுக்கிடையிலை இந்த நவீன நரகாசுரரின்ர ஆட்டம் முடிஞ்சுபோம். எங்கடை நாட்டிலை நிச்சயமாய் அமைதியான நிலை ஏற்படும். எங்களிட்டை அடாவடித்தனமாய் பறிக்கப்பட்ட நிலங்கள் நிச்சயமாய் எங்கடை கைக்கு வரத்தான் போகுது.”

“தம்பி நான் நிச்சயமாய் ஊருக்குப் போவன்.”

“நான் எங்கடை ஊருக்குப் போன பிறகு எங்களிட்டை ஒப்படைக் கப்பட்ட நிலங்களை எங்கடை வசாவிளான் மத்திய மகா வித்தி யாலய அபிவிருத்திக்குக் கையளிக்க முடிவெடுத்திட்டன். இஞ்சை அவுஸ்திரேலிய வங்கியிலையுள்ள நிலையான வைப்புப் பணத்தை எடுத்து எங்கடை மகாவித்தியாலய விஞ்ஞான ஆய்வுகூடத்தையும் நூல் நிலையத்தையும் விஸ்தரித்து மேம்படுத்துவதற்கு நன் கொடையாய் குடுக்கப்போறன். இதுக்கு வழிவகுக்க என்ரை மரண சாசனத்தை (உயில்) செல்லக்கண்டற்ரை உதவியோடை தயாரித்து ஆஸ்திரேலியாவிலும் இலங்கையிலும் பதிஞ்சு போட்டன். இப்ப எனக்கு பெரும் மனநிம்மதி.”



Printed by : RST ENTERPRISES (PVT) LTD. 0777 878772